

# காற்றுவெளி

ஆடி - 2024

கலை இலக்கிய இதழ்

# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

ஆடி - 2024

படைப்புக்கள் அனுப்ப :
mullaiamuthan1954@gmail.com
mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :

R.Mahendran,
34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk

- சந்தா : 12 இதழ்களுக்கு 10 பவுண்ட்
- R.Mahendran,

A/C No: 90759821
Sort.Code: 20-67-88,
SWIFTBIC BUKBGB22
IBAN GB80 BUKB 2067 8890 7598 21
BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


வணக்கம்,

யாவரும் நலமா?

காற்றுவெளி ஆடி மின்னிதழ்(2024)தங்களின் பார்வைக்கு வருகிறது. கடந்த மாத இதழ் நமது அமர எழுத்தாளர்.எஸ்.அகஸ்தியர் அவர்களின் சிறப்பிதழாக வந்தமை குறிப்பிடத்தக்கது.அதே சமகாலத்தில் அவரின் சுவடுகள் நூலும் அவர்களின் குடும்பத்தினரால் வெளியீடு கண்டுள்ளது.நமது எழுத்தாளர் எஸ் பொ என அனைவராலும் அழைக்கப்படுகின்ற எஸ். பொன்னுத்துரை அவர்களின் ஞாபகார்த்த சிறப்பிதழாக வரவும் உள்ளது.

விரைவில்,

இங்கிலாந்து வாழ் படைப்பாளர்களின் படைப்புகளைத்தாங்கிய சிறப்பிதழ் ஒன்றும் வரவுள்ளது எனும் தகவலையும் பலருக்கும் அறியத்தந்துமுள்ளோம். இச் சிறப்பிதழ்கள் தேவைதானா என்கிற கேள்விகளும் எம் முன்னே வைக்கப்படுகின்றன. இவை காலத்தின் தேவையும் கூட. அவர்களை மறந்து நமது ஈழத்து படைப்புலகம் சார்ந்து எழுதிவிடமுடியாது.

இலக்கியப்பூக்கள் எனும் கட்டுரைகளின் தொகுப்பாக இரண்டு தொகுப்புக்கள் அச்சில் வந்தமை தாங்கள் அறிந்ததே. அதன் மூன்றாவது தொகுப்பையும் வெளிக்கொண்டுவர காற்றுவெளி முயன்றுவருகிறது. பதிப்பகங்கள் மீதான அச்சமே வெளியீடுகளின் தாமத்திற்கான காரணமும் கூட. இலவசமாக பெறுவதிலும்,தாங்களே ஆய்வாளர்கள் என கருதுவோரும் இலவசங்களையே நம்பியிருப்பதும் நம்மைப்போன்று கனவுகளுடன் நூல்களை வெளியிட நினைப்பவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுள் ஒன்று.அதுவும் புலம்பெயர்நாடுகளில் இலவச அச்சு ஊடகங்களின் பெருக்கம் விளம்பரங்களை நம்பியிருக்காத நம்மைப் போன்ற இதழாளர்கள் நொந்து போவதும், புலம்பலுடன் வாழ்வதும் கண்கூடு. காற்றுவெளி மின்னிதழாக மாறியதும் அங்கிருந்துதான். ஆனாலும் அச்சிதழின் சுகானுபவமே தனி. எதிர்காலம் மீதான நம்பிக்கை காற்றுவெளிக்கு இன்னமும் உண்டு.

இணைய,அச்சிதழ்களின் வருகை அதிகமாகியதைப் போலவே படைப்பாளர்களின் பெருக்கமும் அதிகமே. அவர்களின் கல்வி, புலப்பெயர்வு,வாழ்வியல் அனுபவம், எழுத்தின் மீதான காதல், வயதின் வீச்சு இப்படி பலவற்றைச் சொல்லிப்போகலாம். எல்லாவற்றுள்ளும் எவை கனதியானவை, எவை காலத்தை வென்று நிற்கப்போகிறவை என்பதை காலம்தான் தீர்மானிக்கும். நாமல்ல.

ஆயிரம் பூக்கள் மலர வேண்டும்.

யுத்தம்,நோய் அச்சுறுதல்களிலிருந்து மக்கள் சுபீட்சமாக வாழவும்,வல்லாதிக்க சக்திகளிடமிருந்து போர் அச்சுறுத்தல் இன்றி மக்களும்,போராடும் இனங்களும் சுதந்திரமாகவும்,சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தங்களின் இருப்பை தக்கவைத்துக்கொள்ளவும் அனைவருடனும் காற்றுவெளியும் பிரார்த்திக்கிறது.

நட்புடன்,

சோபா

*01/07/2024*

# படைப்பாளர்கள்

**கவிதைகள்**

1. இளையவன் சிவா
2. DR.ஜலீலா முஸம்மில்(ஏறாவூர்)
3. மரீனா இல்யாஸ் ஷாபீ(நியூஸிலாந்து)
4. முஷ்தாக் அஹ்மத்(தோஹா)
5. ஜமீல்(இலங்கை)
6. த. ரவீந்திரன்
7. புதுகை ஆதீரா
8. சு.திருப்பரங்குன்றன்(இலண்டன்)
9. கவிஞர் சாய்சக்தி சர்வி (பொள்ளாச்சி)
10. பெ.விஜயலட்சுமி(காஞ்சிபுரம்)
11. சரண்யா ரவி(கோவை)
12. கோ. தனுசன்(மட்டக்களப்பு)
13. நேசன் மகதி
14. கண்ணன்(தாரமங்கலம்)
15. மலர் மகள்
16. சந்திரா மனோகரன்
17. மகிழை.சிவகார்த்தி
18. மு.முபாரக்
19. சி முத்தரசன் (அரியலூர்)
20. ஞா.சத்தீஸ்வரன்
21. க. புனிதன்
22. வி.அபிவர்ணா(முல்லைத்தீவு)
23. அருணோதயா
24. செ.நாகநந்தினி
25. கவிஞர் மாலதி இராமலிங்கம்
26. ஸ்ரீவி.முத்துவேல் (துபாய்)
27. ஐ.தர்மசிங்(நாகர்கோவில்)
28. பிரபா அன்பு
29. சே கார்கவி கார்த்திக்
30. கோவை ஆனந்தன்

**சிறுகதைகள்**

1. சுந்தரிமணியன்(புதூர்)
2. ஜூனியர் தேஜ்
3. கமலினிகதிர்(சுவிற்சர்லாந்து)
4. கவிஜி
5. இரா.வெங்கடேஸ் குமார்(மதுரை)
6. நௌஷாத் கான்.லி
7. ரகுநாத் வ (மதுரை)

**மொழிபெயர்ப்பு**


1. தங்கேஸ்
2. ஆசு சுப்பிரமணியன் (ஆசு)தமிழிலிருந்து ஆங்கிலத்தில்:லதா ராமகிருஷ்ணன்
3. ஷைலஜா காங்கூலி (ஆங்கிலம்)தமிழில்:ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா(நொய்டா)

**கட்டுரைகள்**

1. இரா.சீ.பாலகுமார்.M A

**ஐந்து நிமிட திரைப்பிரதி:**

1. கே.எஸ்.சுதாகர்(அவுஸ்திரேலியா)



# இளையவன் சிவா கவிதைகள்

## பெற்றோர்

மற்றவரின் பார்வைகளைப் புறந்தள்ளி
உறவினரின் உதாசீனத்தை உரமாக்கி
கற்றோரின் அனுபவங்களை கணக்கில் வைத்து
முற்றோதும் பொழுதெல்லாம் முன்னேறும்
வழியமைத்து
சற்றேனும் பிசகாமல் உழைப்பில் நின்று
பற்றெல்லாம் பிள்ளையென்றே பாதை பிடித்து
சிற்பமென்று எம்மைச் செதுக்கத் தம்மை
உளியாக்கி
அற்பமென உலகைப் பற்றி அச்சம் தவிர்த்து
அற்புதங்கள் பிறந்திடவே எமை ஆளாக்கி
பெற்றோராய் வாழ்ந்து வழியமைத்தவர்களின்
பொற்பாதங்களுக்கு புகழ் மாலைகளே
வணக்கங்கள்.

ஃ

## காலச் சக்கரத்தில்

உயரப் பறந்த ஊர்க்குருவிக்கு
மேகத்தின் மீதேறி விளையாட ஆசை
வலிக்கும் இறகின் வலிமை கண்டு
வண்ணம் சேர்த்த எண்ணம் நிறைத்து
வானில் துவங்கியது நெடியதோர் பயணம்.
கிளைகள் நிரப்பிய காற்றைக் கொடுத்து
மரங்கள் வாழ்த்தி அனுப்பின.
வாசம் வீசி பரப்பை நிரப்பும்
வண்ணம் நிறைந்த மலர்கள் தாலாட்டி
பறவையின் வேகத்திற்கு பாதை கூட்டின.
மழையைப் பொழிந்தும் வெயிலை விரித்தும்
வானம் கொடுத்த வரவேற்பில்
தன்னை மறந்த குருவிக்கு
வெண்மையின் மீதான விருப்பம் கூடிட
புயல் காற்றிலும் தொடர்கிறது பயணம்.
கனவை ஈடேற்ற காலமும் முயற்சியும்
கண்களாய் மாறிட
நம்பிக்கையின் தடத்தில் நடைபோடும்
மனிதனின் வாழ்வைப் போன்றதே
மேகத்தைக் காணும் குருவியின் பித்து.

DR ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# ஹைக்கூ கவிதைகள்

பரந்த வானம்
பரவும் காற்று
நிறையும் சிறகுகளின் சுவடுகள்

❦

வீரப்பயிற்சி
இராணுவ சேனை
எறும்புப் புற்று

❦

எப்போதும் உற்சாகம்
துள்ளிக் குதிக்கிறது
மலையருவி

❦

வழிவழியாக
திருட்டுப்பழி
தீராத காகம்

❦

பெயர் வைத்தது யாரோ?
காதில் வைத்து பேசும்
கைப்பேசிக்கு

❦

தீமூட்டியது யாரோ?
திகுதிகுவென எரிகிறது
அந்தி வானம்

❦

இராக்கனவு
கலைந்து போகும்
மனித வாழ்வு

❦

இன்னும் கொஞ்ச நேரந்தான்
பேருந்து நெருங்கி விடும்
பூக்கட்டும் பூக்காரி

❦

எழுந்து அடங்கும் புழுதி
தடுமாறும் எறும்பு வரிசை
அறியும் யானை வருகை

❦

உதிர்ந்த சருகுகளால்
மீண்டும் மரமாகிறது
தரையில் மர நிழல்

❦

கவியும் இரவு
அணிந்து கொள்கிறது
தீப மாலை

❦

நிலையான பாசம்
நிலைகுலைந்து விடும்
பிரச்சினைகள் யாவும்.



# பீதி

சுந்தரிமணியன், புதூர்

சிவந்து கிடந்த வானத்தில் மேகமூட்டங்களின் நடுவே பறந்து போகும் பறவைகளின் கீச்சொலிகளுக்கு மத்தியில் என் மனம் அந்த ரைஸ்மில்லைக் கடந்து போகையில் 'திக் திக்' என்றிருந்தது. ரைஸ்மில்லிலிருந்து வரும் அரவைஒலி என் காதுகளைக் குடைந்து செவிப்பறையின் அறைகளில் சென்று சிலிர்ப்பை உண்டு செய்தது.

பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்குச் செல்லும் எனக்கு, பள்ளிக்கூடம் முடிந்ததும் சிறைக்குள்ளிருந்து வெளிவரும் கைதியின் மகிழ்ச்சி போல மனம் மகிழ்ந்தாலும் இந்த ரைஸ்மில்லைக் கடந்து போகையில் ஏற்படும் பயம் மனதிலிருந்து போக வெகுநேரம் ஆகிறது. வீட்டில் அம்மா இன்றைக்கு என்ன தீம்பண்டம் வைத்திருக்கிறார்களோ தெரியவில்லை. வீட்டிற்குப் போனதும் பைக்கட்டை வீசிவிட்டு, முகம், கை, கால் கழுவி காபி குடிக்கவேண்டும். பிறகுதான் எல்லாமே. இப்பொழுதெல்லாம் படி படியென்று பிள்ளைகளைப் பாடாய் படுத்துகிறார்கள். நான் அப்படி வளரவில்லை. அப்பாவும் அம்மாவும் படிப்பதற்கு என்னைக் கட்டாயப்படுத்தியதில்லை. விருப்பமிருந்தால் நானாக பைக்கட்டை எடுத்துப் படிக்க அமருவேன். இல்லையென்றால் ஒரே விளையாட்டுதான். நேரமானதும் இரவு சாப்பிட்டுவிட்டு நிம்மதியான உறக்கம். இப்படித்தான் என் பள்ளிப் பருவ காலங்கள் கழிந்தன.

மறுநாள் காலை பாட்டு டீச்சர் சொல்லிக் கொடுத்த "அலைபாயுதே கண்ணா என்மனம் அலைபாயுதே" என்ற பாடலை பாடிக்கொண்டே புத்தகங்களைப் பையில் அடுக்கினேன். அம்மா வேகமாக வந்து,

"மலர் இன்னிக்கு சாயந்தரம் ரைஸ்மில்லுக்குப் போய் கொஞ்சம் அரிசி தாரேன் அரைச்சிட்டு வர்றியா" என்றாள்.

"போம்மா. என்னால முடியாது. அண்ணனை அரைச்சிட்டு வரச்சொல்லு. அவன் சும்மாதான இருக்கான்" என்றேன். அண்ணன் உடனே,

"நீ என்னடி பண்ற. வெட்டி முறிக்கிறியா. நீ போய்ட்டு வரவேண்டியதுதான?" என்றான்.

"என்னால முடியாது. எனக்கு நிறைய வேலையிருக்கு. வீடு கூட்டணும். பாடம் எழுதணும். அண்ணனைப் போகச்சொல்லும்மா" என்றேன்.

"அம்மா அவ சும்மா சொல்றா. நேத்து விளையாடிட்டு தான இருந்தா. அவளப் போகச் சொல்லு" என்றான் அண்ணன். அம்மா,

"டேய் அவ சின்னப்பொண்ணு. நீ போய்ட்டு வாயேண்டா" என்றாள்.

"அம்மாவே சொல்லிட்டாங்க. நீதான் போகணும்" என்றேன் நான்.

"யார் சொன்னாலும் என்னால போகமுடியாது. நான் பத்தாம் வகுப்பு. படிக்கிறதுக்கு நிறைய இருக்கு" என்றான் அண்ணன்.

''போடா. நான் போக முடியாது'' என்று சொல்லிவிட்டு கையில் அகப்பட்டால் தலையில் குட்டுவான் என்பதால் பைக்கட்டை எடுத்துக்கொண்டு வேகமாக பள்ளிக்கூடத்துக்கு ஓடினேன். இன்னொரு பக்கம் மனம் சாயந்தரம் அம்மா ரைஸ்மில்லுக்கு நம்மைத்தான் அனுப்புவாளோ, ஐயையோ அந்தச் சத்தத்தைக் கேட்டாலே மனது என்னவோ செய்கிறதே? எப்படிச் சமாளிப்பது என்று நினைத்துக் கொண்டே நடந்தேன்.

பள்ளிக்கூட வாசலை மிதித்ததும் கமலா டீச்சரின் முகம் கண்முன் வந்து சென்றது. வரலாறு வகுப்பு வந்தாலே பாதிப்பேருக்கு பயத்தில் பீதிதான். இந்தக் கமலா டீச்சர் மட்டும் ஏன் பிள்ளைகள இப்படி அரட்டுறாங்க? இவங்களுக்கு பிள்ளையே கிடையாதா? இவங்க பிள்ளையையும் இப்படித்தான் அரட்டுவாங்களா? ஐயோ பாவம் என்று நினைத்துக் கொண்டே பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்தேன். நேத்து கமலா டீச்சர் எதுவும் வீட்டுப்பாடம் கொடுத்தாங்களா? செஞ்சோமா என்று யோசித்துக் கொண்டே என் வகுப்பிற்குள் சென்று உட்கார்ந்தேன். தோழி கற்பகம் பக்கத்தில் வந்து,

" எல்லா வீட்டுப்பாடங்களையும் செஞ்சிட்டியா? உன்னோடத காட்டு'' என்றாள். "இந்தா'' என்ற என்னுடைய நோட்டை எடுத்துக் கொடுத்தேன். வாங்கிப் பார்த்தவள்,

"ஐயையோ ஏண்டி கமலா டீச்சர் கொடுத்த வீட்டுப் பாடத்த செய்யல. டீச்சர் வந்து அடிக்கப் போறாங்கடீ. என்ன பண்ணப் போற'' என்றாள். எனக்கு உடனே பகீர் என்று அடிவயிற்றில் புளியைக் கரைத்தது. ஐயையோ இந்தம்மா பிரம்பை எடுத்து அடிக்குமே? என்று உள்ளுக்குள் உதறல் எடுத்தது. என்னுடைய முகத்தைப் பார்த்த கற்பகம்,

"சரி பயப்படாத பார்த்துக்கலாம்'' என்றாள். இருந்தாலும் என் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்தது. பயத்தில் பாத்ரூம் வருவது போல் இருந்தது. வகுப்புகள் ஆரம்பித்துப் போய்க்கொண்டிருக்க 'கமலா டீச்சர் வகுப்பு கடைசிதான' என்று மனதிற்குள் ஒரு பெருமூச்சு எழுந்தது. வகுப்புகள் முடிந்து மதியம் சாப்பிட உட்கார்ந்தோம். எனக்கு பயத்தில் அம்மா கொடுத்த சோறு தொண்டைக்குள் இறங்கவில்லை. கற்பகம்தான் சமாதானப்படுத்தினாள். "கமலா டீச்சர் கேட்டா உனக்கு வயித்துவலின்னு சொல்லிரு'' என்றாள். 'அதுவும் நல்ல ஐடியாதான். உடம்பு சரியில்லை என்று சொன்னோம்னா அடிக்கமாட்டாங்க' என்று மனதிற்குள் எனக்கு நானே சமாதானம் செய்து கொண்டேன். ஏழாவது படிக்கும் எனக்கே இவ்வளவு சோதனையா? அண்ணன்லாம் எப்படித்தான் சமாளிக்கிறானோ? தெரியலையே என்று மனம் ஓடியது.

கமலா டீச்சர் வகுப்பு நேரம் வந்தது. வகுப்பு ஆரம்பித்து பத்துநிமிடம் ஆகியும் டீச்சர் வராததால் கிளாஸ் லீடர் எழுந்து டீச்சரைக் கூப்பிட ஸ்டாப் ரூம் சென்றாள். எனக்கு இருப்புக் கொள்ளாமல் டீச்சர் வாறாங்களா? என்று எட்டிப்பார்த்தேன். ஐந்து நிமிடம் கழித்து எங்க கிளாஸ் லீடர் சுதா மட்டும் வந்தாள். எனக்கு உள்ளுக்குள் 'அப்பாடா' என்றிருந்தது. சுதா வந்தவுடன்,

"டீச்சர் வரலையா" என்றேன். அவள் உடனே,

"டீச்சர் இன்னிக்கு லீவாம். நம்மள அமைதியா கிளாஸ் டீச்சர் படிக்கச் சொன்னாங்க'' என்றாள். என்னையும் அறியாமல் "ஏ'' என்று மகிழ்வோடு எழுந்து நின்று கூக்குரலிட்டேன். உடனே சுதா,

"யாரும் சத்தம்போடக்கூடாது. அமைதியா உட்காருங்க. பேசுறவங்க பேர் எழுதப் போறேன்'' என்றாள். நான் மகிழ்ச்சியோடு கற்பகத்தின் அருகில் போய் அமர்ந்து பாட்டுக்குப் பாட்டு விளையாட ஆரம்பித்தோம். அவள் ஒரு பாட்டின் தொடக்க எழுத்தை நோட்டில் எழுத, நான் அதைக் கண்டுபிடிக்கவேண்டும். இப்படியாக அன்றைய பொழுது மகிழ்ச்சியாகக் கழிந்தது.சாயந்திரம் பள்ளி விட்டுப் போகையில்தான் வீட்டில் அம்மா ரைஸ்மில்லுக்குப் போகச் சொன்னது நினைவு வர,

"கற்பகம் எனக்கு ஒரு உதவி செய்வியா? இன்னிக்கு ரைஸ்மில்லுக்குப் போகணும். எனக்குக் கூட வந்து மாவு அரைச்சு வாங்கித் தருவியா?'' என்றேன். கற்பகம்

"போடீ வேற வேலையில்லையா? ரைஸ்மில்லுக்குப் போக என்ன பயம்? இதுக்கு ஒரு ஆளா? நான் வீட்ல என்ன சொல்ல'' என்றாள்.

"ப்ளீஸ்டீ படிக்கப் போறேன்னு சொல்லு'' என்றேன் நான்.


"ஸ்கூல் விட்டோன்ன படிப்பா. பொய் சொல்லாதன்னு சொல்வாங்க'' என்றாள்.

"அத்தைட்ட நான் வந்து உண்மையவே சொல்றேன். விடுவாங்க'' என்றேன் நான்.

இப்படியாக இன்றைய பொழுது எப்படியோ பிரச்சினையில்லாமல் கழிந்தது. நாளைக்குப் பொழுது எப்படி இருக்கப் போகுதோ? என்று தனக்குள் எண்ணியவாறே மலர் வீட்டிற்குச் சென்றாள். பள்ளிப்பருவம் என்பது மலருக்கு மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் போனாலும் அவ்வப்போது இப்படித்தான் பீதியைக் கிளப்பியது.

மரீனா இல்யாஸ் ஷாபீ – நியூஸிலாந்து

# ஆப்பில் மரம்…!



என் வீட்டு முற்றத்தில்
ஓர் ஆப்பில் மரம் நிற்கிறது…
வெளிநாட்டில் கால்வைத்து
நானிட்ட முதல் வித்து அது…

என் அறுவடையை
முடிந்தவரை
பிறந்த நாட்டுக்கே அனுப்புகிறேன்…

கல்விக்கும்
கல்யாணச் செலவுக்கும்
மருந்துக்கும்
மனை கட்டுவதற்கும்
எத்தனையோ பேருக்கு
அள்ளிக் கொடுத்திருக்கிறேன்…

என் ஆப்பில் மரம்
இப்போது
மூப்பெய்திக்கொண்டு வருகிறது…
அறுவடைகள் அருகி விட்டன
ஆனால்,
சொந்த நாட்டிலுள்ளோர்
அதை சுவனத்து மரமென்று
நம்புகின்றனர்.
கேட்கும் போதெல்லாம்
குறையின்றிக் கொடுக்கவேண்டும்
என்று எதிர்பார்க்கின்றனர்…

அள்ளிக்கொடுக்க முடியாமையால்
கிள்ளிக்கொடுக்கிறேன்…
முன்பு கொண்டாடித் தீர்த்தவர்கள்
எல்லோரும் இப்போது
கூடை கூடையாகக் குறைகள்
அனுப்ப ஆரம்பித்து விட்டனர்

எல்லோரும் நம்புவதுபோல
எல்லோரும் எதிர்பார்ப்பது போல
என் முற்றத்து மரம்
சுவனத்து மரம் போலவே
எப்போதும்
காய்த்துக் குலுங்க மாட்டாதா
என்று எனக்குள்ளும்
ஓர் ஆதங்கம் இருக்கிறது…

ஆனால்,
என் ஆப்பில் மரம்
பூலோகத்தில் இருக்கிறதென்று
எப்படி நம்ப வைப்பேன்…?
கடல் கடந்து வாழ்வோரின்
கனவுகளை
எப்படிக் கலைப்பேன்…?!



முஷ்தாக் அஹ்மத், தோஹா, கத்தார்

# காந்தம்

இருட்டான பின்னிரவில்
குளிர்கால பனிப்பவ்வலில்
மிதமான தென்றலின் தீண்டலில் தோற்றுப்போகும்
காதலின் ஸ்பரிசம்
சுயசாட்சியத்தை மீட்கவைக்கிறது


சொற்கனதியின் செருக்கில்
குழம்பிப்போன எழுத்துவரிசைகளின்
இடைவெளிகளை அடைப்புக்குறியிட்டு
அவதானமென்று அடையாளமிடுவது
எச்சரிப்பின் செரிமானத்தில் அடங்கி
அரைநிலையில் காதலின் நிலை நிகழ்வது
போன்றது

காந்த புலங்களின் வட, தென் துருவ
ஈர்ப்பின் உந்துதலால் கவரப்படுவதான
காதலின் மோட்ச சூட்சுமங்களில்
வேதனையின் வசக்கட்டும்
மகிழ்வின் அபிமானமும் சேர்ந்திருப்பதே
சபிக்கப்படாத சத்தியப்பிரமாணம்

சோகமப்பிய சிங்கார முகத்தின்
மோகமிச்சங்களை மனமேந்தியபோதே
கோபதாபங்களை கேட்பாரின்றி
கேள்விப்போதனைகளை விட்டகழ்ந்து
காதலிய கீதமொன்றை இசைக்க
போகின்ற பயணத்தில் நான்.

# மனிதம்

ஜூனியர் தேஜ்



மழைக்குக் கூடப் பள்ளியில் ஒதுங்காதவன் மாபாணன். பார்ப்பதற்கு கட்டு-மஸ்தாக ஆஜானுபாஹுவாக இருந்தான். அவனது இரட்டை நாடித் தோற்றத்தைக் கண்டதும் ராணுவ அதிகாரியோ என்றுதான் எவரும் எண்ணுவார்கள்.

பிரசவிக்கத் தயாராக இருந்தாள் அந்த நிறைமாதக் கர்ப்பிணி பூங்குழலி. யாருமற்ற அனாதையாய், தனி மரமாய் நின்றாள் அவள். தன் தலைப் பிரசவத்தைச் சுயமாய்ப் பார்த்துக் கொள்ளத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டிருந்தாள். தமிழச்சியின் அசாத்தியத் துணிவு அவளிடம் தெற்றெனப் பளிச்சிட்டது.

மத, இன, மொழிவெறியின் உச்சக் கட்டமாக, ஊட்டமும் வனப்புமிக்க கர்ப்பிணிகளைச் சின்னாபின்னமாக்கிய கடந்தகாலக் காம-வெறியாட்டத் தலைப்புச் செய்திகளெல்லாம் மனதில் ஒன்று திரண்டு அவளை மிரள வைத்தது.

மிரட்சியின் விளைவாய், வியர்வை அருவியாய்க் கொட்டியது அவளுக்கு. இதயம் பன்மடங்கு அதிகமாய் 'லப்டப்'பியது. அனற்புயலாய் வீசியது சுவாசம்.

சிங்கத்தை மிக அருகில் கண்ட புள்ளி மானாய் மிரண்டாள். எங்கு ஓடி எப்படித் தப்பிப்பதென்று யோசித்தது மனது.

அனிச்சையாக பூங்குழலியின் கைகள் இரண்டும் சேர்ந்து கூப்பிக் கொண்டது. தொழுது யாசித்தது.

★★★

'என்னை விட்டு...!' - என்று கைக் கூப்பிக் கதறித் தொழுத நங்கையைப் பார்த்து ரசித்து, "ஆஹா, உன் கூப்பிய கையைப் பார்க்கும்போதே, சற்று நேரத்தில் மலரும் தாமரை மொட்டாய் மினுக்குகிறதே..!" என்று இளித்தபடி அந்தத் தாமரை மொட்டை கசக்கிப் பிழிந்துவிட்டு சக்கையாய் தூக்கியெறிந்த ராணுவ அதிகாரிகளின் இழிசெயல்களைப் பற்றி கேள்விப்பட்டவன்தான் மாபாணன்.

'தன்னையும் அப்படிப்பட்டதொரு காம வெறி பிடித்த அதிகாரியாக நினைத்துவிட்டாளே இந்தக் கர்ப்பிணிப் பெண்?' - வருத்தமாக இருந்தது அவனுக்கு.

இப்படிப்பட்ட அராஜகங்களைக் கண்டித்து நடத்திய போராட்டங்களும், அதில் போராளிகள் கன்னி வெடிகளில் சிக்கி மாண்ட கதைகளெல்லாம் நிழற்படம்போல் தோன்றி அவளை மேலும் மேலும் பலஹீனப்படுத்தியது.

எந்த நிமிடமும் எதுவும் நடக்கலாம் என்ற வகையில் இருந்தது தேசம். எந்த நேரம் எந்தத் திக்குத் திசையிலிருந்து எந்தப் பகுதியில், எந்த செல்' விழுந்து என்னென்ன சேதங்கள் ஏற்படுமோ? எத்தனை உயிர்கள் பலியாகுமோ...?;

இலக்கற்றுத் தப்பியோடும்போது எந்தப் பாதையில் பதிக்கப்பட்ட கன்னிவெடி எத்தனைபேரை பலிகொள்ளுமோ?;

இப்படியெல்லாம் மனசு முழுதும் திடுக்காட்டம் பரவ மயங்கிச் சரிந்தாள் அவள்.

தமிழர்களின் வாழ்வா சாவாப் போராட்டங்கள் அனைத்தையும் அறிந்தவன்தான் மாபாணன். இத்தனை வாழ்க்கைப் போராட்டங்களுக்கு நடுவிலும் வாழ்வின் வசந்தங்களை அனுபவித்ததற்குச் சாட்சியாய் நின்ற அந்தச் சூல் கொண்ட நங்கையைக் கண்டுப் பெருமிதம் கொண்டான் மாபாணன்.

★★★

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வதில் நிபுணர்களாயிருந்தார்கள் காய்ந்து கிடக்கிற ராணுவ அதிகாரிகள். பயிர்களை மேய்கிற வேலிகள். தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தன் கீழ் பணியாற்றும் ஊழியர்களை மிரட்டி அவர்கள் மனச்சாட்சியை அழித்து தங்களின் சட்டத்தை, தர்மத்தை மீறிய செயல்களுக்கு அவர்களைக் காவல் வைப்பார்கள்.

"ராணுவ அதிகாரி இந்தக் குற்றத்தைச் செய்தான்...!" - என்று மனசாட்சி உள்ள ராணுவத் தொழிலாளி

எவனேனும் சொல்லிவிட்டாலோ, அவ்வளவுதான். குற்றத்தை சொன்னவன்மீதே திருப்பி, அதற்கான சாட்சி ஆவணங்களை உருவாக்கி, அந்த நபரை குறைந்தபட்சம் ராணுவப் பணியை விட்டோ, மேலதிகமாக, உலகத்தை விட்டோ தூக்கிவிடுவார்கள்.

கமிஷன்டு ராணுவ அதிகாரிக்குத்தான் அரசாங்கமும் துணை நிற்கும். விலைமதிப்பில்லாத மனித உயிரை உதாசீனப்படுத்தும் அரசியல் அவலம் அழகாய் அரங்கேறும்.

இப்படிப்பட்டச் சூழலில், படிப்பறிவில்லாத, உடம்மை மட்டும் வளர்த்துக்கொண்டு, வயிற்றுப் பிழைப்புக்காக ராணுவத்தில் தொழில்புரியும் தொழிலாளிகளும், நமக்கேன் வம்பு என்று இருந்துவிடுதல் இயற்கைதானே...?

★★★

மலைப் பிறப்பும், மகப்பேறும் மகாதேவனுக்கேத் தெரியாது என்பார்கள். இப்போதோ அப்போதோ என்றுக் கிடக்கும் கர்பிணி தனக்குத்தானே சுயப் பிரசவம் செய்துகொள்ளத் துணிந்துவிட்டாள். மருத்துவ உதவி என்று போகலாம்தான். ஏதாவது அதிகாரிகளின் கண்களில் மாட்டிவிட்டால்...?

‘சுயப் பிரசவத்தில் வாரிசு போனாலும், கற்பாவது மிஞ்சுமே...! தானே இறந்துவிட்டாலும் கற்புடன் இறக்கலாமே...!’ என்று முடிவெடுத்துவிட்டாள் போலும்.

★★★

பூங்குழலியின் கணவனும் ஒரு போராளிதான். பூங்குழலியின் அண்டைவீட்டுக்காரன்தான் அவன்.

இருவர் வீட்டையும் பிரிப்பது நடுவில் நிற்கும் தட்டி அடைப்புதான். அடைப்பைத் தாண்டி ஒலிக்கும் அவன் காந்தக் குரலை தெளிவாய் காதில் வாங்குவாள் பூங்குழலி. வீரப்பிரதாபங்களைச் சொல்கையில் மலரும் முக பாவங்களை தட்டியிடுக்கு வழியாக, பார்த்துப் பார்த்து, ரசித்து ரசித்து, பிரமித்துப் பிரமித்து, நாளாவட்டத்தில் மெல்ல மெல்ல அவன் வசமாகி, காதல் செய்து திருமணமே செய்து கொண்டாள் அவள்.

கண்மூடித்தனமான, இனப்பற்றாலும், காட்டுமிராண்டித்தனமான மதவெறியாலும் மதி மயங்கி, தமிழ்க்குடும்பங்களை சின்னாபின்னப்படுத்தும் இழி சம்பவங்கள் நடைபெறும்போதெல்லாம், உடனடியாக எதிர்வினையாற்றுபவன் அவன். ராணுவ அதிகாரியின் செயலை வன்மையாகக் கண்டித்துப் போராடப் போகும்போதெல்லாம், சர்வ அதிகாரங்களும் படைத்த ராணுவம் கொடுக்கும் குடைச்சல்களையும், அதற்கு முழு ஆதரவு தரும் அரசாங்க இயந்திரங்களின் மனோபாவங்களையும், தன் அப்பாவிடம் சுவாரசியமாகச் சொல்வான் அவன்.

பச்சிளம் குழந்தைக்கு உணவு தேடச் சென்ற அபலைத் தாயைக் கடத்தி, தாய் சேயைப் பிரித்த கொடுமை.

பாதுகாப்புக்காக என்று சொல்லி முகாமில் தங்கவைத்துக் கற்பைக் களவாடும் கொடுவினை.

மனைவிக்குப் பாதுகாப்பான கணவனையோ, தாய்க்குப் பாதுகாப்பான மகனையோ, சகோதரிக்குப் பாதுகாப்பான சகோதரனையோ, கொல்வதும், கடத்தித் தனிமைப்படுத்தப்படுவதுமான இழி செயல்கள்.

இப்படிப் பலப்பல, காதில் வாங்கியிருக்கறாள் பூங்குழலி.

வத்தை, சலங்கு, தோணி, வள்ளம், கட்டுமரம், டிங்கி, மச்சுவா... போன்ற பல்வேறு படகுகளின் செல்லப் பெயர்களை கேட்கும்போது வியப்பாக இருந்தது அவளுக்கு.

துண்டு துண்டாக வெட்டிப் போட்ட அவயங்களை அள்ளிக் கொண்டு வந்த நிகழ்வுகளும், துப்பாக்கிக் கலாச்சாரத்தின் துர்பாக்கியமும் சொல்லி, அவனையறியாமல் கண்கலங்கி, ‘குமுதினி படகுப் படுகொலை’ பற்றி அவன் விவரித்த விதமும், விஷயங்களின் கோர்வையும் நெஞ்சைப் பிழிந்தது ;

‘கருப்பு யூலை’ என்றழைக்கப்படும் பேரினவாதிகளின் தாக்குதல்களும், அத்தாக்குதல்களின்போது அவன் பங்கு பற்றியும் சொன்னபோது, அந்த மாவீரனின் மீது காதல் வந்தது.

இவளின் காதல் கதையை யாரேனும் கேட்டால், ஒத்தெல்லோ அடிக்கடி வீட்டுக்கு வந்து தன் தந்தையிடம் சொன்ன வீரப் பிரதாபங்களைக் கேட்டுக் கேட்டு மையல் கொண்டு காதல் மணம் செய்துகொண்ட ‘டெஸ்டிமோனா’வின் நினைவு வந்தே தீரும்.

★★★

இனக்கலவரங்களைக் கட்டுப்படுத்தவேண்டிய ஜனநாயக அரசு, அதைத் தூண்டிவிடுவதே நகை முரண். ‘நம்மவர்’ என்ற அரசின் கீழ்த்தரமான நிலைப்பாடும், வன்முறையும், வன்புணர்வும் செய்து ஆக்ரமிக்கப்பட்ட தமிழர்களின் நிலத்தில் நின்று தான்தோன்றித்தனமாய் அதிகார துஷ்பிரயோகம் செய்யும் ராணுவ அதிகாரிகளின் போக்கும், தமிழ்ப் பேதை பெதும்பைகளுக்குமே ஆத்திரத்தை வரவழைக்குமெற்றால் போராளிகளை பற்றிக் கேட்கவேண்டுமா என்ன?

போராளிகள் ரகசியமாக ஒன்று சேர்வதும், திட்டமிடுவதும், தமிழின எட்டப்பன்களாலும், 'பி' டீமாகச் செயல்படும் சிலப் போலிப் போராளிகளாலும், ராணுவத்திற்குத் திட்டம் தெளிவிக்கப்பட்டு, போராளிகளின் நோக்கம் சிதைக்கப்படும்.

தட்டிக் கேட்கப் புறப்படும் போராளிகளின் பாதைகளில் கன்னி வெடிகள் புதைத்தும், பந்தோபஸ்து என்னும் போர்வையில் கண்ணீர் புகைக் குண்டுகள் வீசுவதும், துப்பாக்கிச் சூடு நடத்துவதுமாய் அதகளப்படுத்தும்போது, வறுமையில் வாடும் அப்பாவி மக்களால் என்னதான் செய்துவிடமுடியும்.

துப்பாக்கிக் குண்டுகளுக்கும், கன்னி வெடிகளுக்கும் பலியாகும் போராளிகளைவிட, காணாமல் போகும் போராளிகளின் நிலைதான் மிகவும் பரிதாபம். அவர்களை எப்படியெல்லாம் சித்ரவதைக்குள்ளாக்குவார்கள் என்பதெல்லாம் இராணுவ ரகசியம்.

அப்படிப் பட்ட ஒரு சூழ்நிலையில், தமிழர்களின் சொத்துக்களை சூரையாடிய அநியாயங்களையும், தமிழினப் பெண்களை கற்பழித்துக் கொன்று குவித்த மனிதநேயமற்றச் செயல்களையும் தட்டிக்கேட்கப் போனபோதுதான் பூங்குழலியின் கணவன் காணாமல் போனான்.

உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பதே புதிராய் இருந்தாலும், "உன் அப்பன் சுத்த வீரண்டா… எந்த கிரகத்துல கொண்டு போய் வெச்சாலும் வந்துருவான்…!" என்று அந்தக் கர்பிணி தன் வயிற்றில் சிசு சுற்றி வரும்போதெல்லாம் நம்பிக்கையோடுச் சொல்லிக் கொள்வாள்.

★★★

சில சந்தர்ப்பங்களில் ராணுவ அதிகாரிகள் போராளிகளிடம் வசமாய்ச் சிக்கியதும் உண்டு.

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதன் முழுப்பொருளை இதுபோன்ற சந்தர்ப்பங்களில்தான் காண முடியும்.

அமைதியைக் குலைத்து, இனிய குடும்பங்களின் சமநிலையைக் கெடுத்துக் குட்டிசுவராக்கும் இது போன்ற அதிகாரிகள், பாதிக்கப்பட்டோர் கைகளில் அகப்பட்டுவிட்டால் எப்படிச் சின்னாபின்னப்படுவார்கள் என்பதற்கும் சில பல உதாரணங்கள் உண்டுதான்.

ஆனையிறவுச் சமரின்போது தமிழ்ப் போராளிகளால் சுற்றி வளைக்கப்பட்ட நேரத்தில், முகாமை விட்டுத் தப்பியோடப்பார்த்த, ராணுவ அதிகாரி, தமிழர்களுக்காக வைத்த கன்னி வெடியில் கால் வைத்துச் சின்னாபின்னமாகிப் போனது மிகப் பிரபலமானது.

அந்தச் சம்பவத்துக்குப் பின் கொஞ்ச நாள் வாலை சுருட்டிக்கொண்டுதான் இருந்தார்கள் அதிகாரிகள். அதோடு போராளிகளை இனம் கண்டு ஒழித்துக் கட்டினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக குளிர் விட்டுப் போனது அவர்களுக்கு.

விழுக்காட்டில் மிகக்குறைந்த இதைப்போன்ற சம்பவங்களால் பெரிய திருப்பங்கள் ஏதும் ஏற்பட்டுவிடுவதில்லையே…!

★★★

மயக்கம் தெளிந்த நிலையில் "அம்மா… அம்மா…" என்று வலியில் முனகினாள் பூங்குழலி.

எதிரேத் தண்ணீர்க் குவளையுடன் நின்ற அவனைப் பார்த்தாள். மீண்டும் பயம் கவ்விக்கொண்டது அவளை.

"பயப்படாத…!" - என்ற மாப்பாணனை விநோதமாகப் பார்த்தாள் அந்த நங்கை.

'நடிக்கிறானா? வன்புணர்வாற்றாமல், மென்புணர்வுக்காக என்னைத் தயார் செய்கிறானா?'

"பயத்தை விடு தங்கச்சி, நானிருக்கேன்…"

"அவன் சொன்ன உறவுமுறை அவளுக்கு ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது. நீ ஆபீசரில்லையாண்ணே…?" - சற்றே தைரியமாகக் கேட்டாள்.

இல்லையென்று தலையாட்டினான் மாபாணன்.

"சர்வே பண்ண வந்தேன். அடுத்தபடியா ராணுவ அதிகாரி வருவாரு.."

"அய்யோ… அதிகாரி வருவானா…?"

"பயப்படாதே… அம்மே…! அம்மே.." ன்னு புலம்பு. ஆபீசர் வந்தாக்கா, நம்ம இனப் பொண்ணுனு கண்டுக்காத போயிருவான்."

"தம்பீ…" - அழைக்கும்போது குரல் உடைந்து வந்தது. கண்களும் உடைந்து பாய்ந்தன.

ராணுவத் தொழிலாளியான தன்னை முதன் முறையாக ஒரு பெண் 'தம்பீ' என்று அழைத்ததில் நெகிழ்ந்துபோனான் மாபாணன்.

பிறந்த கனத்திலேயே தாயை இழந்தபின், பாசத்தோடு தனியாளாய் நின்று வளர்த்த தந்தை இப்படித்தான் தன்னை 'தம்பீ' என்று அழைப்பார் என்பதை நினைத்தபோது மேலும் நெகிழ்ந்தான்.

அப்பாவின் சாவு மனதில் திரையிட, அரசாங்க இயந்திரத்தின்மீது கடும் கோபம் வந்தது.

★★★

‘நம் இனம், நம் மதம், நம்மொழி என்று பேசும் அரசு யந்திரம் அதே இனத்தின் பிரதிநிதியான என் தகப்பனுக்கு எந்த வகையில் நன்மை செய்தது?

‘என்னதான் இனம், மொழி, மதம் என்றாலும், பணம் காசு இருந்தால்தானே ஏறிட்டுப் பார்க்கிறது இந்த உலகம். அன்றாடங்காய்ச்சி, ஏழை என்றறிந்தவுடனே, எப்படியெல்லாம் அலட்சியம் செய்யப்பட்டார் என் அப்பா..?

மருத்துவ உதவிக்கு எனச் சென்றபோது, வார்டுகள் எல்லாம் காலியாக இருந்தாலும், வராண்டாவிலல்லவா கிடத்தினார்கள். முறையான சிகிச்சைகூட அளிக்கப்படவில்லையே…?

இறந்தபின்னும் அடக்கம் செய்துவைக்க ஒரு நாதியில்லையே…! ‘

கடந்துபோன கசப்பான நாட்கள் நினைவிற்கு வந்தன மாபாணனுக்கு.

★★★

“தம்பீ… சாப்டு…!” - எதிரில் தட்டுடன் நின்றாள் அந்த கர்பிணி.

அப்பாவின் சாவுக்குப் பின் பல வருடங்கள் கழித்து, “தம்பீ… சாப்டு…!” என்ற விளி மகிழ்ச்சியைத் தந்தது.

சாப்பிட்டான்.

சாப்பிடும்போதே அவள் பேசினாள். “தம்பீ… என்னை அம்மானு புலம்பாதே, அம்மே..னு புலம்புன்னு சொல்றியே..! தாயும், மகளும்கூடப் பொம்பளைதானே…?”

மாபாணனுக்குச் சுரீர்’ என்று மனதில் குத்தியது.

“அம்மா’ன்னேக் கத்து தங்கச்சி. நான் பாத்துக்கறேன்..!” – என்றான் மாபாணன் உணர்ச்சிப் பெருக்குடன்…

“பக்கத்துலயே இருண்ணே..!” – என்றவள், “இந்தப் புள்ள மூணு மாசமா இருக்கும்போது காணாமப்போன என் புருசனை என்கிட்டேக் கொண்டுவந்து நீ சேர்ப்பியாண்ணே…?; நோவு அதிகமெடுக்குது..!” - என்று வயிற்றைப் பிடித்துக் கொண்டாள். அம்மா அம்மா என்று அரற்றினாள்.

உடன்பிறந்தவனாகவே மதித்து தன்னிடம் உதவி கேட்கும் அவள் கைப்பிடித்து அந்தக் குடிலில் கிடந்த கட்டிலில் பாங்காய் அமரவைத்து, தலையணைகளை அண்டை கொடுத்தான்.

★★★

“தங்கச்சி.. பெத்து எடு… இதோ வந்துடறேன்…” - அவசரமாக வெளியில் வந்தான்.

பாறை முடுக்கில் வைத்த கன்னி வெடி மூட்டையை எடுத்துக் கொண்டான். ஆபீசரோடு சர்வே செய்தபோது, அவர் காட்டிய ஆபீசர் வரும் பாதையை நன்கு உள் வாங்கினான்.

★★★

குடிசைக் கதவு திறக்கும் முன், ‘கண்டேன் சீதையைப் போல’ - “பயப்படாதே தங்கச்சி... நான்தான்...!” என்று குரல் கொடுத்தான் மாபாணன். நல்லா பாதுகாப்பு செஞ்சிட்டேன். எதுக்கும் பயப்படாம பிள்ளையப் பெத்துப் போடு... என்றான்.

“அம்மா… அம்மா… அண்ணே… அண்ணே…” – உரத்துப் புலம்பினாள்.

“வெடிச்சத்தம் ஏதும் கேட்டா பயப்படாதே தங்கச்சி…!” – தட்டிக்கு வெளியிலிருந்து எச்சரித்தான் மாபாணன்.

“நீ இருக்கயில எனக்கென்ன பயம்…?”

தேசப்பாதுகாப்புக்காக இருக்கவேண்டிய ராணுவ அதிகாரிகள் சேதப்படுத்துவதற்காக முற்படும்போது அவர்களுக்குக் காவலாக இருப்பதை விட ஒரு அபலைக்குப் பாதுகாப்பாளனாக இருப்பதில் பெருமை அடைந்தான் மாபாணன்.

“டமார்… டமார்…” - கன்னி வெடிகள் வெடித்தன. சிதைக்க வந்த ராணுவ அதிகாரி சிதைந்தான்.

வெவ்வாய் ஓரி முழவாக, விளித்தார் ஈமம் விளக்காக… மயானத்தில் சீவகன் பிறந்தாற்போல…

கன்னி வெடிச்சத்தமே முழவாக, வெடிப் பிழம்பே விளக்காக ஏழைக் குடிசையில் பிறந்த மகனிடம் . “மாமாப் பாரு…” என்று அறிமுகப்படுத்தினாள் பூங்குழலி.

இத்தனை நாள் வாழ்ந்த அர்த்தமற்ற வாழ்க்கையிலிருந்து விடுபட்டு, அர்த்தமுள்ள ஒரு வாழ்வைத் தொடங்கிய மாபாணன் அந்தப் பச்சிளங்குழந்தையை உச்சி மோர்ந்தான்.

காணாமல் போன தன் மச்சானை விரைவில் கண்டுபிடித்து அழைத்துவரவேண்டும்,,’ என்ற வைராக்கியம் மாபாணனுக்குள் எழுந்தது..



ஜமீல், இலங்கை

# அன்பின் மொழி

பிரிவின் அடர்ந்த கண்ணீர் முன்
அன்பைச் சொரியவென
இனிமையான வார்த்தைகளெதுவும்
அப்பாவிடம் இல்லை

அதனால் இதழ் பதிந்த
முத்தமொன்றை
மகவின் நுதல் பொட்டில்
பரிசளித்து விட்டு
வீடு திரும்புகிறார் அப்பா

விடுதியில் வசிக்கும் காலங்களிடை
வீட்டின் ஞாபகம் வரும்போதெல்லாம்
அப்பாவின் முத்தம்
இனி மகவை ஆற்றுப்படுத்தும்

முத்தமென்பது வேறொன்றுமில்லை
அது எல்லையற்ற
அன்பின் மொழியாகும்.

# த. ரவீந்திரன் கவிதைகள்:

கற்றுணர்ந்த கல்வி
பட்டுணர்ந்த அனுபவ பாடம்
தூரிகை இல்லாத வானம்
வாசனை இல்லாத மலர்
வரவேற்பு இல்லாத உறவுகள்
கடலைச் சேராத நதி
காற்று தீண்டாத புல்லாங்குழல்
பூத்துக்குலுங்காத பூங்கா
முற்று பெறாத ஓவியம்
சுட்டெரிக்காத மௌன வார்த்தைகள்
என எங்கோ ஓர் மூலையில்
யாரோ ஒருவன் இரவில் விழித்திருப்பான்
உயிரடங்காது காத்திருப்பான்
கையில் மூச்சுக்காற்றை சுமந்து
அவளின் அழைப்புக்காக..!

எதிரினில் காண்கிறேன்
அவளுடனான அழகிய தருணங்களை
எதற்கும் உதவாமல் போகிறது
காட்சிப் பிழையான கனவு
மெல்ல நகர்ந்திட்ட அவ்விரவை
சிறை பிடிக்க ஏதுவாக இல்லை
நிதர்சனமற்ற உறக்கம்.!



புதுகை ஆதீரா

# யாசித்த கண்கள்

கற்கோவில் நுழைவாயிலில்
சந்தித்த அந்த கண்கள்..
கூடவே உள்நுழைந்தது
தீட்சண்யம் தாங்கமுடியாமல்
தடுமாறச் செய்கிறது
உள்ளிருக்கும் இறைவனிடம்
அதே கூர்மை..
உண்மைக்கும் பொய்மைக்கும் இடையிலான
சின்ன நூலிழைகளை தரிசிக்க முடிகிறது
முகமூடி மனிதர்களின்
நிஜ முகங்களின் தரிசனம் நிரந்தரமில்லா
அற்ப
சுகங்களின் அடையாளங்கள்
வேடங்கள் அணிந்த
போலிகளின் சுயம்
இன்னும் இன்னும்
பிரகாரம் சுற்றச் சுற்ற
ஒவ்வொரு இழையாக
அறுபட்டுக் கொண்டே வருகிறது
ஒரு பாட்டம் பெய்த மழையில் மொத்தமும்
கரைந்து
சாயங்கள் ஆறாகப்
பெருகியோடி சுத்தமாக்குகிறது
மனம் தன்னை
தரிசித்துக் கொள்கிறது
மீண்டும் திரும்பி
வாயிலில் தேட
இப்போது காணவில்லை அந்த
"யாசித்த கண்களை"



# தூங்கும் பனிநீர்

**கே.எஸ்.சுதாகர்**

*ஐந்து பாத்திரங்கள் : சிந்து, பி ரதீபன் (சிந்துவின் தம்பி), சிந்துவின் அம்மா, சிந்துவின் அப்பா, ஜோதி ரீச்சர்*

காட்சி 1

*உள்*

*வீடு*

*மாலை*

*சிந்துவும் பிரதீபனும் ஹோலிற்குள் இருந்து, ரெலிவிஷனில் தமிழ் சினிமா பார்க்கின்றார்கள். (க்ளோஸ் ஷாட் / close shot). ஹோலிற்குள் லைற் எரிகின்றது. வீட்டிற்கு வெளியே கார் வந்து நிற்கும் சத்தம்.*

*பிரதீபன் : அக்கா...! அப்பாவும் அம்மாவும் வேலையாலை வந்திட்டினம்.*

*சிந்து : சனலை நியூசிற்கு மாத்து. படிக்கிறதை விட்டிட்டு, படம் பாத்துக் கொண்டிருக்கிறாய் எண்டு தெரிஞ்சா அம்மா கத்துவா.*

*பிரதீபன் அவரசப்பட்டு ரி.வி சனலை மாத்துகின்றான். அது எத்தனையோ சனலுக்கு மாறி மாறிப் போய் கடைசியில் நியூஸ் சனலுக்கு வருகின்றது. சிந்து வீட்டின் கதவை நோக்கிப் பார்க்கின்றாள். சிந்துவின் அம்மா கதவைத் திறந்தபடி நிற்கின்றார்.*

*சிந்துவின் அம்மா : சிந்து ... பிரதீபன்... இரண்டு பேரும் நான் சொல்லுறதை வடிவாக் கேளுங்கோ... நானும் அப்பாவும் ஒருக்கா ஜோதி ரீச்சர் வீட்டை போட்டு வாறம். வாறதுக்கு கொஞ்சம் லேற்றாகும். நீங்கள் இரவுச் சாப்பாட்டை முடிச்சிட்டுப் படுங்கோ. நாங்கள் திறப்பு வைச்சிருக்கிறம்... திறந்துகொண்டு வருவம்.*

*சிந்து & பிரதீபன் : ஐய்... ஜோதி ரீச்சர் வீடுதானே! நாங்களும் வாறம்.*

*சிந்துவின் அம்மா : உங்களை நாங்கள் இன்னொருநாள் கூட்டிக்கொண்டு போவம். இப்ப ஒரு அவசர அலுவலாப் போறம். அப்பா காருக்குள்ளை இருக்கிறார்.*

*சிந்து : என்னம்மா நீங்கள்? (சலித்தபடி) ஜோதி ரீச்சர் ஒஸ்ரேலியாக்கு வந்தாப் பிறகு நான் ஒருக்காவும் அவவைச் சந்திக்கேல்லை.*

*சிந்துவின் அம்மா : சரி.. சரி.. கண்ணைக் கசக்கிறதை விட்டிட்டு ஹப்பியா இரு. இன்னும் ஆறு மாசத்திலை உனக்குக் கலியாணம். கதவை உள்ளாலை பூட்டிப் போட்டு இருங்கோ. Bye*

*சிந்து & பிரதீபன் : bye அம்மா...*

*சிந்துவின் அம்மா போகின்றார். பிரதீபன் எழுந்து போய், கதவைப் பூட்டிவிட்டு வந்து மீண்டும் படம் பார்க்கின்றான்.*

*சிந்து: அம்மாவும் அப்பாவும் ஏன் எங்களை ஜோதி ரீச்சர் வீட்டுக்குக் கூட்டிப் போகல்லை...*

*பிரதீபன்: நான் நினைக்கிறன்... ஜோதி ரீச்சருக்கும் அவவின்ரை ஹஸ்பனுக்குமிடையிலை ஏதோ பிரச்சினை...*

*சிந்து: உனக்கெப்படித் தெரியும்?*

*பிரதீபன்: அப்பாவும் அம்மாவும் நேற்று அவையைப்பற்றி ரகசியம் கதைக்கேக்கை நான் ஒட்டுக் கேட்டனான்.*

*சிந்து: ரீச்சர் பாவம் என்ன? எனக்கு ஒரே கவலையாக் கிடக்கு.*

*சிறிது நேரம் ரி.வி பார்க்கின்றார்கள்.*

*சிந்து: நான் றூமுக்குப் போறன் தம்பி. நிறைய வேலை இருக்கு. குட் நைற்...*

*பிரதீபன்: சாப்பிடேல்லையே அக்கா?*

*சிந்து: எனக்குப் பசிக்கேல்லை. நீ சாப்பிட்டிட்டுப் படு. நான் வேணுமெண்டா பிறகு சாப்பிடுறன்.*

## காட்சி மாற்றம் 2

உள்

சிந்துவின் அறை

இரவு

ஃபேட் இன் / *fade in*. ரேபிள் லாம்ப் எரிகின்றது. சுவரில் மணிக்கூடு இரவு இரண்டைத் தாண்டிவிட்டது. சிந்து படுக்கையில் புரண்டு புரண்டு படுக்கின்றாள். எழுந்து தலையைப் பொத்தியபடி படுக்கையில் இருக்கின்றாள் (க்ளோஸ் அப் /*close up*). கார் ஒன்று வந்து வீட்டுக்கு வெளியே நிற்கும் சத்தம். தொடர்ந்து கதவு திறந்து மூடும் சத்தம். சிந்துவின் அப்பாவும் அம்மாவும் கதவைத் திறந்து உள்ளே வரும் சத்தம் சிந்துவுக்குக் கேட்கின்றது. அவர்கள் வரும்போதே கசமுசா கசமுசா என்று கத்திக் கதைத்தபடி வருகின்றார்கள். அப்பா அம்மாவின் படுக்கை அறை, சிந்துவின் அறைக்கு அருகே இருப்பதால் அவர்களின் குரல் விட்டு விட்டுக் கேட்கின்றது. (மெல்லிய இசை. இந்த இடத்தில் படத்தின் டைட்டில்கள் போடலாம்.)

*சிந்துவின் அப்பா:* பேசிச் செய்யிற சில கலியாணங்களிலை உதுதான் வாற பிரச்சினை. ஆரெண்டு தெரியாமை திடீரெண்டு கழுத்தை நீட்டெண்டா என்ன செய்யுறது?

*சிந்துவின் அம்மா :* என்ன இருந்தாலும் ஒரு ஆண் இப்பிடியும் செய்வானா? தறுதலை... போதை தலைக்கேறிவிட்டால், பெண்ணை எதுவும் செய்யலாமா?

*சிந்துவின் அப்பா:* அடிக்கிறதும்.... சிகரெட்டால் சுடுகிறதும்... மயிரையும் புடுங்குவானா?

*சிந்துவின் அம்மா :* ஒரு பெண்குழந்தைக்கும் அப்பனாகிட்டான். எப்பிடி நடந்துகொள்ளுறது எண்டு தெரியேல்லை...

*சிந்துவின் அப்பா :* இதுக்கு இப்ப என்னதான் முடிவு?

*சிந்துவின் அம்மா :* பாவம் ஜோதி... என்னோடை படிச்சவைக்கை ஜோதி மட்டும் தான் யூனிக்கே போனவள். இப்ப ஒஸ்ரேலியா எண்டு வந்து பிள்ளையோடை கஸ்டப்படுறாள். உங்களுக்கு நாளைக்கு வேலை இல்லாட்டி, இன்னொருக்காப் போய் கதைச்சுப் பாக்கலாம்...

*சிந்துவின் அப்பா:* கதைச்சு ஒண்டும் நடக்கப் போறதில்லை... சிந்துவின்ரை கலியாணமும் வருது. சற்றடேயும் வேலை செய்தா தான் கொஞ்சம் காசும் சேமிக்கலாம்.

பின்னர் அவர்கள் இருவரும் ஏதேதோ குசுகுசுக்கின்றார்கள். சிந்துவுக்குக் கேட்கவில்லை. படத்தின் டைட்டில்கள் முடிவடைகின்றன. ஃபேட் அவுட் / *fade out*. காட்சி மாற்றம்.

## காட்சி மாற்றம் 3

உள்

வீடு

பகல்

'ஆறு மாதங்களின் பின்னர்' என்று டைட்டில் விழுகின்றது.

வீடு சோடனைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது (வீட்டின் உள் புறத்தை கமராவினால் சுற்றிக் காட்டுதல்). ரேப் றெக்கோடரில் இனிமையான நாதஸ்வரக் கச்சேரி மெல்லிதாக எழுகின்றது. பெண்களின் கலகலப்பான ஒலி குசினிக்குள் இருந்து கேட்கின்றது. சிந்து தனது றூமிற்குள் ஒரு கதிரையில் தலை குனிந்தபடி இருக்கின்றாள். (க்ளோசப் / *close up* பின்னர் க்ளோஸ் ஷாட் / *close shot*)

*சிந்துவின் அம்மா:* என்ன பிள்ளை? இன்னும் றெடியாகேல்லையே! ஜோதி ரீச்சரல்லே வரப்போறா.... (சிந்துவின் றூமைத் திறந்தபடி)

*சிந்து:* ஜோதி ரீச்சரா? அவா ஏன் இஞ்சை வரவேணும்?

*சிந்துவின் அம்மா:* அவா தானே உனக்கு மேக்கப் போடப்போறா!

*சிந்து:* (திடுக்கிட்டு) அம்மா... எப்பிடியம்மா? இது எப்பிடி?

*சிந்துவின் அம்மா:* எது எப்பிடி?

*சிந்து:* அவா என்னுடைய ஸ்கூல் ரீச்சர். ரீச்சருக்கு ஒரு மரியாதை குடுக்க வேண்டாம். எனக்கு பெரிய அவமானமா இருக்கு!

*சிந்துவின் அம்மா:* இதிலை அவமானப்படுறதுக்கு என்ன இருக்கு. பெருமைப்படு. உனக்கு இலங்கையிலை படிப்பிச்சதோடை, அவுஸ்திரேலியாவிலை உன்ரை கலியாணத்திலும் கலந்து கொள்ளுறா எண்டதை நினைச்சுப் பெருமைப்படு.

*சிந்து:* எனக்கு இதிலை துளிகூட விருப்பம் இல்லையம்மா

*சிந்துவின் அம்மா:* ஜோதியும் நானும் ஒண்டாப் பள்ளிக்கூடத்திலை படிச்சனாங்கள். அதைவிட சின்னனிலையிருந்தே ஃபிரன்ஸ். எப்பிடியும் கலியாணத்துக்கு அவவும் வரப்போகின்றா. தன்னை

விட்டிட்டு வேறை ஆரையேனும் மேக்கப்புக்குப் பிடிச்சா, அவ என்ன நினைப்பா...

(அவர்கள் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருக்கும்போது கதவு பெல் சத்தம் கேட்கின்றது.)

சிந்துவின் அம்மா: ஜோதி ரீச்சர் வந்திட்டா போல கிடக்கு. எங்களுக்காக ஒண்டரை மணித்தியாலம் கார் ஓடி வாறா. உன்னை மண்டாடிக் கேக்கிறன். கலியாணவீட்டிலை குழப்பம் செய்யாதை...

சிந்துவின் அம்மா கதவை நோக்கி விரைந்து போகின்றார். சிந்துவின் அம்மாவுடன் கமரா வாசல் நோக்கி நகருகின்றது / dolly tracking shot. பாதிக்கதவு திறக்கும்போதே ஜோதி ரீச்சரின் ஆரவாரம் கேட்கிறது. ரீச்சருடன் அவரைப்போலவே மூக்கும் முழியுமாக ஒரு சிறுபெண்ணும் நிற்கின்றாள் / dolly in.

பான்/ pan – கமராவினால் காட்சியைப் பெருக்கிக் காட்டல்.

ஜோதி ரீச்சர்: (முகமெல்லாம் சிரிப்புடன்) இது என்ன வாசலிலை மூங்கில் மரமெல்லாம் வச்சிருக்கிறியள்...

(சுற்றுமுற்றும் பார்த்தபடியே பாடத் தொடங்குகின்றார்.) மூங்கில் இலை மேலே... தூங்கும் பனி நீரே

சிந்துவின் அம்மா: (ஜோதி ரீச்சர் ஆரம்பிக்க, சிந்துவின் அம்மா தொடர்கின்றார்) தூங்கும் பனி நீரை... வாங்கும் கதிரோனே

இருவரும் கட்டிப்பிடித்து சுழன்றடிக்கின்றார்கள்.

ஜோதி ரீச்சர்: எனக்கொரு சிறகில்லையே ஏங்கும் இளமைக்குத் துணையில்லையே... குளிருக்கு நெருப்பில்லையே பெண்ணின் குணத்துக்கு மனம் இல்லையே (வீட்டின் சுவர்புறம் திரும்பி, கண்ணைக் கசக்கிக் கொள்கின்றார்)

சிந்துவின் அம்மா: சரி.... சரி... அதை விடு. இப்ப சந்தோஷமா இரு (சிந்துவின் அம்மா ஜோதி ரீச்சரை தேற்றிக் கொள்கின்றார்)

ஜோதி ரீச்சர்: மகளைத் தெரியுந்தானே! ஏழாம்வகுப்புப் படிக்கிறாள். உன்னுடைய வீட்டுக் கலியாணம் எண்டபடியாலை கூட்டி வந்தேன்.

சிந்துவின் அம்மா: வாம்மா... வந்து இந்தச் செற்றியிலை இரு (சிறுமியை ஆதரவாகத் தடவி உள்ளே கூட்டி வந்து செற்றியில் இருத்துகின்றார்)

ஜோதி ரீச்சர்: அது சரி.... எங்கே உன் கதிரவன்?

சிந்துவின் அம்மா: ஹோலிலை நிறைய வேலையள் இருக்கெண்டு மகனையும் கூட்டிக்கொண்டு போயிட்டார். சீக்கிரம் வந்திடுவினம்.

ஜோதி ரீச்சர்: எங்கே சிந்து? என்னுடைய ஒரு ஸ்ருடண்டிற்கு மேக்கப் போடுறது, எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்குத் தெரியுமாடீ

சிந்துவின் அம்மா: உதைப் போய் அவளிட்டைச் சொல்லு. எல்லாத்துக்கும் முதல் உன்னை என்ரை நண்பிகளுக்கு அறிமுகப்படுத்த வேணும். நிறைய ஃபிரண்ட்ஸ் கிச்சினுக்கை நிக்கினம். உன்னை முதலிலை அவைக்கு introduce பண்ணிட்டு, அப்புறமா சிந்துவிட்டைக் கூட்டிப் போறன்.

காட்சி 4

உள்

சிந்துவின் அறை

பகல்

ஜோதி ரீச்சர் அறைக்குள் நுழைந்ததும் சிந்துவைக் கட்டிப்பிடித்துக் கொஞ்சுகின்றார்.

ஜோதி ரீச்சர்: நீ என்னுடைய மகளைப் போல...

சிந்து கண் கலங்குகின்றாள். கண்ணில் இருந்து நீர்த்துளிகள் விழுகின்றன.

ஜோதி ரீச்சர்: நீர் என்னட்டை இலங்கையிலை ஆறாம் வகுப்பு மட்டும் படிச்சிருக்கிறீர் என்ன?

சிந்து: ஓம் ரீச்சர். நீங்கள் எங்களுக்கு சயன்ஸ் படிப்பிச்சதோடை, நீங்கள் தானே எங்கடை வகுப்புச் ரீச்சரும்.

ஜோதி ரீச்சர்: உம்முடைய தம்பியும் என்னட்டைப் படிச்சவன் தானே!

சிந்து: இல்லைச் ரீச்சர்... அவனுக்கு அப்ப சின்ன வயசு.

ஜோதி ரீச்சர்: சரி... சரி... இப்ப சொல்லும்... அப்பவெல்லாம் என்னைப் பற்றி என்னவெல்லாம் கதைச்சிருப்பியள்?

சிந்து: (தயங்கியபடியே) சொல்லலாம் தானே!

ஜோதி ரீச்சர்: தாராளமா...

சிந்து: நீங்க அப்ப நல்ல மெல்லீசு. சீலை உடுத்தி, மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்டு நடந்து வரேக்கை நடிகை சோபா மாதிரி இருப்பியள். உங்கடை குரல்கூட அப்பிடியே சோபா மாதிரித்தான் இருக்கும். ஆனா என்ன? உங்களைத் தூரத்திலை கண்டவுடனேயே எங்களுக்கெல்லாம் பயம் பிடிச்சிடும். நல்லாப் படிப்பிப்பியள், ஆனா பொல்லாத ரீச்சர்... நீங்கள் படிப்பிக்கேக்கை நாங்கள் எல்லாம் உங்களையே பாத்துக் கொண்டு நிப்பம்...

ஜோதி ரீச்சர் வெட்கப்படுகின்றார். கதைத்துக் கொண்டே ஜோதி ரீச்சர் சிந்துவுக்கான அலங்காரத்தைத் தொடங்குகின்றார். சிந்துவைத் தேவதையாக மாற்றுகின்றார். அவளுக்கான சீலையை அணிவிக்கும்போதும், மார்புகளைத் தீண்டும் போதும் சிந்து வெட்கத்தில் கூனிக்குறுகிப் போகின்றாள். அதை அவதானித்த ரீச்சர், உரையாடலைத் திசைதிருப்புகின்றார்.

ஜோதி ரீச்சர்: நான் வெளிநாடு வருவன் எண்டு ஒருநாளும் நினைச்சும் பாக்கேல்லை. அதாலை இங்கிலிஷ் படிக்கிறதிலை துளியும் அக்கறை காட்டேல்லை. அதுக்கு இன்னுமொரு காரணம்... எங்கடை தமிழ் வாத்தியார். ஜப்பான், ரஷ்யா, சீனா போல நாங்களும் எங்கடை மொழியில் படிக்கும் காலம் இந்தா வந்துவிடும் எண்டு அடிக்கடி சொல்லுவார். யூனியிலைகூட இனிமேல் தமிழில் எல்லாப் புத்தகங்களும் எழுதப்பட்டுவிடும் எண்டும் சொல்லுவார். அந்த மனிசன் இதையே அடிக்கடி எங்கட காதுக்குள்ளை ஓதும். அந்தத் தமிழ் வாத்தியை நான் பிறகு ஒருக்காலும் காணேல்லை. கண்டிருந்தா அவற்ரை காதைக் கடிச்சுத் துப்பியிருப்பன். உண்மையில நாங்கள் எத்தனை மொழியளைப் படிக்கிறோமோ அவ்வளவுக்கு நல்லது.

நீங்கள் எல்லாம் சின்ன வயசிலேயே புலம்பெயர்ந்து வந்துட்டீங்கள். அதாலை எல்லாத்தையும் ஈசியா அடப் பண்ணிட்டியள். எனக்கும் இஞ்சை ஆசிரியத்தொழில் பாக்க விருப்பம் தான். மொழி ஒரு பிரச்சினை. காலமும் நேரமும் கை கூடி வரவேணும்.

சிந்து: ஏன் ரீச்சர்..... உங்கள் ஹஸ்பண்ட் வேலைக்குப் போறதில்லையா?

ஜோதி ரீச்சர் சிறிது நேரம் ஒன்றும் கதைக்கவில்லை. தொடர்ந்தும் சிந்துவுக்கு மேக்கப் செய்கின்றார். சிந்துவுக்கு தன் பள்ளி ஞாபகங்கள் ஃபிளாஷ் பேக்காக வந்து போகின்றன.

ஃபிளாஷ் பேக்/ Flash back (ஜோதி ரீச்சர் கரும்பலகைக்கு முன்னால் நிற்கின்றார். மாணவர்களைப் பார்த்து, கத்திச் சொல்கின்றார்.

“ஸ்ருடன்ஸ்.... நீங்கள் உங்கட வாழ்க்கையிலை, எந்த ஒரு நிலையிலும், உங்களை ஒருநாளும் விட்டுக் கொடுக்காதீர்கள்”

சிந்து மனதிற்குள் சொல்கின்றாள். “எந்த ஒரு நிலையிலும் விட்டுக்கொடுக்க வேண்டாம் எண்டு சொன்ன ரீச்சரே, இண்டைக்கு தன்ரை வேலையை விட்டிட்டு வேறை வேலை பாக்கிறார்”

ஜோதி ரீச்சர்: (சிந்துவைக் கூர்ந்து பார்க்கின்றார்) சிந்து... நீர் முந்தி சரியான துடுக்குத்தனம்... இப்ப அமைதி...

ஜோதி ரீச்சர் குனிந்து நிமிர்ந்து, சிந்துவை அலங்கரிக்கும் போதெல்லால், அவரின் கழுத்திலிருந்த தாலி சிந்துவின் முகத்திற்கு முன்னே ஊஞ்சலாடுகின்றது.

சிந்து: ரீச்சர்... ஏன் உங்கட ஹஸ்பண்ட் என்னுடைய கலியாணத்துக்கு வரல்லை...

ஜோதி ரீச்சர்: சிந்து... அகதி வாழ்க்கையின்ரை அவலங்களிலை இதுவும் ஒண்டு... நான் இந்தத் தொழிலைச் செய்யிறதுக்கு ஆருடைய வற்புறுத்தலும் காரணம் இல்லை. உழைத்துச் சாப்பிட வேணும். என்ர குழந்தைக்கு நல்ல கல்வி வேணும். அவ்வளவும் தான்.

சரி... சரி... இதையெல்லாம் போய் நான் உமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறன். ஒருக்கால் கண்ணாடியிலை பாருங்கோ... எப்பிடி இருக்கிறியள் எண்டு. எல்லாம் சரியெண்டா ஃபைனல் ரச் அப் செய்யலாம். (சிந்துவைப் பிடித்து கண்ணாடியருகே கூட்டிச் செல்கின்றார்)

சிந்து நிலைக்கண்ணாடிக்குள் தன்னைப் பார்த்து ஆச்சரியப் படுகின்றாள். அவளால் அவளையே நம்ப முடியவில்லை. ஒரு அழகு தேவதை போல காட்சி தருகின்றாள். கண்ணாடிக்குள் ரீச்சரும் அழகாகத் தெரிகின்றார்.

சிந்து: ரீச்சர்... நீங்களும் ரொம்ப அழகா இருக்கிறீங்கள்... நடிகை ஷோபா மாதிரி.

ரீச்சர் வெட்கத்தில் தலை குனிகின்றார்.

ஜோதி ரீச்சர்: சிந்து.... நீர் நல்ல வடிவா இருக்கின்றீர். அப்பா அம்மாவோடை வளருற பிள்ளை எப்பவும் நல்ல வளர்ப்புடன் தான் இருக்கும்.

சிந்து : தாங்ஸ் ரீச்சர்

ஜோதி ரீச்சர்: மகளே! ஒண்டு சொல்லுவன். வரப்போகிற உன் கணவனை போதைக்கு அடிமையாகாமல் பாத்துக் கொள்.

சிந்து: காதலிச்சு, அப்பா அம்மா சம்மதத்தோடை எங்கட கலியாணம் நடக்குது ரீச்சர்

ஜோதி ரீச்சர்: அப்பிடியா? லக்கி கேர்ள். அம்மாவைப் போல. உன்ர வாழ்வு சிறக்க என்ரை வாழ்த்துகள்.

உன்ர வெடிங் டேயண்டு ஒரு குட் நியூஸ் சொல்லப் போறன். கேள். உன்ரை ஜோதி ரீச்சர், கூடிய சீக்கிரம் ஒஸ்ரேலியாவிலை ரீச்சராகப் போகின்றா...


சிந்துவும் ஜோதி ரீச்சரும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் சிரிக்கின்றார்கள். உள்ளே ஆரவாரம் கேட்டு, சிந்துவின் அம்மா வந்து கதவைத் திறந்து எட்டிப் பார்க்கின்றார்.

சிந்துவின் அம்மா: ரீச்சரும் ஸ்டுடண்டும் எத்தனையோ வருஷங்களுக்குப் பிறகு சந்திச்சிருக்கிறியள் என்ன...? அதுதான் ஆனந்தக் கண்ணீர் விடுறியள்..

(முற்றும்)

சு.திருப்பரங்குன்றன், இலண்டன்

# அறம்



வயலெங்கும் கதிர்கள் வனமெங்கும் மலர்கள்
வற்றாத கிணற்றுடன் நீர்நிலைகள்
நயமான கலைகள் நாள்தோறும் இசைகள்
நற்றமிழ் முழங்கும் கலையரங்கள்
பயம்வந்து ஆடும் படலைகள் மூடும்
பருந்துகள் வானிலே கூடும்
அயராது ஓடி ஆக்கங்கள் தேடி
ஆனபல கதைகளோ கோடி

தேவாலய மணியும் குர்ரானின் ஒலியும்
தெவிட்டாத தேவார இசையும்
பாவாயிரம் பெற்றோம் பழந்தமிழ் கற்றோம்
பண்புதரும் வாழ்வுமுறை உற்றோம்
பூவாகப் பூக்கும் புன்முறுவல் சேர்க்கும்
போகுமிடம் அன்புதனை வார்க்கும்
வாவா வென்றெம்மை வரவேற்கும் தன்மை
வையத்துள் தாய்மண்ணே உண்மை

விண்ணதிர வேட்டு வெளியிலே பூட்டு
விடியும்வரை கேக்கும் அந்தப்பாட்டு
கண்துறத்த நீரைக் கலங்கவைத்த போரை
காட்டியது எம்வீட்டுக் கூரை
மின்சார மில்லை மிகைப்படுத்த லில்லை
மிதமான வாழ்விலில்லைத் தொல்லை
இன்பமான வாழ்வு இடையிடையே சாவு
இருந்தாலும் மனதிலில்லைத் தாழ்வு

பாட்டியின் கதையும் பாற்சோறு நிலவும்
பாசத்தைப் பகிரும் நல்லுறவும்
காட்டிய பணிவும் கண்ணிய வாழ்வும்
கைகூப்பிக் கனம்செய்யும் பண்பும்
கூட்டிய அறிவும் குறைவற்ற நட்பும்
கோமானாய் தாய்தந்தை வளர்ப்பும்
ஈட்டிய மதியும் இழிவான சதியும்
எப்படி ஏற்றிட முடியும்

வானுயர மாடம் வகைவகையாய் வேடம்
வணங்குதலம் போட்டிதனைப் போடும்
காணுமிட மெங்கும் கண்கவரத் தொங்கும்
காசெதிரே மற்றவைகள் மங்கும்
தானம்செய்யும் சிலரும் தரமறுக்கும் பலரும்
தவிடுபோல் குடமுழுக்கு முறையும்
ஊனமுற வைக்கும் உண்மைதனைப் பொய்க்கும்
ஒருபங்கு போதுமுயிர் மெய்க்கும்

பயம்தரும் பக்தி கிடைத்திடும் முத்தி
நம்புவார் நம்பிடும் சக்தி
வயலுக்கொரு கோவில் வானுயர வாயில்
வழியற்ற மக்களோ நோயில்
இயல்பான மனமும் முடியாமல் சனமும்
இதைமாற்ற உதவாத தனமும்
அயனாய்ச் சிவனாய் அல்லாவாய் இயேசுவாய்
அடைபட்டு இருக்கிறார் கல்லாய்.



கவிஞர் சாய்சக்தி சர்வி, பொள்ளாச்சி

தனக்கென்று கொஞ்சம் தேநீர் மிடறுகளை
ஒதுக்கிகொண்டாள் அவள்
முதல் மிடறுக்கு காலையை முழ்கடித்தவள்
இரண்டாவது மிடறுக்கு
வசவுகளை முழ்கடிக்கிறாள்
ஒட்டிய கண்களை துடைத்துக்கொண்டு
ஆயத்தமானவள்
ஒவ்வொரு நாளையும் தேநீர் மிடறுக்குள்
சுருக்கிகொள்ள
தேங்கி கிடைக்கும் வாழ்வை
நகர்த்திச்செல்கிறது
அருகே சிந்தி கிடந்த தேநீர் துளிகள்.

நேசன் மகதி

# செம்மறி நீயும்...

தலைதனை தாழ்த்தி
பயணிக்கும் பாதைகளில்
கூட்டமாய்
ஒன்றோடு ஒன்றாய் உரசி
மேயும் வெளிகளில்
முன்செல்லும் ஆடுகளின்
பின்னால் ஒவ்வொன்றாய் கூடியும்
கலைந்தும் பின் ஒன்றெனக்கூடும்
செம்மறி ஆட்டு மந்தைகளாய் உன்
நினைவுகள்...!

பெ.விஜயலட்சுமி, காஞ்சிபுரம்

# ஹைக்கூ

ஒடிந்த கிளைக் கூட
தாங்கிக் கொள்கிறது
இறகை

❦

அடர்ந்த மரங்கள்
நிழல் தர மறுத்தன
சுவற்றில் ஓவியம்

❦

இருவரின் உரையாடலைக் கேட்டபடியே மெல்ல
நகர்கிறது
வாய்க்காலில் நீர்

❦

உறங்கும் குழந்தைக்கு
கருவறையை உணர்த்துகிறது
புடவைத் தொட்டில்

❦

குளித்தெழுந்த நிலா
தலைத்துவட்டி விடுகிறது
மேகம்

❦

மலரை ஏந்தும் பொழுதில்
ஒட்டிக் கொள்ளும் நிறம்
மருதாணிக் கரம்

பெருங்காட்டை சுமந்தப்படி
நெடுந்தூரம் பயணிக்கிறது
பறவை

❦

வானத்தையே கிழித்துக் கொண்டு
பயணிக்கிறது
ஓடம்

❦

மரங்களின் கூட்டுப் பிரார்த்தனைக்கு
செவி சாய்க்கிறது
வானம்

❦

ஒளிரும் நிலவை
அசைத்துப் பார்க்கிறது
மரக்கிளை

❦


மறைக்கப்பட்டாலும்
ஒளி வழங்க தவறுவதில்லை
மேகச் சிறைக்குள் சூரியன்

❦

உளி பேசும் மொழிக் கேட்டு
கண் விழிக்கிறது
சிலை

❦

திருவிழா முடிந்ததும்
தனித்து விடப்பட்டது கோவிலில்
மண் குதிரை



சரண்யா ரவி, கோவை.

# தாய்மை

மாதங்கள் ஒன்பதைக் கடக்க அந்நாளும் வந்தது,
கேள்விக்குறியென வளைந்து.,
நீ என் கருவறையில் சுருண்டிருப்பதைப் போல
நானும் சுருள்கிறேன்...

சுருக்கென்று தைக்கப்பட்ட ஒற்றை ஊசியில் பாதி
உடல் மரத்துப் போக.,
மின்சார வலிகள் வழுவிழக்க.,
அரைகுறை மயக்கத்தில், பாதி மரணித்திருக்க.,


நீ பிறப்பெடுக்கவே.,
என் பிறப்புறுப்பின் மேல் சரக்சரக்கென்று
கத்தியிடும் சங்கீதம் செவிகள் உணர்ந்திருக்க.,
மேலும் கீழுமென நெம்பி இழுக்கும்
அதிர்வுகளில், செவிலியர் கைகளில் என் கைகள்
அமிழ்ந்து புதைய, அரைப்பிணமென கிடக்கும்
என்னுடல் உன் வரவையெண்ணி!!!
புதுக் குருதி ஊற்றெடுக்கிறது!!!

சுற்றிலும் நிற்கும் மருத்துவக்குழு உதவியுடன்,
வலியும், வேதனையும் மாறி மாறி வதைக்க.,
முதன்முறை அழுகுரல் சங்கீதமென ஒலிக்கிறது!!!
மீண்டும் பிறக்கிறேன்!!!

இமைக்காமல் ரசிக்கும்போதே மயக்கம்
எங்கேயோ அழைத்துச்செல்ல, நினைவுக்கு
எட்டியபோதெல்லாம்,
ஒன்றிற்கு நூறுமுறை பாய் or கேர்ள் என்பதை
கேட்டதுதான்!!!

பதிலை பெரும்முன் மீண்டும்
மறந்து போனது மொத்தமும்.,
என்னவன் பெயரை தவிர!!!
சற்று நேரத்தில் மெல்ல மெல்ல
திரும்புகிறேன் நினைவுகளுக்கு!!!
முதலில் நினைவுக்கு
எட்டியதென்னவோ என்னவன்
முகம் மட்டும்!!!

மறுபிறவியென விழிக்கையில்.,
காணத் துடித்தது என்னவனோடு
சேர்த்து.,
என்னில் பதியென துளிர்த்த
அரும்பையும்!!!
முகமலர்ச்சியுடனும்,
அரைமயக்கத்திலும்
பிஞ்சுபாதங்களை கண்டு
அகமகிழ்ந்த அவ்வினாடிகள்
உணர்த்தியது தாய்மையை!!!



**கோ. தனுசன், இலங்கை.**

**காற்றின் மொழி**

கானகத்தில் காற்றாகி
உயிரிடத்தில் மூச்சாகி.
உடலிடத்தில் குரலாகி
வேயிடத்தில் இசையாகி.

இலையுடனே கதைபேசி
அலையுடனே நுரைபேசி.
சிலையான மனிதராசி
உனைமறந்தார் உயிர்வாசி.

நீர்சுமந்த முகிலை
நீசுமந்து வந்தென்.
மண்ணில் மழைகிறாய்
உந்தன் நிலைதான் என்ன?


வளியின் அசைவில்
ஒலியின் சத்தம்.
உலகில் ஒலிக்கும்
செவிகள் அறியும்.

எந்தன் மொழியை
எவர்தான் அறிவார்.
நானோ முகாரிராகம்
முகமில்லை பாவம்.

வாடையை நாளை
வாடகை விடலாம்.
தென்றலை நாளை
தெருவில் விற்கலாம்.

வேர்களை வெட்டியே
நகரங்கள் அமைக்கலாம்.
பூமியில் வளிக்கொன
போர்களும் நடக்கலாம்.

கருத்துக்கள் கூறியே
காலத்தை ஓட்டலாம்.
காரியம் நடத்திட்டால்
உலகையே காக்கலாம்.



# ஓடும் வெண்முகிலாய்

கமலினிகதிர் சுவிற்சர்லாந்து

சுற்றிவர மலைகளைத் தனதாக்கிக் கொண்டிருந்த சுவிசின் அரோ நகரத்தின் வெண்முகில் மெல்ல மெல்ல நகர்ந்தபடியிருந்தது.அந்த வெண்; முகிலோடு மிதந்து போக வேண்டும் போலிருந்தது எனக்கு. கொதித்துக் கொண்டிருக்கும் எனது மனது அங்கு வீசுகின்ற காற்று இதமாக வீச மாட்டாதா என்று ஏங்கியது.அந்த வெட்ட வெளியில் வீசும் காற்றெல்லாம் தூய்மையாக எந்த மாசுமின்றி இதத்தை மட்டுமே தந்து என்னை ஆற்றுப்படுத்தாதா என்று ஏக்கத்துடன் நின்றேன். முகில்களுக்கு கொஞ்சம் கீழே பண் இசைத்த படி சுதந்திரமாகப் பறக்கும் பறவைகளுடன் உறவாட ஆசையாக இருந்தது.மெல்லிய கீதம் இசைத்தபடி அங்கிருந்து கீழே மெல்லென இறங்கிவரும் மழைத் தூறல்களை வழியிலேயே கையிலேந்தி மகிழ மனம் பர பரத்தது. இவ்வளவு காலமும் கண்ணுக்குத் தெரியாமலிருந்த பிரபஞ்சம் இப்போது அழகாகத் தெரிகிறது.இதுவரை அவற்றை இரசிக்க நேரம் இல்லாமல் இருந்திருக்கின்றேனா?அல்லது பார்க்கும் மனதை தொலைத்திருந்தேனா?.கொதிக்கும் எனது மனதை ஆற்ற வழியின்றித் தவித் தேன்.நான் விட்ட தவறுகளை சரிப்பண்ண ஒரேயொரு சந்தர்ப்பம் கிடைக்க மாட்டாதா என்று மனம் அங்கலாய்த்தது.யாராவது எனது மனதுக்குள் கை வைத்து என்னுடைய தவறுகளை எடுத்து வெளியில் போட்டுவிட மாட்டார்களா என்று வார்த்தைகளால் சொல்லத் தெரியாத தவிப்பு என்னைப் போட்டுக் குடைந்து கொண்டேயிருக்கிறது. காலங் கடந்த நடக்க முடியாத சின்னத்தனமான ஆசை.புரிந்தது.நடக்காத விடயமென்றாலும் ஆசைப்பட மட்டுமே என்னால் முடிந்தது.

மனம் கனக்கும் நேரங்களிலெல்லாம் இப்படி உட்கார்ந்து ஏதேதோ தொடர்பே இல்லாத நினைவுகளில் மூழ்கியிருப்பது எனக்கு வழக்கமாகிவிட்டது.எவ்வளவு ஆசையுடன் எத்தனை கனவுகளுடன் என் திருமண வாழ்க்கையைத் தொடங்கினேன். எல்லாமே ஓடும் முகில்கள் போல் கலைந்து போனதே.எல்லாவற்றுக்கும் நானே காரணம் என்ற உண்மை வலித்தது.ஆரம்பத்தில் மனைவி பிரிந்து போகப்போகிறோம் என்று சொன்னபோது அது எனது மனதை அவ்வளவாகப் பாதிக்கவில்லை.அவை வெறும் வார்த்தைகளாகவே இருந்தது.ஆனால் இப்போது மனைவி,குழந்தைகள் என்று அவர்களின் பிரிவைத் தாங்கவே முடியவி ல்லை.ஒன்றாக வாழும்போது என் குழந்தைகளை,என் மனைவியைக் கொண்டாடவோ புரிந்து கொள்ளவோ தவறிவிட்டேனே.நண்பனுடன் என் வேதனையைப் பகிர்ந்தபோது அவன் கூறினதை பலமுறை அசை போட்டுவிட்டேன்.¨ஆரம்பத்தில் மனைவியின் பிரிவு உன்னைப் பாதிக்காத அளவுக்கு இருந்ததென்றால் யோசித்துப் பார்.உங்கள் இரண்டு பேருக்கும் எவ்வளவு இடைவெளி இருந்திருக்க வேணுமென்று.அப்படியொரு உறவை உன் மனைவி நீடிப்பதால் எந்தப் பயனுமேயில்லையே.மனைவியின் உழைப்பை உறிஞ்சி நீ சுகம் கண்டிருக்கிறாயே ஒழிய அவவை நீ உண்மையாக நேசிக்கவில்லை.நேசிப்பு

விட்டுக் கொடுக்கச் சொல்லும்.வேலைகளைப் பகிரச் சொல்லித்தரும்.நோயுற்ற நேரத்தில் பக்கத்தில் இருக்க மனம் விழையும்.நீ இதில் எல்லாம் தவறு செய்திட்டு இப்ப பிள்ளைகள்,மனைவி என்று நினைத்துப் புலம்புகிறாய்.எவ்வளவுதான் உன் மனைவியால் சகித்துக்கொண்டு போக முடியும்?சொல் பார்க்கலாம். தன்னால் முடிந்தளவிற்கு உன்னை சகித்துக்கொண்டு உன்னை மாற்ற முழு முயற்சியும் எடுத்து தோற்றுப் போய் கடைசியில்தானே இந்த முடிவெடுத்திருக்கிறா. கடைசி மட்டும் நீ மாறாமல் இழுத்துக் கொண்டே போகட்டும் என்று மட்டுமே நினைத்தி ருக்கிறாய். இதனால் பிள்ளைகள் பாதிக்கப்படுவதைக் கூட உன்னால் உணர முடியவில்லையென்றால் அப்பா என்று சொல்லவே உனக்குத் தகுதியில்லை.மனைவியின் உணர்வுகளை மதிக்காத நீ அதேமாதிரி பிள்ளைகளின் உணர்வுகளுக்கும் மதிப்பு கொடுக்காத போது மனைவி அவர்களை சரியாக வளர்த்தெடுக்கப் பிரிந்து போனதில் ஒரு தப்புமி ல்லை.துணையின் உணர்வை மதிக்காத போது அது ஒரு ரொக்சிக் றிலேஷன்சிப்தானே. அதை நீடிக்கிறதாலை உன் மனைவியை மனநோ ய்க்குள்ளேயோ,தற்கொலைக்குள்ளேயோ தள்ளி விடுமென்பதை யோசித்தாயா?' நடுநிலையிலிருந்து பேசும் நண்பனின் பேச்சுக்கு மறுப்பேதும் சொல்ல என்னால் முடியவில்லை.ரொக்சிக் றிலேஷன்சிப் நச்சுஉறவு அந்தச் சொல்லின் அர்த்தம் என்னை நடுங்கச் செய்தது.

அவளுடன் ஒரு பொய்யான நச்சுத்தன்மையுடனான ஒரு உறவுதான் வைத்திருந்தேனோ?அப்படித்தான் இருந்திருக்கிறேன்.மனைவியை என் குழந்தைகளை நான் உண்மையாக நேசிக்கவில்லையோ?அவளை ஒரு இயந்திரமாய்த் தான் பார்த்திருக்கிறேனோ?என்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்களைப்போல் பாவித்திருக்கிறேன்.பிரிவோம் என்று சொன்னபோது உலகம் என்ன சொல்லும்.நான் விட்டிருந்தால் பரவாயில்லை.மனைவி விட்டிட்டுப் போனால் என்னை யார் மதிப்பினம் என்ற எண்ணமும்,என் தேவைகளை இனி யார் செய்வார் என்ற எண்ணமுமே மேலோங்கி நின்றதை ஒப்புக்கொண்டேயாக வேண்டியிருந்தது. கணவன் மனைவிக்கிடையில் காதல் என்ற உணர்வு நூல் போல் ஓடிக்கொண்டேயிருக்க வேண்டும் என்பது இப்போது உறைக்கிறது.நான் ஒரு இயந்திரவாழ்க்கைதான் இவ்வளவு நாளும் வாழ்ந்திருக்கிறேனோ? காதலித்து எத்தனையோ போராட்டத்திற்குப் பின் கல்யாணம் செய்த மனைவியை காதலியாய் கண்ணுக்குள் வைத்து வாழத் தவறீற்றேனே. கணினிக்குள்ளும், கைத்தொலைபேசிக்குள்ளும் எங்கள் வாழ்க்கையைத் தொலைத்திருக்கிறேனா என்ற கேள்விக்கு எனக்கு பதில் தெரியவில்லையென்பது இப்போது உறுத்துகிறது.அவர்களது சிரிப்பில் நான் கரைந்து போனதாக ஞாபகம் இல்லை என்பதும்,அவர்களோடு விளையாடி மகிழ்ந்திருக்கிறேனா என்பதும் நான் தவற விட்ட மாபெரும் தவறுகளென்பது இப்போது பொட்டில் அறைந்தது போல் என்னை முறைக்கிறது.எனக்குப் பிடித்த உணவை மனைவி பார்த்துப் பார்த்துச்செய்த நாட்களில் கூட அவற்றை நான் பாராட்டியதோ,அன்போடு முத்தமிட்டதோ கிடையாது என்ற உண்மை கசப்புடன் என் நெஞ்சில் இறங்கியது.கேட்டால் மட்டும் நல்லாயிருக்கென்று மனதோடு ஒட்டாமல் இயந்திரத்தனமாகத்தான் பதிலளித்திருக்கிறேன் தாங்ஸ், சொறி என்ற வார்த்தைகளெல்லாம் மனதிலிருந்து வராமல் வெறும் சொற்களாக மட் டுமே பயன்படுத்தியிருக்கிறேன். வெறும் மன்னிப்பு என்ற சொல் அமிலமாகக் கொட்டிய வார்த்தைகளின் தாக்கத்தைக்குறைத்துவிடுமா என்ன என்று மனைவி கூறும் போதெல்லாம் காதிலேயே விழுத்தாமல் சென்றது.இப்போது வலிக்கிறது.என் மனைவியிடமோ,குழந்தைகளிடமோ என் அன்பைக் காட்டத் தவறி விட்டேன்.பிள்ளைகளுக்கு வைத்திருக்கும் உணவைக்கூட நான் எடுத்து சாப்பிட்டுவிட்டு கேட்டால் சாதார ணமாக அது உங்களுக்கு வைத்ததென்று எனக்குத் தெரியாதென்று சொல்லி அதைக் கடந்து சென்றிருக்கிறேன்.என் மனைவி வேலை முடிந்து வந்து உணவைக் காணாமல் திரும்பவும் பிள்ளைகளுக்கு செய்து கொடுத்து படுக்கைக்குப் போன நாட்கள் பல என்பது இப்போ உறைக்கிறது.அதை நான் சொறி என்று சொல்லியபடி ஹெட்போனை மாட்டிக்கொண்டு பாட்டைக் கேட்டபடி கடந்திருக்கிறேன்.ஒருநாள் தவ றாகச் செய்திருக்கலாம்.ஆனால் பல நாட்கள் நான் இப்படிச்செய்து விட்டு சொறி என்ற ஒற்றைச்சொல் எல்லாவற்றையும் மாற்றிவிடும் என்று நினைத்திருக்கிறேன். நட்புவட்டத்திற்கு கொடுத்த முக்கியத்துவம் மனைவிக்கு கொடுக்கவேயில்லை.அதுதான் உண்மை.நண்பர்களுடன் அரட்டையடிப்பதிலும் முகநூலில் பதிவிடுதலிலும்,யாரும் பகிர்ந்ததை படிப்பதிலும்,நடிக,நடிகையரின் அந்தரங்க விடயங்களை அறிவதிலும் என் பொன்னான நேரங்களைச் செலவிட்டிருக்கிறேன் என்பது எவ்வளவு சின்னத்தனமானது என்பது இப்போது விளங்குகிறது. காலங்கடந்த உணர்வால் எந்தப் பலனுமில்லை.நான் கொண்டாடிய நண்பர்கள் கூட "உனக்கு கல்யாணம் செய்யத் தகுதியில்லை.மனைவி,குழந்தைகள் என்று வாழத் தெரியவில்லை.மனைவியை தள்ளிவிட்டு உன் அம்மாவைக் கொண்டாடினாய்.அவரவருக்கு கொடுக்க வேண்டிய இடத்தைக் கொடுக்கத் தெரியாத உனக்கெல்லாம் எதுக்கு கல்யாணம்?இப்ப தெரியுதா மனைவியின் அருமை.மனைவி தாயாய் பராமரிப்பாள்.ஆனால் தாயால் மனைவியின் இடத்தைதர முடியுமா?"என்றுதான் சொன்னார்கள். இதற்கும் மேலாக எனது நண்பனொருவன்'கூகலில் நாரிசிஸ்சிற் என்று தேடிப்பார்.உன்னைப்போலத்தான் இருப்பார்கள்.அதை வாசித்துப் பார்' என்றான்.உடனேயே தேடி வாசித்த

எனக்கு தலை சுற்றியது.இந்த ஆளுமைச் சிதைவு எனக்கு இருக்கிறதென்பது மனைவி ‘கௌன்சிலிங் போங்கோ’என்று சொன்னபோது ‘எனக்கென்ன விசரா?’என்று சொன்ன வார்த்தை திரும்பத் திரும்ப வந்து தாக்கியது.

இத்தனைக்கும் எங்களது காதல் திருமணம்.வீட்டின் எதிர்ப்பைத்தாண்டி முனைப்பாகச் செய்த திருமணம். இருவருக்கும் எந்தவிதமான சாதி வேறுபாடோ,அந்தஸ்து வேறுபாடோ இருந்திருக்கவில்லை.ஆனால் என் பெற்றோரின் அகங்காரமும்,தங்கள் பிள்ளை தாங்கள் சொல்வதை மட்டுமே செய்யவேண்டுமென்ற அடக்குமுறையுமே எங்கள்திருமணத்தை எதிர்ப்பதற்கு காரணமாக இருந்தது.அது எனக்குப் புரிந்தாலும் என் பெற்றோரை மற்றவர்கள் முன் விட்டுக் கொடுக்கும் மனம் இல்லாமல் இருந்திருக்கிறேன்.அத்தோடு அர்ச்சனாவின் பெற்றோருடன் ஒப்பிட்டு என் பெற்றோரை விட அவர்கள் தோழமையுடன் எந்த எதிர்பார்ப்பு மின்றி நேசிப்பது கொஞ்சம் பொறாமையையும் வெறுப்பையும் தந்ததை நான் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.என் பெற்றோர் வசதியாக வாழ்ந்தாலும் என்னிடம் பணம் பெறுவது தங்கள் உரிமை என்று நினைப்பது எனக்கு அவமானமாக இருந்தது என்றாலும் அதை ஒப்புக் கொள்ளாமல் என் பெற்றோர் செய்வது சரியென்று மனைவியுடன் வாதாடியி ருக்கிறேன்.என்னை வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்கியதற்கு நான் நன்றிக்கடன் பட்டிருக்கிறேனென்று வாதாடியிருக்கிறேன்.அப்போது மனைவி சொன்ன வார்த்தை இப்போதுதான் புரிகிறது. ‘தாய் தகப்பன் என்ற வார்த்தையின் அர்த்தமே உங்களுக்கு புரியேலையா?பிள்ளைகளிடம் நன்றியை எதிர்பார்ப்பவர்கள் எப்படி பெற்றோராயிருக்க முடியும். நீங்க பெற்ற பிள்ளையா?அல்லது தத்துப்பிள்ளையா?’மனைவியை என் பெற்றோரிடம் மண்டியிட வைத்திருக்கிறேன்.அவர்களுடைய அங்கீகார த்திற்காக மனைவியை என்னவெல்லாமோ செய்ய வைத்திருக்கிறேன். எனக்காக மட்டுமே எல்லாவிதமான அவமானங்களையும் பொறுத்துக் கொண்டு இருந்திருக்கிறாள்.இப்போதெல்லாமே வெறுத்துவிட்டது.திரும்பத்திரும்ப செய்யும் என் உறவை இனியும் இழுத்துக்கொண்டு போய் பிள்ளைகளையும் அடிமையாக்க விரும்பவிலலை என்று அவள் சொன்னது விளங்குது.ஆனால் எனக்கு இவை விளங்கும்போது காலம் கடந்து விட்டது.

எல்லாம் ஆரம்பத்தில் நல்லாய்த்தான் இருந்தது. கல்யாணம் செய்யும் வரைக்கும் பொங்கி வழிந்து கொண்டு இருந்த காதல் கல்யாணத்தின் பின் எப்படி வற்றிப் போனது என்பது இன்னுந்தான் எனக்குப் புரியவில்லை.எனது அம்மா கிட்ட இல்லாது விட்டாலும் தொலைபேசி வழியாகப் பேசிப் பேசியே என்னைத் தன் கைக்குள் வைத்திருந்தாள். பெற்றோரை மகிழ்ச்சியாக வைத்திருக்காவிட்டாலோ,அவர்கள் மனம் வருந்தினாலோ பாபம் சுற்றிப் பிடித்திடும். உன்னுடைய பிள்ளைகளும் உன்னை நோகச் செய்வார்கள் என்று சொல்லிச் சொல்லியே அம்மா என்னை ஒரு விதமான பதட்டத்தில் வைத்திருந்தாள்.அது எனக்குப் புரிந்தாலும் அர்ச்சனா சொல்லும்போது ஒத்துக்கொள்ள முடியவில்லை. என் பெற்றோர் தரக்குறைவாக நடப்பது எனக்கு அவமானமாக இருந்தாலும் பூசி மெழுகியே வந்தேன் .அது மட்டுமல்லாமல் அர்ச்சனாவைப் பற்றி நேரம் கிடைக்கும் போதெல்லாம் குற்றங்குறை சொல்வதே வழக்கமாய் இருந்த அம்மாவை மாற்ற நான் முயற்சிக்காததும் மனைவிக்கா கப்பேசி அவளைப் பாதுகாக்காத கையாலாகத்தனமும் இப்போது என்னை வெட்கப்பட வைக்கிறது. ‘பிள்ளைகளை வாங்கிக் கொண்டு அவளைக் கலைத்துவிடு.நாங்கள் பார்த்துச் செய்து வைக்காத கல்யாணம் எப்படி நல்லாயிருக்க முடியும்?’என்று அம்மா ஒருமுறை சொன்னபோது மறுத்துச் சொல்லாத கோழையாக இருந்திருக்கிறேன். அந்தக்கதைகள் தான் என் ஆழ்மனதில் பதிந்து என்னை அர்ச்சனா விடமிருந்து பிரித்ததோ என்று இப்போது யோசிக்கிறேன்.எங்கள் கல்யாணத்துக்குப் பிறகு கூட என் பெற்றோர் அர்ச்சனாவிடம் சாதா ரணமாக இருப்பது போல் நடித்துக்கொண்டு அவள்மேல் வன்மத்தை வளர்த்துக் கொண்டு தான் இருந்திருக்கிறார்கள். நான்தான் அதை உணராமல் ஏமாந்திருக்கிறேன்.அவர்கள் என் மனைவியையும் பிள்ளைகளையும் தவறாகப் பேசும்போது கண்டிக்காமல் வாய்பேசாது இருந்திருக்கின்றேன்.ஆண்மை என்பது எது என்பது இப்போது உறைத்து எந்தப் பயனுமில்லை. கோழைத்தனமா அல்லது அசண்டைப் போக்கா அல்லது நாரிசிஸ்சிற் என்பதா விளங்கவில்லை. மனைவி குழந்தைளைப் பாதுகாப்பது என்பது மற்றவர்களின் விரும்பத்தகாத பேச்சுக்க ளிலிருந்தும் என்பது அப்போது தோன்றாமல் போயிற்று.அவர்களின் உடைகள் பற்றி,உணவு முறை பற்றி,படிப்பு பற்றி என்று எல்லாவற்றிலும் என் பெற்றோர் தலையிட்டபோது நான் பேசாமல் இருந்தது பெரிய தப்புத்தான்.

யோசிக்க யோசிக்க என் பக்கத்தில்தான் பல தவறுகள் இருப்பது புரிந்தது.முதல் குழந்தை பிறக்க பிரசவவலி வந்தபோது கூட அர்ச்சனா தானே தனியப்போய் அட்மிட் ஆனது அவளுக்கு எவ்வளவு வலியைத் தந்திருக்கும் என்பது இப்போது வலித்தது.அப்போது கூட அவளைப் பார்க்கப் போகாமல் அம்மாக்கு தொலைபேசியில் செய்தி சொல்லிக் கொண்டிருந்தது எவ்வளவு கேவலம்.அந்தநாட்களில் அம்மா ‘அவள் என்ன பெரிய தேவதையா?எல்லாத்துக்கும் நீ போகவேணுமா? எல்லாருந்தான் பிள்ளைப் பெறுகினம். அவளுடைய நடிப்பை நீ சட்டை செய்யாதை.கூட செய்து காட்டினால் உன்னை மதிக்க மாட்டாள்.நீ

உன்னுடைய மதிப்பைக் குறைக்காதை¨ அம்மாவைத் திருப்திப்படுத்துகிறன் என்று எவ்வளவு கீழ்த்தரமாக நடந்து விட்டேன்.இதற்குப் பிறகு கூட அர்ச்சனா கவலையைச் சொல்லிக் காட்டினாலும் தன் பெற்றோரு க்கோ,நண்பர்கள் வட்டத்திற்கோ சொன்னதில்லையே. சீ எவ்வளவு கீழ்த்தரமாக நடந்திருக்கிறேன்.இப்போது குத்திக்காட்டும் மனச்சாட்சி அப்போது எங்கேயிருந்தது. அம்மா எங்களைப் பிரிக்கிறதுக்கு என்னையே பகடைக்காயாக பாவித்திருப்பது இப்போதுதான் புரிந்தது. நான் வில்லங்கமாக கழுத்தைக் குடுத்திருக்கிறேன். அவளுக்கு தேவையான தருணங்களில் நான் எவ்வளவு பொறுப்பற்று இருந்திருக்கிறேன்.அம்மா வும்,நண்பர்களுந்தான் பெரிதென்று அவர்களுடன் என் நேரங்களைச் செலவழித்து வீண் பொழுது போக்கியிருந்தது இப்போது தான் அவமானமாக தெரிகிறது.ஆனால் என் நண்பர்கள் என்னைத் தவறாகப் பயன் படுத்தவில்லை.என் பெற்றோரே என் குடும்பப் பிரிவுக்கு முழுக் காரண கர்த்தாவாக இருந்திருக்கிறார்கள் என்பது இப்போது வலிக்கிறது.

நான் நோயுற்ற நேரத்தில் தாயாய் பார்த்த அவளுக்கு ஒரு சகமனிதனாகக் கூட நான் எதுவும் செய்யவில்லையே.முதலாவது குழந்தை பிறக்க இருந்த நேரத்தில் கூட நண்பர்களுடன் தீபாவளி பார்ட்டி கொண்டாடியது இப்போது நினைக்க அருவருப்பாக இருந்தது.நண்பர்கள் வீட்டு பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு சென்ற நாட்களிலெல்லாம் என் மனைவி குழந்தைளுடன் உட்கார்ந்திருந்ததைவிட நண்பர்களுடன் உட்கார்ந்து அரட்டை அடித்ததுதான் வழமையாக இருந்திருக்கிறது.அவள் பிரிந்து போன பிறகு இந்த சுயபரிசோதனையால் என்ன பலன்?இப்ப பாதிக்கப்பட்டது நாங்கதானே.மூன்று பிள்ளைகளுடன் பிரியும்போது அர்ச்சனா எவ்வளவு யோசித்திருப்பாள் .மனதால் எவ்வளவு உடைஞ்சு போயிருப்பாள்.வீட்டு வேலைகளில்கூட தான் உதவிகள் செய்யாததும் வேலைக்கும் போய்க்கொண்டு பிள்ளைகளையும் பள்ளிக்கு காரில் கூட்டிப்போய் கூட்டி வந்து அவர்கள் படிப்பிலும் உதவி செய்து வேலைக் களைப்பால் என்னுடன் கத்தும் போது ஆண் என்ற திமிர்த்தனத்துடன் தானே நடந்திருக்கிறேன்.பெண்மையை போற்றவோ, பெண்ணை மதிக்கவோ மறந்துவிட்டேனே.அம்மா சொன்ன நீ இடங்குடுத்தால் மதிக்க மாட்டாள் என்ற வார்த்தை மட்டுமே என் மூளையில் ஏறி உட்கார்ந்து என்னை இயக்கியிருந்தது போலும்.இப்போது தனிமை யில் உட்கார்ந்து யோசிக்கும்போது வெட்கமாக இருக்கிறது.எனது மகனுக்கு நான் எப்படி ஒரு உதாரணமாயிருக்கப் போகிறன்.பிள்ளைகள் என்னை எப்பிடி மதிப்பினம்?எவ்வளவு சுயநலமாய் இருந்திருக் கிறன்.பிள்ளைகளின் மனதின் ஒரு ஓரத்தில் என்றாலும் எனக்கு இடம் இருக்குமா?அவர்களது திருமண வாழ்வை எனது செயல்கள் பாதிக்காதா?ஆண்கபளென்றால் இப்படித்தானென்று என் மகள்கள் திருமணத்தை வெறுக்க மாட்டார்களா?அல்லது தங்கள் கணவன்மாருக்கு எங்கடை அப்பா எங்களிடம் அன்பாயிருந்திருக்கவில்லை என்று சொல்வார்களா? மகனும் என்னைப்போல் தன் மனைவியை நடத்திடுவானோ? மனம் சதா எண்ணியெண்ணி உழன்றது.

செல்லப்பிள்ளையாய் வளர்ந்த அர்ச்சனா என்னைக் காதலிச்சுக் கல்யாணம் செய்து என்ன சுகத்தைக் கண்டாள்.வெறும் பட்டப்படிப்பு மட்டுமே படித்திருந்த என்னை இந்தளவுக்கு உயர்த்தியது அவள் தானே. நான் பெரிய படிப்பாளி,அறிவாளி என்று என்னை நானே ஏமாற் றிக்கொண்டு அவளுடன் முரண்பட்டு காயப்படுத்தி,திரும்பவும் காயங்களை வாங்கிக் கொண்டு என்னத்தை நான் சாதித்தேன். சட்டென்று மாறும் வானிலை போல் எனது மனமும் மாறிக் கொண்டே இருந்தது. இந்த நிலையற்ற மனமும் பொறுப்புகளை ஏற்பதில் தயக்கமும்,தட்டிக் கழித்தலும்,நான் மட்டும் சொகுசாக இருக்க வேணுமென்ற மனமுந்தான் இப்ப என்னுடைய வாழ்க்கையைப் புரட்டிப் போட்டிருக்கிறது என்பதை இப்போது காலங்கடந்து உணர்கிறேனே. எவ்வளவு புத்திசாலியான,அழகான,செயற்திறன் மிக்க பணக்காரப்பெண் கிடைத்தும் எனக்கு வாழத் தெரியாமல் போட்டு உடைத்து விட்டு பெருமூச்சு விடுவது எவ்வளவு மடத்தனமாக இருக்கிறது.என்னை இப்படி வளர்த்த அம்மா மேல் கோபம் வந்தது. என்னுடைய குணங்கள் தெரியும்போது சொல்லி என்னைத் திருத்தேலையே.பட்டினத்தார் பாடிய ஒரு பாடல் நினைவுக்கு வந்தது.¨துள்ளித் திரிந்த காலத்திலே என் துடுக்கடக்கி பள்ளிக்கு அனுப்பி வைக்காத தந்தையாகிய பாதகனே'என்று தன்னைப் படிக்க வைக்காத தந்தையையே வைகிறார் பட்டினத்தார்;.இப்போதும் என்மேல் குற்றம் இல்லை என்றும் அம்மாவே என் குணப்பிழைகளுக்கு முழுப் பொறுப்பும் என்றுமே என்னால் நினைக்கத் தோன்றுகிறதே.இதுதான் அந்த ஆளுமைச் சிதைவோ?

படித்த என் மனைவியை உயர்த்த நான் என்ன செய்தேன்? மட்டந் தட்டித் தட்டி எனக்கு கீழ் வைத்திருப்பதிலேயே குறியாய் இருந்திருக் கிறேனே. என்னுடைய நண்பர்களெல்லாம் தங்கள் மனைவிமாருக்கு ஒத்தாசையாக இருந்து உயர்த்திக் கொண்டிருக்க நான் மட்டும் ஏன் இப்படி மட்டமாக நடந்திருக்கிறேன்.நண்பர்களைக் கூப்பிட்டு அடிக்கடி விருந்து வைத்து கொண்டாடிய நான் பின் ஒவ்வொருத்தனுடனும் என் மனைவியை சேர்த்துப் பேசி எவ்வளவு காயப்படுத்தியிருக்கிறேன்.எதுவுமே உண்மையில்லையென்று மனதுக்கு தெரிந்தாலும் காயப்படுத்த வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக நோகநோக உள்ளத்தை வேத னைப்படுத்தியது


இப்போது வலித்தது.நான் ஏன் இப்படி நடந்து கொண்டேன்? கௌன்சிலிங் போகச் சொல்லி எவ்வளவு வற்புறுத்தியும் பிடிவாதமாக‘எனக்கென்ன விசரா?¨என்று மமதையுடன் நடந்ததும் மீண்டும் மீண்டும் தோன்றி என்னை விசரனாக்கியது.இப்ப எல்லாவற்றையும் இழந்து நிற்கிறேன்.

என் மனைவி சொன்ன ஒரு வார்த்தை இப்போது என்னை வாளால் அறுப்பது போலிருக்கிறது. ‘இன்னொருவனுடன் தன் மனைவியைச் சேர்த்துப் பேசி சந்தேகப்படும் ஒருவனுக்கு அதன்பின் மனைவியைத் தொடுகிற அருகதையில்லை.’அதன்பின் அவள் என் அருகாமையை வெறுத்ததை அப்போது உணராமல் போய்விட்டேன்.எல்லாம் கிடைத்தும் வாழத் தெரியாமல் உண்மையில் நானொரு மன நோயாளிதான் போலும். ஹலூசினேஷன் என்ற மாயைக்குள் மூழ்கித்தான் கற்பனையாக மனைவியை சந்தேகப்பட்டேனோ?எனக்கே தெரியும் அப்படி எது வுமேயில்லையென்று.ஆனாலும் அவளை நோகடிக்க வேண்டும் என்பத ற்காகவே நானெடுத்த ஆயுதந்தான் அது.பொய்யாக ஏதேதோ சொல்லி. எவ்வளவு காயப்பட்டு இருப்பாள்.அல்லது என் நண்பர்களுடன் ஒப்பிட்டு எனக்கேற்பட்ட தாழ்வு மனப்பான்மையோ?மனமுடைந்து அவள் கண்ணீர் விட்டு அழுத போது அந்தக்கண்ணீரை நான் சட்டை செய்யவேயில்லையே.திருமணத்திற்கு முன் அவளுடன் வேலை செய்த ஒவ்வொருத்தனுடனும் சேர்த்து அசிங்கமாகப் பேசியிருக்கிறேன்.அவளை எத்தனையோ பேர் விரும்பியிருக்கலாம்.அதற்கு அவள் எப்படி பொறுப்பாயிருக்கலாம்.அப்படி அவள் அவர்கள் யாரையேனும் விரும்பியிருந்தால் திருமணம் செய்திருக்கலாமே.என்னையேன் காதலித்தாள்.இது இந்த மரமண்டைக்கு அப்போது விளங்கவேயில்லையே. இப்ப தெரிகிற பிழைகளெல்லாம் அப்போது ஏன் தெரியவில்லை?என்மேல் எனக்கு கோபம் கோபமாக வந்தது?கற்பனையான நினைவுகளை நீரூற்றி வளர்த்து அவளையும் ரணமாக்கி நானும் நிம்மதியிழந்து. என்னால்தான் என் குடும்பமே நிம்மதியில்லாமல். குழந்தைகளையுமல்லவா வேதனைப்படுத்தீற்றன். அர்ச்சனாவிற்கு ஒரு இருமல் வந்து மாறாமல். அதை மாற்ற நான் எதுவுமே செய்யேலையே. ஸ்ரெஸ் மகிழ்ச்சியாக இருந்தால் அது காணாமல் போயிடுமென்று டொக்ரர் சொன்னதாக அர்ச்சனா சொல்லியும் அதைக் காதில்வாங்கிக் கொள்ளாமல் ஏதோ சினிமாப் பாடலைப் பாடிக் கடந்து போனது இப்போது வலிக்கிறது.என் குழந்தைகளுடன் போட்டி போடுவதும்.ஒரு நாளென்றாலும் பாடம் செல்லிக் கொடுத்திருப்பேனா?சொல்லிக் கொடுக்கப் போனாலும் இதுகூடத் தெரியாதா?என்று அவர்களை மட்டந்தட்டி¨நாங்கள் அப்பாவிடம் படிக்க மாட்டோம்¨ என்று அவர்களாகவே மறுப்பு தெரிவிக்கச் செய்திருக்கிறேன்.

இரண்டாவது மகள் அக்கா,தம்பிக்குமாய் சேர்த்து¨வீகேற் அப்பா.எங்களுக்கு அவர் வேண்டாம்;.நாங்க எங்காவது போயிடுவம்;¨ என்று சொன்ன பிறகு தான் என் மனைவி¨நாங்க பிரிந்து விடுவம்.பிள்ளைகளுக்காகத்தான் நான் இவ்வளவு பொறுத்துக்கொண்டு இருந்தது. அவர்களுக்கே நீங்க வேண்டாம் என்றால் இதை நீடிக்கிறது வீண். அன்பு சூழ்ந்த ஒரு சூழல் அவர்களுக்கு கிடைக்காவிட்டால் இப்படி அவர்களை வைத்திருப்பது நான் ஒரு தாயாய் செய்யும் நம்பிக்கைத்துரோகம். அம்மா எங்களுக்கு பாதுகாப்பையும,;சுதந்திரத்தையும் தருவா என்றிருக்கும் பிள்ளைகளை நான் ஏமாற்றி உங்களுடன் இருப்பது சரியா?மனசுக்குள்ளை நீங்க வைச்சிருக்கிற குரங்கை வெளியில் போடாவிட்டால் உங்கள் தரமில் லாத வார்த்தைகள் பிள்ளைகளும் உபயோகிக்க நான் வழியமைத்துக் கொடுக்கிறதாய்தான் இருக்கும்.¨என்று பிரிவதற்கு முடிவெடுத்தாள்.அப்ப கூட அதன் தாத்பர்யம் விளங்காமல்¨உனக்கு அவ்வளவு திமிரென்றால் தனியப் போ.அப்பதான் என் அருமை தெரியும்¨ வீறாப்புடன் சொன்ன எனக்கு அப்போது தெரியவில்லை நான்தான் கஷ்டப்படப் போகிறேன் என்று. கல்லில் சிற்பம் செதுக்குவது போலத் தான் சொற்களையும் சொல்லவேண்டுமென்பது இப்போது புரிகிறது.நான் எறிந்த ஒவ்வொரு வார்த்தையும் திரும்பி வந்து என்னையே தாக்குகிறது.வாய் தவறி விழும் வார்த்தைகள் கைதவறி விழும் கண்ணாடியை விடக் கூர்மை யானவை என்பது காலங்கடந்து இப்போது புரிந்து எந்தப் பயனுமில்லை இப்போது உடைந்து தனிய உட்கார்ந்து அழுகிறேன்.இப்போதே இப்படியென்றால் முதுமை என்னை என்னவெல்லாம் செய்யப் போகிறதோ?

இதை எப்படி சரி செய்யப் போகிறேன்.அர்ச்சனா ஒருநாளில் இந்த முடிவுக்கு வரவில்லை.இப்படியான ஒரு நிலைக்கு நான்தான் அவளைத் தள்ளிவிட்டேன். அவளையும்,பிள்ளைகளையும் மன உளைச்சலுக்குத் தள்ளிய நான் இன்று மனஉளைச்சலுடன் பிள்ளைகள் மூலம் இதைச் சரியாக்கலாம் என்ற நப்பாசையுடன் பாடசாலை வாசலில் போய் நின் றேன்.பாடசாலை விட்டு வெளியே வந்த என் மூத்த மகள் என்னைப் பார்த்துவிட்டு தங்கையையும்,தம்பியையும் கைபிடித்து அடுத்த பக்கத்திற்கு சென்றாள்.நான் கூப்பிடவும்´´சீ´´என்று சொன்னபடி மூவருமே வெறுப்பை உமிழ்ந்த பார்வையுடன் விலகிச் சென்றது என்னை அம்மணமாக நிற்க வைத்து சாட்டையால் அடித்ததுபோல் அவமானமாக இருந்தது.அவர்களுக்கு அன்பு தேவைப்பட்ட போது கொடுக்கத் தெரியாமல் இப்போது அன்பை யாசிக்கும் ஒரு பிச்சைக்காரனாய் கையாலாகாதவனாய் திக்பிரமையுடன் நிற்கின்றேன்.காலம் மாறுமா?

யாவும் கற்பனையல்ல



# லாட்டரி

(அமெரிக்க சிறுகதை)

THE LOTTERY by Shirley Jackson (1948)

லாட்டரி ஷெர்லி ஜேக்ஸன் (1948)

மொழியாக்கம் : தங்கேஸ்

அது ஜுன் மாதத்தின் இருபத்தி ஏழாம் தேதி காலைப் பொழுது மணி பத்து இருக்கும்..அந்தக் கோடைகாலத்தில் வானம் தெளிவாகவும் போதுமான அளவு வெய்யில் நிரம்பியும் வெதுவெதுப்பாக இருந்தது. அந்த மைதானத்திற்குள்ளும் வெளியிலும் ஏராளமாகஅழகான மலர்கள் பூத்திருந்தன. புல்வெளியும் நல்ல பச்சைப் பசுமையாக செழித்து வளர்ந்திருந்தது. அந்தக் கிராமத்தில் இருந்த மக்கள் அனைவரும் அந்த ஊரில் அமைந்திருக்கும் அஞ்சல் அலுவலகத்திற்கும். வங்கிக்கும் இடையில் இருந்த பெரிய சதுக்கத்திற்குள் வந்து கூடியிருந்தார்கள்.

சில நகரங்களில் மக்கள் கூட்டம் அதிகமாக இருப்பதால், லாட்டரி முடிவதற்கு இரண்டு மூன்று நாட்கள் கூட ஆகலாம் என்பதால் வழக்கமாக ஜுன் இருபத்தி ஏழாம் தேதி அதிகாலையிலேயே லாட்டரியை இந்தப் பகுதியில் ஆரம்பித்து விடுவார்கள். ஆனால் இது ஒரு சிறிய ஊர் தான் என்பதாலும். இந்த கிராமத்தில் வசிப்பது மொத்தமே முன்னூற்று சொச்சம் பேர்கள் தான் என்பதா லும், இந்த ஊரில் மட்டும் வருடா வருடம் காலையில் பத்து மணிக்கு மேல் தான் லாட்டரியை ஆரம்பிப்பார்கள்.. தொடர்ந்து இரண்டு மூன்று மணி நேரத்திற்குள் மொத்த லாட்டரியையும் நடத்தி முடித்து விட்டு, மதியச் சாப்பாட்டுக்கு மக்கள் வீட்டுக்குச் சென்று விடுவார்கள்.

இன்று அந்தச் சதுக்கத்தில் காலையில் முதலில் வந்து கூடியதென்னவோ குழந்தைகள் தான். பள்ளிக்கு இப்போது தான் கோடை விடுமுறை விட்டிருந்தார்கள். அதனால் அவர்களிடம் இயற்கையாகவே ஒரு சுதந்திர உணர்வு வந்து ஒட்டிக்கொண்டிருந்தது. ஒரு இடத்தில் அவர்களால் நிலையாக உட்காரக்கூட முடியவில்லை. எல்லோருமே பரபரப்பாக இருந்தார்கள். ஆளாளுக்கு கலைந்து போய் அவர்களுக்குப் பிடித்த விளையாட்டுக்களை விளையாடுவதற்கு முன்பு கொஞ்ச நேரம் அனைவரும் கும்பலாக கூடி உட்கார்ந்திருந்தார்கள். இனி இவர்கள் விளையாட ஆரம்பித்து விட்டால், அந்த இடமே ஹோ வென்று ஒரே இரைச்சல் மயமாகத்தான் இருக்கும். பெரும்பாலும் அவர்களுக்குப் பிடித்ததே வகுப்பறை விளையாட்டுத்தான்.,இவர்களே ஆசிரியர்களாக மாறி பாடம் ந டத்துவதும், புத்தகத்தை புரட்டுவதும், மாணவர்களைத் திட்டுவதும் என்று இந்த வகுப்பறை விளையாட்டுக்கள் இனி இவ்விடத்தில் களை கட்டிவிடும்.

பாபி மார்ட்டின் அவனது பை நிறைய ஏற்கனவே கற்களை எடுத்து நிரப்பி வைத்திருந்தான். அவனது வழியைப் பின்பற்றி மேலும் சில மாணவர்கள் நல்ல வழ வழப்பான, வட்டமான, எடையற்ற கற்களை சேகரித்து டிரவுசர் மற்றும் சட்டைப் பைக்குள் வைத்திருந்தனர்.. ஆனாலும் இதில் முந்திக்கொண்டது என்னவோ பாபி, ஹாரி, மற்றும் டிக்கி டெலகெராய்க்ஸ் என்ற மூன்று சிறுவர்கள் தான். (டிக்கி டெலகெராய்க்ஸ்ஸை ஊரில் எல்லோரும் டெலகிராப் என்று தான் அழைப்பார்கள் ) இந்த மூவருக்கும் தான் இன்று நல்ல வேட்டை.. சதுக்கத்தின் ஒரு மூலையில் அவர்களுக்கு வேண்டிய அளவு வேண்டிய மாதிரி கற்களை குவித்து வைத்து விட்டு மற்ற குழந்தைகள் யாரும் அதை வேட்டையாடிவிடாமல் வெகு கவனமாகப் பார்த்துக் கொண்யிருந்தார்கள் அவர்கள்.

இதில் பெண் குழந்தைகள் நடிவடிக்கைகள் வேறு மாதிரி இருந்தன. அவர்கள் கொஞ்சம் ஒதுங்கி நின்று தங்களுக்குள் குசு குசுவென்று இரகசியமாகப் பேசிக்கொண்டேயிருந்தார்கள். அவ்வப்போது சேட்டை செய்யும் பையன்களைப் பார்த்து பக்கத்தில் நிற்பவளிடம் ஏதேதோ கேலியாகச் சொல்லி சிரித்தும் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள். இடுப்பில் டிரவுசர் நிற்காத வாண்டுப் பயல்கள் வேறு தங்களது பங்கிற்கு நன்றாகப் புழுதியில் புரண்டு புரண்டு, அழுக்கை உடம்பெல்லாம் பூசிக்கொண்டு வந்து, அவர்களது அண்ணன்மார்களுடைய கைகளையோ அல்லது அக்காமார்களுடைய கைகளையோ பிடித்துக் கொண்டு சிறிது நேரம் வேடிக்கை பார்த்துக் கொணடிருந்தார்கள்.

கொஞ்ச நேரம் கழித்து அந்த ஊரின் ஆண்கள் ஒவ்வொருவராக அந்த சதுக்கத்திற்கு வந்து கூட ஆரம்பித்து விட்டார்கள். வந்ததும் முதலில், தங்களது குழந்தைகள் எங்கே விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்

என்று ஒரு முறை பார்த்து விட்டு, மழை தண்ணி விவசாயம், டிராக்டர் மற்றும் வரி கட்டுவது என்று அவர்களது பேச்சு நீண்டு கொண்டே சென்றது. சிறிது நேரத்தில் பேச்சின் சுவாரஸ்யத்தில் அவர்கள் மூழ்கிப்போனது போல் இருந்தது. பிறகு சட்டென்று ஏதோ ஞாபகத்திற்கு வந்தவர்கள் போல விழிப்புற்று தோன்றினார்கள்.பிறகு பேச்சு மெல்ல மெல்ல குறைந்தது.

அவர்கள் மூலையில் குவிக்கப்பட்டிருந்த கற்களை தூரத்தில் நின்று பார்த்தபடியேதான் ஏதேதோ பேசி சிரித்துக் கொண்டிருந்தார்கள். சில நேரங்களில் அதிகபட்டசமாக புன்னகைக்க மட்டுமே செய்தார்கள். யாரும் வாய் விட்டு சிரிக்கவில்லை.

அடுத்ததாக, அவர்களது வீட்டுப் பெண்கள் அங்கே தலை காட்ட ஆரம்பித்தார்கள். வெளுத்துப் போன உடைகளையும், சிலர் வெம்மையுடைகளையும் அணிந்தபடியே வந்து கொண்டிருந்தார்கள். மற்ற பெண்களைப் பார்க்கும் போது ஒருவொருக்கொருவர் புன்னகைத்துக் கொண்டார்கள். சிலர் வரும் போதே காலை வணக்கம் சொன்னார்கள். சிலர் குசு குசுவென்று இரகசியம் பேசினார்கள். பேசி முடிந்ததும் தங்களது கணவர்மார்களின் அருகில் போய் நின்று கொண்டு, தங்கள் குழந்தைகளை அருகில் அழைத்தார்கள். நான்கைந்து முறைகள் அரட்டி உருட்டி அழைத்த பிறகு தான் குழந்தைகள் தயங்கி தயங்கி அவர்கள் பக்கத்தில் வந்து நின்றன.

இதற்கிடையில் பாபி மார்ட்டின் சமத்தாக அவனது அம்மாவின் கைப்பிடியில் இருந்து நழுவிப் போய், தான் குவித்து வைத்திருக்கும் கல் குவியலின் அருகே சென்று எல்லாம் சரியாக இருக்கிறதா இல்லை யாரும் எடுத்துச் சென்று விட்டார்களா என்று.கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது தந்தை பெரிய மார்ட்டின் கோபமாக அவனுக்கு வசமாக அடிகள் விழப்போவதாக எச்சரித்த. உடனே, மறுபடியும் நல்ல பிள்ளையாக மாறி அம்மா அப்பாவிற்கு இடையில் வந்து நின்று கொண்டான். ஊரில் மற்ற நடன விருந்துகளைப் போல, கோடை திருவிழாக்களைப் போலத்தான் இந்த லாட்டரி திருவிழாவும் வருடா வருடம் அங்கே நடத்தப்படுகிறது.

இது போன்ற நிகழ்ச்சிகளை அர்ப்பணிப்புடனும், சுறு சுறுப்புடனும் திட்டமிட்டும் நடத்துவதில் திருவாளர் சம்மரை விட்டால், இந்த ஊரில் வேறு ஆட்களே கிடையாது என்று சொல்லலாம். திருவாளர் சம்மர் நல்ல களையான மனிதர். வட்டமான முகம், வாட்ட சாட்டமான ஆள்.இனிமையாகப் பழகக்கூடியவரும் கூட. ஆனால் பாவம் அவருக்கு குழந்தைகள் தான் கிடையாது. அதனாலேயே அவரது மனைவி சுபாவத்தில் சிடுமூஞ்சியாக மாறி விட்டாள் என்பார்கள். எப்போது பார்த்தாலும் அவரை திட்டிக்கொண்டேயிருப்பது தான் அவளுக்கு பொழுது போக்கு. அவருக்கு நல்ல வருமானம் தரக்கூடிய நிலக்கரித் தொழில் கைவசம் உண்டு.

அவர் தனது கருப்பு மரப்பெட்டியுடன் சதுக்கத்திற்கு வந்து சேர்ந்த போது, மக்கள் பல விதமாக அவரைப் பற்றி முணு முணுத்துக் கொண்டிருந்தார்கள். சம்மர் அவர்கள் மக்களைப் பார்த்து உற்சாகமாக கையசைத்து விட்டு '' ''மன்னிக்க வேண்டும் உறவுகளே சிறிது தாமதமாகிவிட்டது. '' என்று மன்னிப்பு கோரும் பாவனையில் பேசினார். ஒரு மர ஸ்டூலை ( முக்காலி ) சுமந்து கொண்டு அவருக்குப் பின்னால் வந்து சேர்ந்தார் அந்த ஊரின் போஸ்ட் மாஸ்டர் திருவாளர் கிரேவ்ஸ் அவர்கள். அவர் அந்தச் சதுக்கத்திற்கு வந்ததும், உடனே அந்த மர ஸ்டூலை தரையில் வைத்தார். திருவாளர் சம்மர் அதன் மீது அந்த கருப்பு பெட்டியை வைத்தார். அவர் வைத்த அந்த கருப்பு பெட்டியைப் பார்த்ததுமே மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக பின் நகர்ந்து செல்ல ஆரம்பித்தார்கள். அந்த கருப்பு பெட்டிக்கும் மக்களுக்குமான காலி இடம் அதிகரித்துக் கொண்டே சென்றது.

நிலமையை ச் சரி செய்யும் பொருட்டு திருவாளர் சம்மர் முன்னால் வந்து மக்களைப் பார்த்து உற்சாகமாக "நம் மரபுப்படி என்னோடு வந்து யாராவது கைகுலுக்க வேண்டுமே '' என்றார். ஆனால் யாரும் அவருடன் கை குலுக்க முன் வரவில்லை. முன்பை விட இடைவெளி இன்னும் கொஞ்சம் அதிகமானது தான் மிச்சம்.

ஒரு வழியாக பெரிய மார்ட்டின் முன்னால் சென்றான். உடனே அவனை விட்டு அவனது இளைய மகன் சின்ன மார்ட்டின் சிறிது தூரம் தள்ளிப் நின்று கொண்டான். மார்ட்டினின் பெரிய மகன் பாக்ஸ்டர் தன் தந்தைக்கு உதவும் பொருட்டு அவனுக்கும் முன்னால் சென்றான். சென்றவன், மரப் பெட்டி அசையாதவாறு அந்த ஸ்டூலை இறுகப் பிடித்துக் கொண்டான். பிறகு அவனது தந்தை வந்து அவனுக்கு உதவினான். இப்போது சம்மர் மரப்பெட்டிக்குள் கையை விட்டு அதை நன்றாக கிளற ஆரம்பித்தார்.அப்படியே ஏகப்பட்ட சுற்றுக்கள் சுற்றித்தான் நிறுத்தினார்.

உண்மையிலேயே லாட்டரிக்கான அசல் மரப் பெட்டி எப்போதோ தொலைந்து போய் விட்டது என்று சொன்னார்கள் இப்போது இருக்கும் இந்த கருப்பு பெட்டி. அசல் பெட்டி அல்ல. ஆனால் இதற்கும் நிறைய வயது ஆகி விட்டது என்று பெரியவர்கள் சொன்னார்கள்.. அதாவது இந்த ஊரிலேயே வயதானவரான முதியவர் வார்னர் பிறப்பதற்கும் முன்பே இந்தக் கருப்பு பெட்டி பயன்பாட்டிற்கு வந்து விட்டதாக சொல்வார்கள்.

திருவாளர் சம்மர் அவர்களும் இந்த கருப்பு பெட்டிக்குப் பதிலாக புதிதாக வேறு ஒரு பெட்டியை மாற்ற வேண்டுமென்று ஊரில் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டார். ஆனால் யாருக்குமே வழி வழியாக தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் இந்த கருப்புப்

பெட்டியை மாற்ற வேண்டுமென்ற எண்ணமே சிறிதும் வரவில்லை. இதைத்தவிர இன்னொரு நம்பிக்கையும் மக்களிடம் உண்டு. அதாவது இப்போது இருக்கும் இந்தக் கருப்பு பெட்டிக்குள், இதற்கும் முன்னால் இருந்த லாட்டரிப் பெட்டியின் சில சக்கைகள் செருகப்பட்டிருக்கின்றன என்பது தான் அது. அது மட்டுமில்லை இந்த இடத்தை ஒரு ஊராக்கி மக்கள் வசிக்க ஆரம்பித்த நாளிலிருந்தே அந்தப் பழைய பெட்டி அவர்களது வாழ்க்கையோடு இருந்து வந்துள்ளதாகவும் இன்னொரு நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு வருடமும் லாட்டரி முடிந்தவுடன் சம்மர் அவர்கள் புதிய பெட்டி மாற்றுவதைப் பற்றி வெகு உற்சாகமாக மக்களிடம் வேண்டுகோள் வைப்பார். ஆனால் அவரது குரல் கேட்பாரற்று அப்படியே காற்றில் தேய்ந்து போய் விடும். புதிதாக எதுவுமே நடக்காது.

இப்போது இந்தக் கருப்பு மரப்பெட்டியை பார்த்தீர்களானால் பெயருக்குத்தான் அது கருப்பு பெட்டி என்று சொல்லப்படுகிறதே தவிர, காலத்தின் கோலத்தில் அது தேய்ந்து தேய்ந்து வெளுத்துப் போய் பார்ப்பதற்கே மிகவும் அசிங்கமாகத்தான் இருந்தது. சில இடங்களில், அதவாவது மூலை முடுக்குகளிலெல்லாம் சிராய்த்து சிராய்த்து, அதன் கருப்பு வண்ணம் போய் அசல் மரத்தின் நிறமே பல்லை இளித்துக் கொண்டு நின்றது. இது தவிரை ஒவ்வொரு பக்கமும் கீறல்கள் விழுந்ததில், சில சிராய்ப்புகள் கூராய் நீட்டிக் கொண்டு தெரியும். இப்படி அதரப் பழசாய் போனாலும் இதை மாற்றுவதற்கு ஒரு விடிவு காலம் இன்னும் வரவில்லை என்பது தான் உண்மை.

பழைய காலத்திலெல்லாம் இது போல காகிதங்களை உள்ளே போடுவது கிடையாது. எல்லாம் மரச்சக்கைகள் தான். காலப்போக்கில் தான் இந்த வெள்ளைக்காகிங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இப்படித்தான் மரபும் வளமையும் ஒவ்வென்றாக மாறிக் கொண்டு வருகின்றன. அல்லது இழக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. முதலில் வெள்ளை காகிதங்களுக்கு எதிர்ப்பு தான் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சம்மர் தான் அதை வெற்றி கரமாக சமாளித்து முறியடித்தார். '' ' ஒரு காலத்தில் ஊர் சிறியதாக இருந்தது. அப்போது மரச்சக்கைகள் பயன்படுத்தப் பட்ன சரி. ஆனால் இப்போது அப்படியா? இப்போதே மக்கள் தொகை முன்னூற்றை தாண்டி விட்டது. இன்னும் வளர்ச்சியடையும் போல தெரிகிறது. முன்னூறு மரச்சக்கைகளை இந்த கருப்பு மரப் பெட்டிக்குள் தான் போட முடியுமா சொல்லுங்கள்? '' என்று பலவிதமாக எடுத்துச் சொல்லி தான் சம்மர் மக்களை சம்மதிக்க வைத்தார். இது அவரின் வெற்றி என்றே சொல்லலாம்.

இது தான் திருவாளர் சம்மர். நேற்றைய இரவே அவரும். கிரேவ்ஸும் சேர்ந்து,அவரின் நிலக்கரி வியாபார அலுவலகத்தில் வைத்து, கருப்பு பெட்டிக்குள் ஊரில் உள்ள அத்தனை பேரின் பெயர்களையும் ஏழுதிப் போட்டு நிறைத்து நிறைத்து வைத்து விட்டனர். இப்படி. முதற் கட்ட ஏற்பாடுகள் அத்தனையைம் கச்சிதமாக முடித்து விட்டுத்தான், காலையில் சம்மர் இந்தக் கருப்பு பெட்டியை எடுத்துக் கொண்டு இந்த சதுக்கத்திற்கு வந்திருக்கிறார்.

இந்த லாட்டரி போட்டி முடிந்து விட்டால் நாளையிலிருந்து இந்தப் பெட்டியை யாரும் கண்டு கொள்ளப் போவதில்லை. அடுத்த வருடம் வரை இது எங்காவது ஏதாவது ஒரு மூலையில் தேமேவென்று சும்மா கிடக்கப் போகிறது. ஒரு வருடம் இது திருவாளர் கிரேவ்ஸின் விருந்தாளியாக அஞ்சலகத்தில் எங்காவது காலடியில் விழுந்து கிடக்கும். இன்னொரு வருடத்தில் மார்ட்டின் மளிகைக்கடையில் எங்காவது ஒரு செல்பில் மளிகைப் பொருட்களோடு அனாதையாக கிடக்கும். ஒவ்வொரு முறையும் லாட்டரி ஆரம்பிப்பதற்கும் முன்பு கூட்டத்தில் எப்படியோ மிகப்பெரிய பரபரப்பு ஏற்பட்டு விடும். யாரும் விடுபட்டு விடக் கூடாது என்பதில் திருவாளர் சம்மர் அவர்கள் மிகவும் கவனமுடன் இருப்பார். ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள குடும்பத் தலைவர்களையும் மற்றும் குடும்ப உறுப்பினர்களையும் பெயரை வாசித்து வாசித்து சரி பார்ப்பார். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் மாணவர்களுக்கு வருகைப்பதிவேடு எடுப்பது போல் இருக்கும் அந்தக் காட்சி.

அது மட்டுமில்லை ஒவ்வொரு வருடமும் போட்டி துவங்குவதற்கு முன்பு போஸ்ட் மாஸ்டர் திருவாளர் சம்மர் இந்தப் போட்டியின் அதிகாரியாக பதவி ஏற்றுக் கொள்வது ஒரு மரவு. போஸ்ட்மாஸ்டர் தான் அவருக்கு முறைப்படி பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். முற்காலத்தில் போட்டியை நடத்தும் அதிகாரிகள் நிறைய அர்த்தமற்ற மந்திரங்களை, அவர்களது இனிமையற்ற குரலில் செபிக்க வேண்டியதிருந்தது- அவற்றில் இசைத்தன்மையோ, ஒலித் தன்மையோ பொருட் தன்மையோ சிறிதும் இருக்காது. ஆனாலும் தொடர்ந்து அந்தச் சடங்குகளை நிறைவேற்ற வேண்டியதிருந்தது. ஆனால் காலப்போக்கில் அதை எப்படியோ திறமையாக கழட்டி விட்டு விட்டனர். அது மட்டுமில்லை பெட்டியில் உள்ள துண்டுக் காகிதத்தை எடுக்க வரும் ஒவ்வொருவருக்கும் போட்டி நடத்தும் அதிகாரி சல்யூட் அடித்து அவரிடம் சிறிது நேரம் உரையாற்ற வேண்டுமென்பதும் சம்பிரதாயம். இந்த மாதிரி சடங்குகள் போட்டியை நாள் கணக்காக இழுத்தடித்ததால், இதையும் காலப் போக்கில் நீக்கி விட்டனர். ஆனால் ஒவ்வொரு குடும்பத் தலைவரிடமும் போட்டியின் அதிகாரி சிறிது நேரம் அவர் குடும்பத்தைப் பற்றியும் வாரிசு பற்றியும், இன்ன பிற விசயங்கள் பற்றியும் கேட்டு த் தெரிந்து கொள்வார். அதற்கு மட்டும் மாற்றே கிடையாது. வருட வருடம் அதே கேள்விகள் தான் அதே பதில்கள் தான். எது எப்படியிருந்தாலும் போட்டி ஆரம்பித்து விட்டால் அதன் பாரம்பரியத்

தன்மை சிறிதும் பிசகாமல் அதை அப்படியே நடத்திச் செல்வதில் உண்மையிலே சம்மர் கில்லாடிதான்.

போட்டிக்கான நேரம் நெருங்குவதை சம்மருக்க உள்ளுணர்வு சொல்லியது. அவர் இந்தப் போட்டிக்காக நீல நிற ஜீன்ஸ் பேண்டும் சுத்தமான வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தார். ஒரு கையை கருப்பு பெட்டியில் வைத்தபடியே தான் கிரேவ்ஸிடமும், மார்ட்டினிடமும் மற்றும் ஏனையோரிடமும் பேசிக்கொண்டிருந்தார். கடைசியாக இந்த மாதிரிப் பேச்சுக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு மொத்தமாக சனங்களைப் பார்த்து பேச வேண்டிய நேரம் வந்து விட்டது என்பதை அவரது உள் உணர்வு அவருக்கு சொல்லியது. பேசவும் வாயெடுத்தார் ஆனால் அப்போது தான் திருமதி ஹட்சிஸ்டன் சதுக்கத்திற்கு வரும் பாதையில் வேகமாக நடந்து வந்து கொண்டிருந்தாள். ஸ்வெட்டரை அணியாமல் அப்படியே தோளில் போட்டபடியே விரைந்து வந்து கொண்டிருந்தாள். வேகமாக வந்தவள் திருமதி டெலாகிராய்க்ஸ் பக்கமாக வந்து நின்றபடியே '' அய்யோ இன்னைக்கு என்ன நாளுன்னே எனக்கு மறந்து போச்சுப்பா ''' என்றாள். இருவருமே சற்று நேரம் யோசித்துப் பிறகு சிரித்தார்கள்.

"உண்மையிலேயே என் கிழவன் வீட்டிற்கு வெளியே விறகு அடுக்கி வைத்துக் கொண்டிருக்கிறான் என்று தான் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் குழந்தைகளெல்லாம் திடீரென்று ஓடிவருவதை சன்னல் வழியாகப் பார்த்த பின்பு தான், இன்று இருபத்தி ஏழாம் தேதி என்பது ஞாபகத்திற்கே வந்தது. அவ்வளவு தான் போட்டது போட்டபடி கிடக்க அப்படியே இங்கே ஓடி வந்து விட்டேன் '' என்றாள். பிறகு தனது ஈரம் படிந்த கைகளை மேல் உடையில் துடைத்துக் கொண்டாள்.

திருமதி டெலாகிராய்க்ஸ் அலட்டிக் கொள்ளாமல் "நீ சரியான நேரத்துக்குத்தான் வந்து சேர்ந்திருக்க '' என்றாள் மேலும் ' "அவுங்க ஏதேதோ சம்பந்தம் இல்லாமத்தான் பேசிக்கிட்டிருக்காங்க '' என்றாள். திருமதி ஹட்சிஸ்டன் அவளது தோள் வழியாக எதிர்புறம் உற்றுப் பார்த்தாள். தனது கணவனும் குழந்தைகளும் அங்கே நின்று கொண்டிருப்பது தெரிந்தது. உடனே ஆசுவாசமாக ஒரு மூச்சை இழுத்து விட்டாள். பிறகு அவர்களை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அவள் கூட்டத்திற்குள் நடந்து செல்லும் போது சிலர் வேண்டுமென்றே நன்றாக இடைவெளி ஏற்படுத்திக் கொடுத்தார்கள். சிலர் பய பக்தியோடு பவ்யமாக ஒதுங்கி நின்றபடி கூட்டத்திற்கெல்லாம் கேட்கும் படியாக "இதோ நமது திருமதி ஹட்சிஸ்டன் கடைசியாக வந்துவிட்டார்கள். வழிவிடுங்கள் வழிவிடுங்கள்,. என்றார்கள். சிலர் '' திரு பில் அவர்களே உங்கள் இணையர் ஒரு வழியாக வந்து சேர்ந்து விடடார் '' என்று போலியாகப் பணிவுகாட்டி வழி விட்டார்கள். "கடைசியில் கூட்டத்தினரின் கிண்டல் கேலிகளுக்கிடையே ஹட்சிஸ்டன் ஒரு வழியாக தனது கணவனை சென்றடைந்தாள்.

இதற்காக காத்திருந்த திருவாளர் சம்மர் கேலியாக ' "நல்லது திருமதி டெஸ்ஸி ' அவர்களே கடைசியாக நீங்கள் வந்துவிட்டார்கள்.நீங்கள் இல்லாமலேயே இந்தப் போட்டியை நடத்தவேண்டியதிருக்குமோ என்று கூட பயந்து விட்டோம் '' என்றார்.

"நான் என்ன செய்வது? சமயலறையில் பாத்திரங்களை கழுவி முடிக்கும் முன்பே பில் என்னை விட்டு விட்டு இங்கே வந்து விட்டார் '' என்றாள் டெஸ்ஸி. உடனே கூட்டத்தில் ஒரு சிரிப்பலை வேகமாகப் பரவியது. இப்போது எல்லோரும் தத்தமது குடும்பத்தினருடன் சமமாக நின்றார்கள்..

கடைசியாக சம்மர் "நல்லது இப்போதே தொடங்கி விடுவது நல்லதென்று படுகின்றது என்றார் '' இதை முடித்து விட்டு அவரவர்கள் வேலையைப் பார்க்க நாம் கிளம்ப வேண்டுமே '' என்று சேர்த்துக் கொண்டார். கூட்டத்தைப் பார்த்து '' இன்னும் யாராவது வருகை தராமல் இருக்கிறார்களா? '' என்று கேட்டார் உடனே கூட்டத்தினர். '' டன் பார் டன்பார் '' என்று கத்தினார்கள். சம்மர் தான் கையில் வைத்திருந்த பெயர் பட்டியலைப் பார்த்து விட்டு '' ஆமாம் கிளைட்டன் பார் இன்னும் வரவில்லை. அவர் தான் தனது காலை ஒடித்துக் கொண்டாரே! எப்படி வருவார்? அது சரி அவருக்காக யார் விளையாடப் போவது இந்தக் கூட்டத்திலே?'' என்று கேட்டார்

'' நான் விளையாடப் போகிறேன் '' என்று கூட்டத்திலிருந்து ஒரு பெண் குரல் வந்தது. திருவாளர் சம்மர் இப்போது நேரடியாக அந்தப் பெண்மணியை பார்த்து. '' சரி தான் மனைவி கணவனுக்காக விளையாடுவதும் நல்லது தான். என்றார். பிறகு '' ஆனாலும் ஜெனி உங்கள் வீட்டில் பெரிய பையன்கள் என்று யாரும் இல்லையா? அதாவது தந்தைக்காக விளையாடுவதற்கு?'' என்று கேட்டார். இதற்கான பதில் என்னவென்று அந்த ஊருக்கே நன்றாகத் தெரியும். சம்மருக்கும் கூட அது தெரியும் தான் ஆனாலும் இது போன்ற கேள்விகளையெல்லாம் கேட்க வேண்டியது லாட்டரி நடத்து ம் அதிகாரிகளின் கடமையாகும்.

இதற்கான பதிலைக் கேட்க கூட்டத்தினரும் சம்மரும் அமைதியாக காத்திருந்தனர். திருமதி டன் பார் அமைதியாக ஆனால் மிகுந்த வருத்தத்துடன் சொன்னாள். ''எங்களது பையன் \ ஹொரேசுக்கு இன்னும் பதினாறு வயது பூர்த்தியாகவில்லை. ''' '' சரி சரி நானும் அப்படித்தான் நினைத்தேன். இந்த முதியவரை இப்படித்தான் நான் நிரப்ப வேண்டும். '' என்றார் சம்மர். பிறகு தன் கையில் வைத்திருந்த

பட்டியலைச் சரிபார்த்து விட்டு '' தம்பி வாஸ்டன் நீ இந்த முறை விளையாடுகிறாயா?'' என்று ஒரு சிறுவனைப் பார்த்து கேட்டார். கூட்டத்தை விலக்கி கொண்டு நல்ல வளர்த்தியான ஒரு பையன் முன்னால் வந்து நின்றான் கையை உயர்த்திக் கொண்டே '' இந்த முறை நான் எனக்காகவும் எனது தாய்க்காகவும் விளையாடப் போகிறேன் '' என்று சொன்னான். அவன் அடிக்கடி வெய்யில் தாளாமல் தனது கண்களை சிமிட்டிக் கொண்டிருந்தான். அவ்வப்போது தலையை தொங்கப் போட்டுக் கொண்டே கேள்விகளுக்குப் பதில் சொன்னான். கூட்டத்தினருக்கு அந்தப் பையன் மீது திடீரென்று ஒரு பச்சாதாப உணர்வு ஏற்பட்டது. '' அருமையான பையனாக வளர்ந்து நிற்கிறான் பாரேன்,. உண்மையிலே தாய்க்கு ஏற்ற பிள்ளை தான் இவன் '' என்று அவன் காது படவே கூறினார்கள். 'திருவாளர் சம்மர் '' நினைத்தேன் '' என்றார் '' சரி தான் முதியவர் வார்னர் தயாரா? '' தயார் தான் '' என்று குரல் வந்தது.'' அப்படியென்றால் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. உடனே ஆரம்பித்து விடலாம் ' என்று கூட்டத்தைப் பார்த்து சொன்னார்.

அவ்வளவு தான் அங்கே சட்டென்று ஒரு பேரமைதி எழுந்தது. இப்போது திருவாளர் சம்மர் அவர்கள் தொண்டையை கணைத்துக் கொண்டு சப்தத்தை சற்று சரி செய்து கொண்டார். '' என்ன எல்லோரும் தயார் தானே? நான் இப்போது ஒவ்வொரு குடும்பத் தலைவரின் பெயரையும் வாசிக்கப் போகிறேன். உரிய நபர் உடனே இங்கே வந்து இந்தக் கருப்பு பெட்டிக்குள்ளிருந்து ஒரு துண்டுக்காகிதத்தை எடுத்து கையில் வைத்துக் கொள்ள வேண்டும். விதி முறையை நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். காகிதத்தை யாரும் பிரித்து யாரும் பார்க்கவே கூடாது. அதை கையில் உறுதியாகப் பிடித்திருக் வைத்திருக்க வேண்டும். வேண்டுமானால் கையை மடித்து வைத்துக் கொள்ளலாம்.எல்லோரும் அவரவர்களின் சீட்டுக்களை எடுத்து முடிக்கும் வரையிலும் இது அப்படியே தான் தொடர வேண்டும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இப்போது எல்லாம் விளங்கி விட்டது தானே? '' என்று கேட்டார்.. '' கூட்டத்திலிருந்து யாரும் எந்தப் பதிலையும் தெரிவிக்கவில்லை. அவர்கள் ஏற்கனவே இது போல் நிறைய முறை இந்த லாட்டரி விளையாட்டை விளையாடியிருப்பதால் இதன் நிபந்தனைகளெல்லாம் அவர்களுக்கு அத்துபடியாகியிருந்தது. எல்லோரும் தங்கள் உதடுகளை மட்டும் அடிக்கடி ஈரப்படுத்திக் கொண்டேயிருந்தார்கள்.

இப்போது சம்மர் ஒரு கையை உயர்த்தி சப்தமாக பெயர்களை வாசிக்க ஆரம்பி த்தார் '' ஆடம்'' இப்போது கூட்டத்திலிருந்து ஒரு மனிதன் சம்மருக்கு முன்னால் வந்து நின்றான். அவனைப் பார்த்ததும் சம்மர் ''ஹாய் ஸ்டீவ் '' என்றார். உடனே அவன் ''ஹாய் ஜோவ் '' என்றான். அவர்கள் ஒருவரை ஒருவர் கொஞ்சம் பதட்டத்தோடு பார்த்துக் கொண்டார்கள். பிறகு புன்னகை புரிந்தார்கள். அடுத்ததாக ஆடம்ஸ் அந்தக் கருப்புப் பெட்டிக்கு அருகில் சென்றான். கையை அதற்குள் நுழைத்து அதிலிருந்து ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்தான். அதை பிரித்துப் பார்க்கவில்லை. ஆனால் அதை அப்படியே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, மறுபடியும் தான் நின்ற இடத்திற்கே சென்று விட்டான். ஆனால் இந்த முறை குடும்ப உறுப்பினர்களை விட்டு சிறிது தள்ளியே நின்று கொண்டான். அவன் அந்தக் காகிதத்தை கடைசி வரையிலும் திரும்பிக் கூட பார்க்கவேயில்லை.

சம்மர் தொடர்ச்சியாக பெயர்களை வாசிக்க ஆரம்பித்தார். '' ஆண்டர்சன், பெண்த்தாம் ...'' ஒவ்வொருவரும் சம்மருக்கு முன்னால் சென்றார்கள். சம்பிரதாயமான விசாரிப்புகள், பிறகு பெட்டியில் சீட்டு எடுப்பது என்று அந்த நிகழச்சி தொடர்ச்சியாக நடந்து கொண்டிரந்தது.

பின் வரிசையில் நின்று கொண்டிருந்த திருமதி டெலாகிராய்க்ஸ் திருமதி கிரேவ்ஸிடம் இரகசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள். '' இடை வெளியே இல்லாமல் தொடர்ச்சியாக லாட்டரி நடைபெற்றுக் கொண்டிருப்பது போலவே எனக்குத் தோன்றுகிறது. சென்ற முறை லாட்டரி விளையாடி ஒரு வாரம் கூட இன்னும் முடியாதது போல் தான் தோன்றுகிறது. ஆனால் ஒரு வருடம் ஆகி விட்டதென்று சொல்கிறார்கள் நம்ப முடிகிறதா? '' '' ஆமாம் ஆமாம் காலம் என்ன வேகமாகப் போகிறது '' என்றாள் திருமதி கிரேவ்ஸ். '' கிளார்க் டெக்ளாரிஸ் '' என்றழைத்தார் சம்மர். இதற்குள் திருமதி டெலாரிக்ஸ் ' இதோ என் கிழவன் வந்து கொண்டிருக்கிறார் ' என்று பலத்த குரல் கொடுத்தாள். அவளது கணவன் அங்கே முன்னால் சென்று கருப்பு பெட்டியில் ஒரு சீட்டை எடுத்து திரும்பும் வரையிலும் அவள் மூச்சை கையில் பிடித்துக் கொண்டு தான் நின்றிருந்தாள். '' டன் பார் '' என்று பெயரை வாசித்தார் சம்மர். உடனே திருமதி டன்பார் கருப்பு பெட்டிக்கு அருகே சென்றாள். கூட்டத்திலிருந்த சிலர் '' ஜேன் நீ அங்கே போ '' என்று அவளது மகனை அனுப்பினார்கள்.

'' இதற்கு அடுத்தது நாங்கள் தான்'' என்றாள் திருமதி கிரேவ்ஸ். அப்படித்தான் நடந்தது. கிரேவ்ஸ் பக்கவாட்டிலிருந்து சம்மருக்கு முன்னால் வந்து நின்று. அவருக்கு வணக்கம் சொன்னார். சம்மரும் அவருக்கு வழக்கம் போல வணக்கமும் வாழ்த்துக்களும் தெரிவித்தார். பிறகு கிரேவ்ஸ் அந்தப் பெட்டியிலிருந்து ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து, அதை கெட்டியாக பிடித்துக் கொண்டு சென்றார்.

இப்போது கூட்டத்தில் உள்ள எல்லா ஆண்களின் கைகளிலும் அனேகமாக அந்த துண்டுக் காகிதம் இருந்தது. சிலர் அதை கெட்டியாகப் பிடித்துக்

கொண்டு உள்ளங்கைகளுக்குள் வைத்து உருட்டிக் கொண்டிருந்தார்கள். அனேகமாக எல்லோருமே பதட்டமாகத்தான் நின்றிருந்தார்கள். திருமதி டன்பாரும் அவளது இரண்டு மகன்களும் அருகருகே நின்றிருந்தார்கள். திருமதி டன் பாரின் கையில் அந்தக் காகிதம் இருந்தது. அதை அவள் கெட்டியாகப் பிடித்திருந்தாள்.

'' அடுத்து ஹார்பட் ஹட்சிஸ்டன் '' என்று சம்மர் வாசித்தார். 'திருமதி ஹட்சிஸ்டன் தன் கணவனைப் பார்த்து' பில் உன் பெயரைத்தான் வாசிக்கிறார். எழுந்திரு, உடனே அங்கே போ '' என்றாள். கூட்டத்தில் உடனே சிரிப்பலை பரவியது.

அங்கே நின்று கொண்டிருந்த ஆடம்ஸ் அந்த ஊரிலேயே முதியவரான வார்னரிடம் '' ஜோன்ஸ், இது உனக்குத் தெரியுமா? வடக்கே உள்ள கிராமங்களிலெல்லாம் இந்த லாட்டரி விளையாட்டை நிறுத்துவதைப் பற்றியே ஒரே பேச்சாக இருக்கிறதாமே ''? என்று கேட்டார். உடனே முதியவர் வார்னர் முகத்தை சுளித்துக் கொண்டு '' அந்தப் பைத்தியகார முட்டாள்களைப் பற்றி நீ இங்கே பேசாதே '' என்றார். ' சற்று பொறுத்து மீண்டும் '' இந்த இளைஞர்களின் வாயிலிருந்து முட்டாள் தனத்தை தவிர வேறொன்றும் வருவது இல்லை '' என்றார். ஆனாலும் அவருக்கு கோபம் இன்னும் அடங்கவேயில்லையென்று தோன்றியது.. மறுபடியும் '' அவர்களெல்லாம் மறுபடியும் போய் கற்குகைகளிலேயே வசிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள் போல் இருக்கிறது. யாரும் எந்த வேலையும் செய்யத் தேவையில்லையே. சும்மா இருந்தால் போதும் என்று நினைப்பார்கள் போல, முட்டாள்கள் ஆனால் ஊரில் ஒரு பழமொழியே இருக்கிறது ஞாபகம் வைத்துக் கொள்.ஜுன்ல லாட்டரி உன் வீட்ல தானியமணி. இது போல மரபையெல்லாம் நாம் கடைபிடிக்கலேன்னா தானியங்களை நாம சாப்பிட முடியாது, வெறும் தட்டையைத்தான் சாப்பிடனும், அதனால தான் இங்க எப்பவுமே லாட்டரி இருப்பது தான் நல்லது '' என்று சொல்லி விட்டு கருப்பு பெட்டியைப் பார்த்தார். பிறகு சலிப்பாக '' அங்க பாரு சம்மர், சின்னப் பசங்ககிட்ட ஹாஸ்யம் சொல்லிகிட்டு விளையாடிகிட்டு இருக்கிறார். அதுக்கு இதுவா நேரம் ''? என்றார்.

' திருமதி ஆடம் வார்னரிடம் '' ஏற்கனவே நிறைய இடங்கள்ல நம்ம பகுதிகள்லயே லாட்டரியை விட்டொழிச்சிட்டாங்க தெரியுமா? ' என்று சொன்னாள். ' ' உடனே முதியவர் வார்னருக்கு இன்னும் கோபம் அதிகரித்து விட்டது. ' அவுங்க எல்லாம் முட்டாள்க அதான் அப்படி நடந்துக்கிறாங்க வேற என்ன சொல்ல? லாட்டரிய விட்டதினால அவுங்களுக்கு துன்பம் தான் வரும் பாரு '' என்றார்.

மார்ட்டினும் பாபி மார்ட்டினும் தங்களது தந்தை கருப்பு பெட்டியை நோக்கி நகர்வதை ஒரு வித விரக்தியுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். '' இன்னும் சற்று வேகம் பெர்சி '' அவர்கள் ஏற்கனவே முடித்துக் கொண்டிருக்கிறார்கள் '' என்று திருமதி டன்பார் தனது மூத்த மகனிடம் சொன்னாள். '' முடியப் போகிறது '' என்றான் அவளது மகன். '' உடனே உங்கப்பாவிடம் சொல் '' என்றாள். இதற்கிடையில் திருவாளர் சம்மர் தன் பெயரையும் உரத்து வாசித்து விட்டு, அந்தக் கருப்பு பெட்டிக்குள்ளிருந்து தானும் ஒரு சீட்டை எடுத்துக் கொண்டார்.

இப்போது '' வார்னர் '' என்றழைத்தார். '' வார்னர் கூட்டத்திற்கிடையே பெட்டியை நோக்கி செல்லும் போது '' எழுபத்தி ஏழாவது முறை இது. நான் இந்த லாட்டரியில் எழுபத்தி ஏழாவது முறையாக கலந்து கொள்கிறேன் '' என்றார் பெருமிதத்தோடு. இப்போது '' வாட்சன் '' என்றது சம்மரின் குரல். நல்ல நெடு நெடுவென்று வளர்ந்திருந்த ஜேக் அங்கே சென்றான். அவனைப் பார்த்ததும் கொஞ்சம் அன்பாக '' பதட்டம் வேண்டாம் ஜேக், உனக்கான நேரத்தை நீ தாராளமா எடுத்துக்கோ பிறகு ஒரு சீட்டை எடு '' என்றார் சம்மர். அவன் அப்படியே செய்தான். இப்போது '' ஜேனின் ''. அவ்வளவு தான் '' அதற்குப் பிறகு பெயர் வாசிக்கப்படவில்லை. ஒரு நிமிடம் கூட்டத்தில் ஒரு மயான அமைதி நிலவியது. யாரும் மூச்சு விட்டார்களா என்று கூட யாருக்கும் தெரியவில்லை.

திடீரன்று திருவாளர் சம்மர் காகிதத்தை இறுக்கிப் பிடித்திருந்த அவரது கையை காற்றில் உயர்த்தி உற்சாகமாக '' சனங்களே இப்போது நீங்கள் காகிதத்தை திறந்து பார்க்கலாம் '' என்றார். உடனே எலலோரும் அவரவர் கையிலிருந்த காகிதத்தை திறந்து பார்த்தனர். அடுத்த நொடியே எல்லா பெண்களும் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டனர். '' யாருக்கு லாட்டரி விழுந்திருக்காம்?'' யாருக்கு லாட்டரி விழுந்திருக்கிறது ''? டன்பார்க்கா? வாட்ஸனுக்கா? சிறிது நேரம் மௌனம் நிலவியது. பிறகு எல்லோருடைய குரல்களும் ஒருமித்து ஒலித்தன. '' இந்த முறை பில்லுக்கு '' '' அதாவது, பில் ஹட்சிங்ஸ்டன்னுக்குத்தான் லாட்டரி அடித்திருக்கிறது. திருமதி டன் பார் தன் மூத்த மகனிடம் '' இந்த விசயத்தை சொல்லி '' இதை உடனே உங்க அப்பாவிடம் போய் சொல்லு '' என்று அனுப்பி விட்டாள். இதற்குள் கூட்டத்தில் இருந்த மக்கள் பில் ஹட்சிங்ஸ்டன் எங்கேயிருக்கிறார் என்று தேட ஆரம்பித்து விட்டார்கள்.

பில் ஹட்சிங்ஸ்டன் அமைதியாக தலைகுனிந்தபடி நின்று கொண்டு, தன் கையிலிருந்த காகிதத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று திருமதி டெஸ்ஸி ஹட்சிங்ஸ்டன் சம்மரைப்பார்த்து உரக்க கத்த ஆரம்பித்தாள். '' நீ என் கணவனருக்கு போதுமான நேரம். கொடுக்கலை. அவர் விரும்பிய காகிதத்தை தேர்ந்தெடுக்க நீ அவருக்குப் போதுமான நேரம் கொடுக்கலை. ஆமா அதை நான் பார்த்தேன்.

'' கூட்டத்தில் சல சலப்பு எழுந்தது. '' அமைதியாக இரு டெஸ்ஸி '' என்று திருமதி டெல்லா கிராய்க்ஸ் டெஸ்ஸியைப் பார்த்துச் சொன்னாள். திருவாளர் கிரேவ்ஸ் முன்னால் வந்து '' '' லாட்டரியில் எல்லோருக்கும் ஒரே மாதிரியான சந்தர்ப்பம் தான் கொடுக்கப்பட்டது 'என்றார். '' '' வாயை மூடு டெஸ்ஸி '' என்றார் கிழவர் தன் மனைவியைப் பார்த்து..

இப்போது திருவாளர் சம்மர் கூட்டத்தைப் பார்த்து பேசி ஆரம்பித்தார். '' எல்லோரும் இங்க கவனிங்க, முதல் ஆட்டத்தை சீக்கிரமாவே முடிச்சிட்டீங்க. இப்ப அடுத்த ஆட்டத்தையும் அதை விட கொஞ்சம் விரைவாகவே முடிக்கனும் வாங்க சீக்கிரம் வாங்க '' என்றார். அடுத்ததாக அவர் தன்னிடமிருந்த அடுத்த பட்டியலை எடுத்து சரி பார்க்க ஆரம்பித்தார் பிறகு. கிழவரைப் பார்த்து '' பில் நீங்க ஹட்சிங்ஸ்டன் குடும்பத்துக்காக விளையாடப் போறீங்க அப்படித்தானே? என்று கேட்டார். அடுத்ததாக. ஆமா. ஹட்சிங்ஸ்டன் குடும்ப வகையறாக்கள்ல வேற யாராவது இருக்குறாங்களா? அதாவது பெயர் விடுபட்டவங்க? சேர்க்க வேண்டியவங்க யாராவது? என்று கேட்டார்.

திருமதி ஹட்சிங்ஸ்டன் உடனே '' டானும்,ஈவாவும் இருக்கிறாங்க. அவங்களுக்கும் வாய்ப்பு கொடுங்க '' என்றாள். '' உங்களுடைய மகள்கள் அவர்களுடைய கணவர்களின் குடும்பத்திற்குத்தான் ஆடுவார்கள் டெஸ்ஸி '' என்றார் சம்மர் '' இது இங்கயிருக்கிற எல்லோரையும் போல உங்களுக்கும் தெரியும் தானே ''? என்றார். இதைக் கேட்டதும், '' டெஸ்ஸி '' இது நியாயமில்லை சம்மர் இது நியாயமேயில்லை '' என்று கத்தினாள். கிழவர் பில் வருத்தத்துடன் சம்மரைப் பார்த்து '' ஜோ என்னுடைய மகள்கள் அவர்களுடைய கணவர்களின் குடும்பத்திற்காக விளையாடுவார்கள் '' அது தான் முறை என்றார். பிறகு '' என்னுடைய குடும்பத்தில் மீதம் இருப்பவர்கள் என்னுடைய சிறிய குழந்தைகள் மூவர் தான். அவர்கள் விளையாட வேண்டுமா அல்லது வேண்டாமா என்று நீ தான் முடிவு செய்ய வேண்டும் '' என்றார்.

திருவாளர் சம்மர் அவருக்கு விளக்கம் தரும் விதமாக ஆதரவாகப் பேசினார். '' அவர்கள் உன் குடும்பத்திற்காக விளையாடுவதானால் அதற்கு நீ தான் சொல்ல வேண்டும் '' என்றார். சற்று யோசித்து விட்டு '' சரி சரி உனக்கு எத்தனை சின்ன குழந்தைகள் உள்ளார்கள் பில்? ' '' என்று கேட்டார். உடனே பில் '' இளைய பில், நான்ஸி மற்றும் லிட்டில் டேவ் என்று மூன்று குழந்தைகள் '' என்றார். சம்மர் யோசித்த படியே கிரேவ்ஸைப் பார்த்து '' சரி சரி அவர்களுடைய காகிதத்தையும் வாங்கிக்கோ'' என்றார். அவர் உடனே தலையாட்டி விட்டு அந்தக் குழந்தைகளின் காகிதங்களையும் கையில் வாங்கினார். 'அதை கருப்பு பெட்டிக்குள்ள மறுபடியும் போடு'' என்றார் சம்மர். அந்தக் காகிதங்கள் கருப்பு பெட்டிக்குள் மறுபடியும் போடப்பட்டது. '' மறுபடியும் ஆரம்பமாகட்டும்'' என்றார். '' நானும் ஆரம்பித்திருக்க வேண்டுமென்று தான் நினைத்தேன்'' என்றார். பில். திருமதி ஹட்சிங்ஸ்டன் நடுங்கியபடியே '''நான் சொல்றேன். இது நியாயமில்லை'' என்றாள். '' நீ கிழவனுக்கு தேர்ந்தெடுக்க போதுமான நேரமே கொடுக்கலை'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே கிரேவ்ஸ் அந்தக் கருப்பு பெட்டிக்குள் போடப்பட்ட, அந்த குடும்பத்தினருக்கான ஐந்து காகிதத்துண்டுகளையும் சரி பார்த்து விட்டு, மீண்டும் அதை பெட்டிக்குள் போட்டு நன்றாக கையை விட்டு கிளறினார். மீதியிருந்த காகிதங்களையெல்லாம் இப்போது தரையில் விட்டெறிந்தார். அந்த நேரம் பார்த்து நல்ல காற்று வீசியது. காகிதங்களெல்லாம் இப்போது காற்றில் பறந்து சென்றன. அதை எல்லோரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் போதே'' ஒரு நிமிசம் எல்லோரும் என்னை கவனிங்க'' என்றாள் டெஸ்ஸி ஆனால் அதற்குள் சம்மர்'' தயாரா பில்? என்று கிழவரைப் பார்த்து கேட்டார். ஓரக்கண்ணால் டெஸ்ஸியையும் பார்த்தார். பிறகு குழந்தைகளைப் பார்த்தார்.

. '' நல்லா ஞாபகம் இருக்கட்டும். ஆளுக்கு ஒரு சீட்டை கருப்பு பெட்டியிலயிருந்து எடுக்கிறீங்க. எடுத்ததை விரிச்சுப் பார்க்காம அப்படியே மடிச்சு கையிலேயே வைச்சிருக்கிறீங்க. எல்லோரும் எடுத்து முடிச்சதுக்கப்புறம், நாங்க கையைத் திறக்கச் சொல்வோம் அதுக்கப்புறம் தான் நீங்க கையைத் திறக்கனும் என்றார் பிறகு கிரேவ்ஸைப் பார்த்து.'' ஆமா கிரேவ்ஸ் நீ குட்டி டேவுக்கு சீட்டு எடுக்குறதுக்கு உதவி பண்ணு ' '' என்றார். கிரேவ்ஸ் சிறுவனின் கையைப் பிடித்து அவைனை அழைத்தக் கொண்டு கருப்பு பெட்டிக்கு அருகே சென்றார். அவன் அவருடன் கருப்பு பெட்டியை நோக்கி வெகு பிரியமாக சென்றான்.

“அந்தக் கருப்பு பெட்டியிலிருந்து ஒரு காகிதத்தை எடு டேவி '' என்றார் சம்மர் குட்டிப்பையனைப் பார்த்து. குட்டி டேவி அந்தக் கருப்பு பெட்டிக்குள் கையை நுழைத்து விட்டு காகிதம் எதையும் எடுக்காமல் விளையாடிக் கொணடு நின்றான். '' ஒரு பேப்பரை மட்டும் எடு '' என்றார் சம்மர். பிறகு ''' கிரேவஸ் நீ அவனுக்காக அந்தக் காகிதத்தை கையில் வைத்திரு '' என்றார். கிரேவ்ஸ் மெதுவாக கருப்பு பெட்டியிலிருந்து அந்தச் சிறுவனது கையை வெளியே எடுத்தார். அந்தச் சிறுவனின் கைக்குள் இப்போது ஒரு துண்டுக் காகிதம் இருந்தது.. கிரேவ்ஸ் மெதுவாக அவனது மூடியிருந்த கைகளைப் பிரித்து உள்ளேயிருந்த அந்த துண்டுக் காகிதத்தை பெற்றுக் கொண்டார். குட்டி டேவ் அவர் அருகில் சென்று அவரை வியப்பாகப் பார்த்தபடியே நின்றிருந்தான். '' இப்போது நான்சி '' என்றார்

சம்மர். நான்சிக்கு பன்னிரெண்டு வயது தான். தன்னை அழைத்ததும் அவள் தனது ஸ்கர்ட்டை சரி செய்து கொண்டு கருப்பு பெட்டியை நோக்கிச் சென்றாள். அவள் அதற்குள்ளிருந்து ஒரு துண்டுச் சீட்டை எடுத்து வரும் வரை அவளது பள்ளித் தோழிகளெல்லாம் மூச்சு விடுவதற்கும் மறந்து போய் சிலையாக நின்று கொண்டிருந்தார்கள்.

இப்போது '' ஜூனியர் பில் '' என்றார் சம்மர். ஜூனியர் பில் கருப்பு பெட்டிக்கு மிக அருகே சென்று நின்று கொண்டான். அவன் கை, கால்களெல்லாம் நல்ல வளர்த்தியாதலால் கருப்பு பெட்டியை உரசிக் கொண்டிருந்தன. அவனும் அதிலிருந்து ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்தான். '' இப்போது டெஸ்ஸி '' என்றார் சம்மர். டெஸ்ஸி வெளிறிப் போன முகத்தோடு சற்று நடுக்கத்துடன் சுற்றிலும் பார்த்தாள். சிறிது நேரம் தயங்கி நின்றாள். யாரும் எதுவும் பேசவில்லை. வறண்டு போயிருந்த தன் உதடுகளை நாவால் சற்று ஈரப் படுத்திக் கொண்டு, பின்பு கருப்பு பெட்டிக்கு அருகில் சென்றாள் அதற்குள் கையை விட்டு ஒரு துண்டுக் காகிதத்தை, பிடுங்கி எடுப்பது போல அதிலிருந்து வெளியே எடுத்தாள். உடனே தன் இடத்தில் போய் அமைதியாக நின்று கொண்டாள். இப்போது காகிதத்தை கெட்டியாகப் பிடித்திருந்த அவளது கரம் முதுகுக்குப் பின்பக்கம் இருந்தது. நடுங்கியபடியே இருந்தது. இனி முதிய பில் எடுக்கலாம் '' என்றார் சம்மர். முதிய பில் கருப்பு பெட்டியின் அருகே சென்றார். அதன் வெம்மையை சற்று நேரம் தொட்டு உணர்ந்தார். பிறகு அதிலிருந்து ஒரு காகிதத்தை வெளியே எடுத்தார். கூட்டம் மயான அமைதியில் இருந்தது. இனி சம்மர் உத்தரவு கொடுக்க வேண்டும்.

'' இது நான்சியா இருக்க கூடாது '' என்று அவளது பள்ளித் தோழி ஒருத்தி பக்கத்தில் இருந்தவளிடம் முனு முனுத்தாள். ஆனால் அது கூட்டத்தில் நிறையப் பேர்களுக்கு கேட்டது. '' முதலில் கடைபிடித்தது போல இப்போது யாரும் பழக்க வழக்கங்களை சரியாக கடைபிடிப்பதில்லை '' என்று சலித்துக் கொண்டார் முதிதயவர் வார்னர்

'' சரி சரி இங்க கவனிங்க '' என்று திருவாளர் சம்மர் அடுத்த உத்தரவை பிறப்பித்தார். '' இப்போது நீங்கள் காகிதத்தை திறக்கலாம் ''' என்றார். ''கிரேவ்ஸ் நீ முதலில் குட்டி டேவின் காகிதத்தை திறக்க உதவு '' என்றார். கிரேவ்ஸ் அந்தக் காகிதத்தை திறந்து காட்டினார். உடனே கூட்டத்தில் ஒரு நிம்மதிப் பெரு மூச்சு பரவியது. ஆமாம் அந்தக் காகிதம் வெறும் வெள்ளைக் காகிதமாக இருந்தது. ஜூனியர் பில்லும்,நான்ஸியும் தங்களது காகிதங்களை திறந்து காட்டினார்கள். அவைளும் வெற்றுக் காகிதங்களாகத்தான் இருந்தன. அவர்கள் இருவரும் கூட்டத்தைப் பார்த்து இலேசாக சிரித்தார்கள். '' '' '' ''இப்போது டெஸ்ஸி'' என்றார் சம்மர். டெஸ்ஸி தயங்கியபடியே காகிதத்தை பிரிக்காமல் நின்றிருந்தாள். அவள் கைகள் இன்னும் நடுங்கிக் கொண்டேதானிருந்தன.

உடனே சம்மர் முதிய பில்லைப் பார்த்தார். அவர் தனது காகிதத்தை பிரித்துக் காட்டினார். அதுவும் வெற்றுத்தாளாக இருந்தது. '' அப்படியென்றால் அது டெஸ்ஸி தான் '' என்றார் சம்மர் ' ஆமாம் டெஸ்ஸிக்குத்தான் லாட்டரி விழுந்திருக்கிறது.' என்றார். பிறகு டெஸ்ஸியைப் பார்த்து ' உங்கள் காகிதத்தை காட்டுங்கள் டெஸ்ஸி ''' என்றார் அவள் ம்கூம் அசையவில்லை. இப்போது முதிய பில் அவள் அருகில் சென்று வலுக்கட்டாயமாக அவளது கையிலிருந்த காகிதத்தைப் பிடுங்கி அதை சம்மருக்குப் பிரித்துக் காட்டினார். அதில் அடர்த்தியான கருப்பு புள்ளிகள் நிறைந்திருந்தன. நேற்றைய இரவு தனது நிலக்கரி கம்பெனியில், தனது அடர்த்தியான கருப்பு பென்சிலால் சம்மர் தான் அந்தக் காகிதத்தில் அந்தக் கருப்பு புள்ளிகளை உருவாக்கியிருந்தார் '' அதைப் பார்த்ததும் அவருக்குள் ஒரு கர்வம் வந்தது. முதிய பில் இப்போது அந்தக் காகிதத்தை பிரித்து கூட்டத்தினருக்கும் காட்டினார். உடனே கூட்டத்தில் '' ஓ '' உஸ் என்ற சப்தங்கள் எழுந்தன. அங்கே ஒரு பரபரப்பு உடனடியாகத் தொற்றிக்கொண்டது.

''சரி சனங்களே! இனி சீக்கிரம் முடிக்க வேண்டியது தான் பாக்கி '' என்றார் திருவாளர் சம்மர். கூட்டத்னர் லாட்டரியின் அசலான பழைய கருப்புப் பெட்டியையும், அதன் தொடர்ச்சியாகப் பின்பற்ற வேண்டிய மரபுகளையும் முற்றாக மறந்து போய் விட்டிருந்தாலும், கற்களைப் பபயன்படுத்துவதை மட்டும் நன்றாக நினைவில் வைத்திருந்தார்கள். சிறிய பையன்கள் ஏற்கனவே குவித்து வைத்திருந்த கற்குவியல்களிடம் சென்று தயாராக இருந்தார்கள். மைதானத்திலும் அங்கங்கே கற்கள் குவிந்து கிடந்தன. அது தவிர கிரேவ்ஸ் விட்டெறிந்த லாட்டரி காகிதங்கள் மைதானம் முழுவதும் பரவிக்கிடந்தன.

முதலில் திருமதி டெலகிராய்க்ஸ் அவளது இரு கைகளும் கொள்ளுமளவுக்கு பெரிய தொரு கல்லை மைதானத்தில் இருந்து தேர்ந்தெடுத்து வைத்திருந்தாள். பிறகு திருமதி டன் பாரிடம் திரும்பி '' வா வா சீக்கிரம் 'வா ' என்று அவளையும் அழைத்தாள். திருமதி டன் பாரும் தனது இரு கைகளும் கொள்ளுமளவு கற்களை எடுத்து வைத்திருந்தாள். கற்களை எடுத்து வந்ததில் அவளுக்கு மூச்சு வாங்கியது. பிறகு திருமதி டெலகிராய்க்ஸ்ஸைப் பார்த்து '' என்னால் உன்னைப் ஓட முடியாதும்மா. நீ முன்னால போ, நான் உன்னைப் பின் தொடர்ந்து வர்றேன் '' என்றாள். குழந்தைகள் அனைவரும் தங்களது கரங்களில் ஏற்கனவே போதுமான அளவு கற்களை நிரப்பித்தான் வைத்திருந்தார்கள். குட்டி டேவி ஹட்சிஸ்டன் கைகளிலும் யாரோ சிறிய குட்டிக்கற்களை திணித்திருந்தார்கள்.

திருமதி டெஸ்ஸி ஹட்சிங்ஸ்டனை சுற்றிலும் இப்போது போதுமான இடைவெளி தானாகவே உருவாகியிருந்தது. கூட்டம் சிறிது சிறிதாக முன்னேறி, தன்னை நோக்கி வருவதை உணர்ந்ததும், இயலாமையுடன் அவள் தனது கைகளை முன்னால் நீட்டி '' இது நியாயமில்லை,இது நியாயமில்லை '' என்று கதறினாள். அவள் அப்படி சொல்லிக் கொண்டிருக்கும் போ கூட்டத்திலிருந்து பறந்து வந்த கல் ஒன்று, அவளது தலையின் பக்கவாட்டுப் பகுதியை நச்சென்று தாக்கியது. அந்த இடத்தில் தலை உடைந்து இரத்தம் கொட்டியது. முதியவர் வார்னர் கூட்டத்தினரைப் பார்த்து '' வாங்க வாங்க எல்லோரும் சீக்கிரம் வாங்க '' என்று கத்தினார். ஸ்டீவ் ஆடம்ஸ் கூட்டத்தின் முன் வரிசையில் கையில் பெரிய கல்லோடு நின்றிருந்தார். அவரது அருகில் திருமதி கிரேவ்ஸ்ஸும் பெரிய கல்லோடு நின்றிருந்தாள். '' இது நியாயமல்ல, இது நியாயமேயில்லை '' என்று திருமதி ஹட்சிங்ஸ்டன் கூட்டத்தைப் பார்த்து அலறிக் கொண்டேயிருந்தாள். ஆனால் அவர்கள் அனைவரும் கையில் கற்களோடு அவளை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தார்கள்.

........................................................................

### ஆசிரியர் குறிப்பு



**ஷெர்லி ஜேக்ஸன் (14.12.1916 – 08.08.1965)**

ஷெர்லி ஹார்டி ஜேக்ஸன் என்ற அமெரிக்கப் பெண் எழுத்தாளர் இருநூறுக்கும் மேற்பட்டம் சிறுகதைகளும், ஆறு நாவல்களும் மற்றும் இரண்டு நினைவுக்குறிப்புகளும் எழுதியுள்ளார். இவரது திகில் மற்றும் மர்மங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டவையாகும். இந்த லாட்டரி சிறுகதை அமெரிக்க இலக்கிய வரலாற்றில் மிகவும் பிரபலமாக சிறுகதையாகும். இந்தக் கதை பின்னாளில் திரைப்படம், வானொலி நாடகம், மற்றும் கிராபிக் நாவல் என்று பலவாறாக எடுக்கப்பட்டது. தென்னாப்பிரிக்காவின் யூனியன் இந்தக் கதையை தடை செய்தது. ஆரம்பத்தில் இந்தக் கதைக்கு எதிர்ப்பு தெரிவித்து தங்களது பத்திரிகைச் சந்தாவை (நியு யார்க்கர்) வாபஸ் பெற்றனர். இந்தக் கதை வருடாந்திர பாரம்பரியத்தை கடை பிடிக்கும் கற்பனையான சிறிய அமெரிக்க சமூகத்தை விவரிக்கிறது. உலகின் தலை சிறந்த பத்து சிறுகதைகளுள் ஒன்றாக இது எப்போதும் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மலர் மகள்

## துளிப் பாக்கள்

ஒரு வருடம்விடுமுறை
பரண் ஏறிய
கொலு பொம்மைகள்.

❦

வண்ணத் துணிகள்
உடுத்திய வேப்ப மரம்
வேப்பிலை உடையில் மனிதன்.

❦

மேகம் அனுப்பிய புதையல்
பெட்டகமாய் நதியில்
பாதுகாப்புவங்கி கரைகள்.

❦

நின்று இயற்கை ரசிப்பு
எழுத்துக்கூட்டித் தருகிறது
கவிதை ஒன்றை!

❦

கால் நனைத்த அலைகள்
கரிக்கும் உப்பாய்
நினைவுகள்.

❦

மேலெழுந்து வந்த மீன்
கண்டது மானுட தலைகளை
பாய்ந்தது ஆழ்கடலுக்குள்

❦

கோடைக் காலம்
நிரம்பிய மக்கள் வெள்ளம்
அழகர் திருவிழா!



# கீழ்வானம் சிவக்கிறது

கவிஜி

“என்னது... இதுல... கீழ இறங்கணுமா...?”- பார்த்த போது... பள்ளத்தாக்கு பச்சை பவளம் பூத்த பரந்த வெளியில் பதுங்கிக் கிடந்தது. இதயனுக்கு மூச்சு வாங்கியது. கூடவே நுரையீரல் குதித்தது.

சந்தனாவுக்கு முகம் விரிந்த புன்னகை. சற்றுமுன் ஏறி இறங்கிய மலைப் பாதைகள் மௌனமாய் பார்த்துக் கொண்டிருந்தன. மேகத் தூதுவை வானம் கொண்ட நேரம் மதியம் தாண்டி விட்டதை உணர்த்தியது.

“இந்த காட்டுக்குள்ள எப்பிடி இருக்கீங்க.. யப்பா... பார்க்க பார்க்க பயங்கரமா இருக்கே...” என்றவன் அப்படியே சரிந்து கிடந்த பாறை மீது சாய்ந்து அமர்ந்தான். இயற்கை கொட்டிக்கிடக்கும் பள்ளத்தாக்கு... கண்ணுக்கெட்டும் தூரம்வரை கவிதைதான் விளைவிக்கிறது போல. உள்ளத்தில் என்னவோ பூரிப்பு அவனுக்கு. ஆனாலும் மூச்சிரைத்தல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. முகம் இனித்தாற்போல சிறு புன்னகையும் உடல் முழுக்க.

“இன்னும் எவ்ளோ தூரம்...?” இலை விழுவது போல அவன் சொற்கள் அசைந்தன.

“அதோ தெரியுது பார்... அதான் ஊர்... எங்க தேசம்...” என்று சந்தனா நீட்டிய கை வழியே பார்த்த இடத்தை கண்கள் கடித்துக் கொள்ள முடியவில்லை. தேசம் எனும் போது ஒரு நொடி தேவதையாய் வேர்த்திருந்தாள்.

தூரத்தில் எல்லாமே பச்சைதான். கிட்டத்தில் எல்லாமே மூச்சு வாங்குதல்தான்.

“ஒன்னும் தெரியல... சரி நட...!” என்று பின் தொடர்ந்தான்.

நடையோடு நடையாக....” பரவால்ல... இந்த காட்டுக்குள்ளருந்து வெளிய வந்து படிச்சு... வேலைக்கு வந்து..... கிரேட் சந்தனா நீ....” என்று அவள் தோள் பிடித்து அழுத்தமாய் ஒரு குலுக்கல் செய்தான். பின்னால் திரும்பி புருவம் தூக்கி ஆமோதிப்பது போல வெட்க புன்னகை ஒன்றை வெயில் கோடென இழுத்தாள். காட்டுக் குளிருக்கு அந்த புன்னகை இளஞ்சூடு கொட்டியது.

அதே நேரம் அருகில் இருந்த புதருக்குள்ளிருந்து படக்கென மேலெழுந்த மயில் அவனைப் பயப்படுத்தியது. அவளைப் பரவசப்படுத்தியது.

“காடுனா அப்டி தான்... சிறுத்தை கூட பாயும். பயப்படமா நட...” என்றவளை... “அடியே... இவ்ளோ ஈஸியா சொல்ற...பயமா இருக்குடி...” என்று பம்மியபடியே பின் தொடர்ந்தான். அவளுக்கு நமட்டு சிரிப்பு. ஒற்றையடி ஒற்றைச்சடையென குதித்துக் குதித்து கீழிறங்கிக் கொண்டிருந்தது.

“இருபது வீடுங்க எங்க ஊர்ல. இதுதான் எங்க பூமி. இதுதான் எங்க வாழ்க்கை. கோயமுத்தூர்காரங்க... நீங்க வேற ஊருக்கு போயி இருந்திட முடியுமா. அப்படித்தான். நாங்க எங்க வேணா வேலைக்கு போவோம். ஆனா போன வேலை முடிஞ்சிட்டா இங்க திரும்பிடுவோம். இந்த காடு தான் எங்க வீடு...” காற்றை அணைத்தாள்... காட்டையே அணைத்தது போல.

சந்தனா.... பேசிக்கொண்டே ஊரடைந்து விட்டாள். நின்று பின்னால் திரும்பி பார்த்த இதயனுக்கு வியப்பு. எத்தனை உயரத்தில் இருந்து கீழே இறங்கி இருக்கிறோம். மலை மேல் ஏறி பிறகு மலைக்கு பின்னால் கீழிறங்கியதை யோசிக்க யோசிக்க பிரமிப்பு. பிரமை போல எனவும் உணர்ந்தான்.

அதற்குள் சொந்த பந்தம் ஊர் மக்கள் எதிர்ப்பட... நண்பன் என்று அறிமுகம் செய்தாள். சின்னச் சின்ன மண் சுவர்களால் ஆன சிறு சிறு வீடுகள். களிமண்ணால் பூசி மொழுகிய வாசல்கள் என மூங்கில் குச்சிகளும்... முதுமரத்து பட்டைகளுமாக குட்டிக் குட்டி கனவு போல இருந்த வீடுகள் ஆச்சரியப்படுத்தின.

அவன் கண் பார்த்த இடத்தையெல்லாம் சொல் பூட்டி விவரித்தாள். பெரு மழைக்கு கரைஞ்சிடும். பெரியவங்க எப்பவாவது கோபப்பட்டா சிதைஞ்சிடும்.

பெரியவங்கனா....ஓ...யானையைத்தான் அப்படி சொல்கிறாள்.

ஊர் மக்கள் ஒருவர் கண்களிலும் ஒரு பொண்ணு ஒரு பையன்கூட வர்றா என்ற கோணப் பார்வை இல்லை. வா சாமி உக்காரு சாமி.. சாப்டு சாமி. எல்லாமே சாமி தான். சட்டென அவர்களோடு நெருங்கி விடும் வேலியற்ற வெளியை அங்கே அவர்கள் உருவாக்கி விட்டார்கள். என்ன இது மாவு உருண்டை... இலையில் ஊற்றிய தேன்... என வயிறு நிறைக்க... வந்து சூழ்ந்து விட்டது விருந்தோம்பல்.

இசைக்கும் காற்று... உடல் நெளிக்கும் ஓடை என வீடுகளைச் சுற்றி இருந்த வனத்தின் அழகு வானத்துக்கும் பூமிக்குமாக விரிந்து கிடந்தது. திரும்பும் பக்கமெல்லாம் சில் காற்று. திரும்ப சொல்லும் பக்கமெல்லாம் மரங்கள் ஆட்டம்.

தன் வீட்டுக்குள் அழைத்து சென்றாள் சந்தனா. விடிந்தால் கல்யாணம். கல்யாணப் பெண் ரத்தனா. படலுக்குப் பின்னால் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள். வெட்கமும் அல்ல. அது வியாக்யானமும் அல்ல. வெற்றிடத்தில் பூத்த வட்ட மலர் ஒன்று பெயர் வைக்க ஏங்குவது போல அந்தப் பார்வை.

"என் அக்கா..." என்றாள் சந்தனா. அனிச்சைப் புன்னகை... மலர் கூட்டி வந்திருப்பது போல.

அக்கா மீதான கரிசனப் பார்வை அவளுக்கு. ஹாய் என்றான். நெற்றி நெகிழ ரத்தனா புன்னகைத்தாள். பற்களில் கரை. கண்களில் பருவத்தின் தரம். கருப்பு நிறத்தில் கவிதைப் பலகை. அப்படி ஒரு வசீகரம். அந்த காடே அவளிடம் இருந்துதான் ஆயிரம் கால்களோடு பிரிகிறதோ என்றுகூட தோன்றச் செய்யும் தோற்றம்.

பார்த்துக் கொண்டே நின்றவளை.... "அக்கா... வந்து உக்காரு.. புதுப்பொண்ணு வெட்கமெல்லாம் உன் மாப்பிள்ளைகிட்ட காட்டு..." சொல்லும் போதே சிரித்துக்கொண்டவள்..." எங்க... மாமா...?" என்று கண்களைப்... படல் தாண்டி விடுத்தாள்.

"அவன் மூங்கில் வெட்ட போயிருக்கான்.. வந்திருவான்...." என்ற குரல் அடுப்படி ஓவியமாய் அசைந்த அம்மாவுடையது.

"எங்க வீடெல்லாம் இப்பிடிதான் தம்பி. வசதியாருக்காது. கொஞ்சம் சமாளிச்சுக்கோ...." என்ற குரல்கள் அவனை ஆசையாய் வருடின.

ரெட்டை மூக்குத்தில... கருங்கல் சிற்பம் மாதிரி இருப்பவளை... பார்க்க பார்க்க ஆச்சரியம் இதயனுக்கு.

"நீ ஏன் மூக்குத்தி குத்திக்கல...?" அவளைப் பார்த்துக் கொண்டே இவளிடம் கேட்டான்.

" ஹ்ம்ம்...அதான் எனக்கும் சேர்த்து அவ ரெண்டா குத்தி இருக்காளே..." அவனைப் பார்த்து சிரித்துக் கொண்டவள் அக்காவை சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

முன் இரவு முற்றத்தில் நிலா தான் முதல் விழுந்தாளி.

இருக்கும் இருவது வீடுகளுமே சொந்தக்காரங்கதான். இந்த வீட்டுக்கு அவர்கள் வருவதும்.... அந்த வீட்டுக்கு இவர்கள் போவதும்.. கல்யாண வீடு கலை கட்டிக் கொண்டிருக்கிறது. வாசலில் ஒரு முகப்பில் காட்டுமுனி ஜம்மென்று அமர்ந்திருக்கிறார். பக்கத்திலேயே தீயிட்டு சுற்றி ஆட்டம். அவர்கள் வழக்க ஆட்டம். பார்க்க பார்க்க துள்ளல் கூடி நடுவில் நின்று ஆட ஆரம்பித்து விட்டான் இதயன். சற்று நேரத்தில் காட்டுமுனியும் சேர்ந்து கொள்வார் என்றார்கள். திக்கென்றது அவனுக்கு. பயப்படாத என்று கண் அடித்து சிறு பிள்ளை உள்ளூலு காட்டினாள் சந்தனா. திருநீறு பூசிக்கொண்டு நின்ற ரத்தனா காட்டுப்பேச்சி போல கணம் ஒன்றில் தோன்றினாள்.

இன்பம் பொங்கிய இதயனுக்கு என்னவோ நன்றாக இருந்தது. உடல் கொண்ட எந்த சுமையோ அவனை விட்டு அகல்வதை அவனால் உணர முடிந்தது. உலகம் இத்தனை மெதுவாகவா சுற்றுகிறது. கண்களைச் சுழல விட்டு மேலே அண்ணார்ந்து பார்க்க.. வானமும் தொடுவானமும் இப்போதுதான் வரைந்து முடிந்திருக்கிறது. வந்தவழி கொண்ட சித்திரத்தில்... தான் மீண்டும் மீண்டும் வருவதாகத் தோன்றியது. என்ன ஓர் அமைதி. என்ன ஓர் ஆனந்தம். ஆட்டம் சூடு பிடிக்க மாமன் உருமனும் கலந்து கொண்டான். ஆட்டம் என்பதே உடல் வரையும் சித்திரம் தானே. ஒரு புணர்ச்சி விதியின் முதல் அடி தன்னுடலை அசைக்கும் ஆட்டத்தில்தானே ஆரம்பிக்கிறது.

மணப்பெண் ஆடாமல் இருப்பது...வெட்கம் தாங்காமல் அல்ல. அவளுக்கு வேடிக்கை பார்க்கத்தான் பிடிக்கும். அவளை அவ்வப்போது பார்த்துக் கொண்ட இதயன்... 'வாங்க... வந்து ஆடுங்க..' என்று ஜாடை செய்தான். அவள் பதிலற்ற மெல்லிய புன்னகையைத் தந்தபடியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஏறி இறங்கும் உடலின் மொழியில்தான் எத்தனை விதங்கள். பார்க்க பார்க்க வேர்த்த மனதில்... மானுட மலர்கள் மாயம் செய்கின்றன. இரவும் நிலவும்... தீயும் தீபங்களும்... அந்த வீடுகளை சுற்றிச் சுற்றி ஆசீர்வதிக்கின்றன. இரவு உணவு... இசை நிரம்ப... கனவு உலகம் காடு திறக்கிறது. வீட்டுத் திண்ணையில் படுக்கை ஒதுக்கியாயிற்று. சொர்க்கம் வந்தவன் உறங்குவது முறையோ. அவன் காட்டை வெறித்து நின்றான். நேரம் கூட.... படுப்பார் வீடடைந்து கொண்டார்கள்.

பாலப்பாறையில் கம்பளி போர்த்தி அமர்ந்திருந்தவன் அருகே சந்தனாவும் அமர்ந்திருந்தாள். நிலவுக்கு நெருக்கமான பாறை அது. நிலவில் இருந்து உருண்ட பாறை தான் அதுவோ. மிருகத்துக்கும் காதல் பூக்கும் வனம் அல்லவா இது. என்ன ஓர் இலகுவான இலை

மனம் வாய்க்கிறது. என்னென்னவோ எண்ணங்கள் இதயனுக்கு.

திண்ணையில் அமர்ந்து பாறையில் அமர்ந்திருக்கும் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த ரத்தனாவுக்கு... தான் படிக்கவில்லை என்ற வருத்தம் இருக்கிறது. இனம் புரியாத தாழ்வு மனப்பான்மை வேறு எப்போதும் அவள் மடியில் கிடக்கும் பேச்சு மூச்சில்லாத குழந்தை போல. இப்போது கூட படித்தவர்களை விட்டு சற்று தள்ளியே இருக்க செய்கிறது... மனம் புரியாத தவிப்பு.

பேச்சு... காட்டில் ஆரம்பித்து...எங்கெங்கோ சென்றது. நேரம் கண்களில் ஆரம்பித்து... காட்டு முயலாய் ஓடியது. சரி தூங்கலாம் என்றாள் சந்தனா. அவளை குளிர் பறக்க பார்த்தவன்..." நீ தூங்கு.... நான் கொஞ்ச நேரம் இந்தக் காட்டை இருட்டுல பாக்கறேன்..." என்றான்.

அவன் இமைகளில் இருந்த நடுக்கத்தில் இன்பம்தான் துள்ளியது. நின்று ஆழமாய் பார்த்தவள்... ஹ்ம்ம்ம் என்றபடியே வீட்டுக்குள் சென்று விட்டாள். சற்று நேரம் அப்படியே அமர்ந்திருந்தான். வானமும் பூமியும் பேசிக்கொள்ளும் நிசப்தம் அந்தக் காட்டில் சிறு சிறு பூச்சிகளின் சிருங்காரத் தத்துவமாக கேட்டது. அப்படியே முதுகுக்கு பின்னால் திரும்பியவன் கண்களில் ரத்தனா களைந்தாள்.

ஒரு கல் சிற்பம் போல வாசலில் அமர்ந்திருந்தவளைப் பார்த்த... இதயன்... "ஹேய்.. கல்யாணப் பொண்ணு... தூங்கலயா...? என்றான். வார்த்தைகளில் குளிர் நிரம்பிய குதூகலம். ஸ்ஸ்ஸ் என்று உள்ளங்கைகளை உரசிக் கொண்டான். உரசலுக்கு தகுந்தாற் போல அவன் உடலும் ஒரு சிலிர்ப்பு சிலிர்த்துக் கொண்டது. ஈரக் காற்று அவ்வப்போது வந்து வந்து சுழன்று போகிறது.

வாசலில் ஒளிர்ந்த நிலவொளியில் அவளொரு இருளொளி போல தெரிந்தாள். அமைதியாக தலை ஆட்டினாள். நிழல் அசைக்கும் சித்திரமா அவள்.

"அப்போ... இங்க வாங்க... பேசிட்டிருக்கலாம்" என்றான். கூப்பிட்டு விட்டு அவன் திரும்பி கொண்டான். அவனால் தூரங்களில் இருந்து கண்களை எடுக்க முடியவில்லை.

வருவாளா வரமாட்டாளா என்பது பற்றிய எந்த புள்ளியும் அவனிடம் இல்லை. அவன் முன் குவிந்திருக்கும் ராத்திரிக்கோலம் காடெனும் கிளைகள்தான். சட்டென என்னவோ சூடு. திக்கென திரும்பினான். அருகே அவள் அமர்ந்திருந்தாள். எப்போது எழுந்தாள். எப்போது நடந்தாள். எப்போது வந்தாள். எப்போது அமர்ந்தாள். ஒரு புதிர் போல அருகே இருந்தவளைப் பார்க்க என்னவோ போல இருந்தது. ஆனால் அவள் அவனைத் தாண்டி தூரத்தில் ஒரு மாய தேசத்தை கற்பனை செய்து கொண்டிருக்கிறாள். அவள் கண்கள் சூனியத்தில் மிதந்தது.

"நீங்க எப்பவுமே இப்பிடிதானா...!" மெல்ல குரலை செருமியவனுக்கு குளிர் நன்றாக இருந்தது. ஆழமாய் மூச்சிழுத்துக் கொண்டவனுக்கு அவளைப் பார்க்க பார்க்க ஒரு மாதிரி ஆச்சரியமாகவே இருந்தது.

"இப்பிடின்னா..?"

சடக்கென்று உடைந்துவிடும் பழுத்த இலையின் பக்குவம் குரலில்.

"பேசவே மாட்டீங்கன்னு நினைச்சேன். பரவால்ல. பேசறீங்க.." என்று சொன்னவன் முகத்தில் துள்ளல் புன்னகை.

மெல்ல புன்னகைத்தவள்... ஒருமுறை அவன் முகத்தை கூர்ந்து பார்த்தாள்.

"உங்க சிரிப்புகூட மோனாலிசா புன்னகை மாதிரிங்க.. ஒன்னும் புரியல. ஆமா.. இது காதல் கல்யாணமா....?" என்றான். புருவம் தூக்கிய கேலி... அந்த நெருப்பு நிழலில்... நன்றாகவே பார்க்க முடிந்தது.

முதல் சொன்னது புரியவில்லை. இரண்டாவது சொன்னதுக்கு என்ன சொல்றது. ஆனாலும் சொன்னாள்.

"ஆசை தான். ஆனா இல்ல. எங்க வழக்கம் மாமன் பையன கட்டிக்கறது. இல்லனா மாமன்களையே கட்டிக்கறது. புடிக்குது புடிக்காது எல்லாம் இல்ல..." சற்று யோசித்தவள்..." எனக்கு சொல்ல தெரியலீங்க..." என்றாள். மிக மெல்லிய குரல் அது. மொட்டு விடப் போகும் மல்லியின் பக்குவம் அது.

வெட்கப்படுகிறாளா.. வேப்பம்பூ பறிக்கிறாளா....

அவளையே கூர்ந்து பார்த்தவன்... குரலைத் தாழ்த்தி " காதலிக்காம என்னங்க கல்யாணம்...?" என்றான். தலைக்குள் என்னவோ கிறுக்கினான்.

"காட்டுத்தீ மாதிரி காதலிச்சு... திகட்ட திகட்ட மழை பேஞ்சு அணைக்கற மாதிரி கல்யாணம் பண்ணிக்கணும். அதான் கிக். அத விட்டுட்டு....மாமன் பையனாவே இருக்கட்டுமே. காதலிக்க கூடாதுனு ஏதும் இருக்கா. இப்ப பாருங்க நான் உங்கள காதலிக்க வைக்கறேன்..?" என்றான். அவன் முகத்தில் ஆர்வம் படபடவென பொறிந்தது.

யோசனையோடு என்ன சொல்றான் என்பதாக அவனையே பார்த்தவள்... "புரியல.." என்றாள்.

ரெம்பெல்லாம் யோசிக்க வேண்டாம். நான் சொல்றன்.. நீங்க கேளுங்க... கல்யாணப் பொண்ணு இவ்ளோ டல்லாவா இருக்கிறது. உங்கள எப்பிடி ஹாப்பி பண்றேன் பாருங்க..." என்றவன்... "உங்கள இப்ப பள்ளிக்கூடத்துக்கு கூட்டிட்டு போகப் போறேன்

பாருங்க...'' என்று மாயாஜாலம் செய்கிறவன் போல கையை அப்பிடி இப்பிடி ஆட்டி விட்டு.. ''ஜீ பூம்பா... இப்போ நீங்க பள்ளிக்கூடத்துல இருக்கீங்க. அதான் இங்கிருந்து நாலு மைல் தூரத்துல மேக்காலே இருக்கே. உங்க தங்கச்சி படிச்ச பள்ளிக்கூடம்... அது தான். அங்க தான் நீங்களும் படிக்கறீங்க....''

அவளுக்குப் புரியவில்லை. ஆனாலும் அவன் செய்யும் சேஷ்டைகள் நன்றாக இருக்கிறது. சரி என்பது போல சிறு புன்னகையோடு அவனையே பார்த்தாள்.

பள்ளிக்கூடத்துல உங்க மாமன் பையன்கூட படிக்கறீங்க. அவன் பேர் என்ன... யெஸ்ஸ்...... உறுமன். ஹா.. அவன் உங்க பின்னால உக்காந்து வாத்தியார் வகுப்பு எடுக்கும்போது ஜடைய புடிச்சு இழுத்துட்டு தெரியாத மாதிரி உக்காந்துக்கறான்.

நெற்றி சுருக்கி பார்த்தவள்... இழுபட்ட தன் ஜடையை அனிச்சையாகத் தொட்டு பார்த்துக் கொண்டாள்.

திரும்பி பார்த்து ஒரு... மொறை. அது அத்த புள்ள மொறை. வகுப்பே களுக்குனு சிரிக்குது. வாத்தியார் என்ன சிரிப்புன்னு கத்தறார்.

அவள் குத்துக்கால் மாறிக் கொண்டது. ஆனாலும் முகத்தில் தீர்க்கம். அவளுக்கு என்னவோ பிடி பட்டு விட்டது. இந்த இரவை கடத்திவிட.... தனக்குள் இறுகி இருக்கும் பாறையில் துளிர்த்து விட ஒரு காரணம் கிடைத்து விட்டதாக ஆழமாய் மூச்சிழுத்துக் கொண்டாள்.

பள்ளிக்கூடமே பார்க்காதவளுக்கு... சந்தனா சொல்லி இருக்கும் நினைவோடு மனதுக்குள் விரிந்த கூரை.. அவளை ஒரு நடக்கும் பட்டாம்பூச்சியாய் ஆக்கி விட்டது. என்ன வண்ணம் சேர்க்கலாம். அவளுக்குத் தங்க நிறத்தில் மிதந்த பட்டாம் பூச்சியை விரட்டிக் கொண்டே ஓடும் உறுமனைப் பார்க்க பார்க்க பரவசம். பள்ளிக்கூட திண்டில் அமர்ந்து எல்லாரும் மதிய சோறு திங்க... அவள் மன சிறகில் மைதானம் சுற்றிக் கொண்டிருக்கிறது பசி.

மஞ்சள் வெயில் நேரத்தில்... நீங்க பதினாறு வயசு மூங்கில் காடு. பார்வை நெருப்போடு பருவ மீசை முறுக்கோடு உங்க உறுமன் அந்த வழியா வர்றாரு.

இதயன் காட்சியை விவரிக்கும் வேகத்தில் ஒரு சிற்பியைப் போல நுட்பமாகி விட்டான். கதை சொல்வதில் கில்லாடி. அவன்... காட்டாற்றை நிறுத்தி சட்டென அருவியாக்கும் மாய வித்தை அறிந்த கற்பனைப் பூச்சி. வாய்ப்பு கிடைக்கையில் எல்லாம் பேசிப் பேசியே எதிரே இருப்போரின் இதயம் இளக்கி விடுவான். அவனுக்கு எல்லாரும் இன்பமா இருக்கனும். இருக்கற இடத்தை கலகலப்பாக்கிட்டு ஒரு கஸல் கவிதை மாதிரி கடந்து போயிடுவான்.

''ஏய் புள்ள...சாமிகிட்ட அப்பிடி என்ன வேண்டிக்கிற....?'' இது சும்மா வம்பிழுக்க உறுமன் போடற வாய் வேஷம்.

''எப்பா சாமி... எப்பிடியாவது இந்த பையகிட்டருந்து என்னக்காப்பாத்தி கரை ஏத்தி விட்டுருன்னு தான்..'' அவ ரெட்டை ஜடைய முன்னால போட்டு நித்தம் நித்தம் நெல்லு சோறு பாட்டு பாடற கனவோடு ஒரு கோக்கு மாக்கு பேச்சு சும்மா.. ஏன் அவன் மட்டும் தான் வாய் வேஷம் போடுவானா. அவளும் நன்றாகவே போடுவாள்.

''ஏன் இந்த பயலுக்கு என்ன குறைச்சலாம்...'' அவன்.

''குறைச்சல்லாம் ஒன்னும் இல்ல.. தொப்பதான் கொஞ்சம் நிறை...'' எப்பிடி பேச்சு பாரு.. அவளுக்கு.

தன் வயிறுதொட்டு பார்த்தபடியே... ''ஏன் தொப்பைக்கு என்ன.. நல்லாத்தான இருக்கு...'' கன்னத்துல சந்தேகம் தொங்குது. காதுல ஆனாலும் காதல் தான் மின்னுது.

''அதான வம்பே....இப்பவே இப்பிடினா......'' அதுக்கு அப்புறம் ரகசியம் பாவித்தாள்.

கொஞ்சம் கவனம் விட்டவன்.. காற்றை கடித்தவன் போல....'' ஹேய்.. கள்ளி... உனக்கு இப்டில்லாம் பேச வருமா..?!'' கேட்டுகிட்டே வயித்தை உள்ளே எக்கிக்கிட்டான் உறுமன்.

நன்றாகவே சிரித்து விட்டாள் ரத்தனா. இத்தனை நேரம் இருந்த இறுக்கம் இப்போது இல்லை. குளிர் காற்றில் காட்டுப் பூ மணம்.

''நல்லா பேசறீங்க.. உங்க ஆபீஸ்ல எப்பவும் இப்பிடி பேசி எல்லாரையும் சிரிக்க வைப்பீங்கனு சந்தனா சொல்லிருக்கா...'' அவளுக்கு ஆச்சரியம் குறையவில்லை.

''அதெல்லாம் இருக்கட்டும்... இப்ப உங்க உறுமன் மேல காதல் கீதல் எட்டி பார்க்குதா....'' என்றவன்... ''காதல் வராம விடக் கூடாது.... இருங்க... இன்னொரு நாள் என்னாகுது...'' என்று தொடர்ந்தான்.

வெட்கம் சூழ அவனையே ஆழ்ந்து பார்த்தாள். அடுத்து என்ன சொல்ல போறானோ என்ற ஆர்வம் பொங்க புன்னகை அடக்கிக் கொண்டு பார்த்தாள்.

காட்டுல சுள்ளி பொறுக்கிட்டுருக்கீங்க. எதுத்தாப்ல நீலக்கரடி. வேக வேகமா உங்கள பார்த்து வருது. உங்களுக்கு என்ன செய்யறதுனே தெரில. மிரண்டு போயி நிக்கறீங்க. உங்க கண்ணு கரடிகிட்ட போகுது... கரடி கண்ணு உங்ககிட்ட வருது. மரம் ஒன்னு கூட மூச்சு விடல. ஒரு இலை கூட விழல. விசுக்குனு

பின்னாலருந்து ஒரு கை இழுத்து அப்டியே பாறை சந்துக்குள்ள சேர்த்துக்குது.

யாரு கையா... உங்க உறுமன் கை தான். முரட்டுக்கை.

"பொத்தி வெச்ச மல்லிகை மொட்டு... பூத்திருச்சு.. வெட்கத்தை விட்டு..

பொத்தி வெச்ச மல்லிகை மொட்டு... பூத்திருச்சு.. வெட்கத்தை விட்டு...."

காட்சியை அப்படியே நிறுத்தி விட்டு பாட்டை தொடர்ந்தான். அவள் அவன் பாடுவதையே ரசித்துப் பார்த்தாள். அவளை அறியாமல் சிரிப்பு கொப்பளித்தது.

முகம் மலர பார்த்தவளுக்கு நேரம் போவதே தெரியவில்லை. தெரிந்து கொள்ள விரும்பவும் இல்லை. என்னவோ ஒரு வெளிச்சம் அவளை சூழ்வதை உணர முடிந்தது. இந்த கல்யாணம் பிடித்திருக்கிறதா பிடிக்கவில்லையா என்ற யோசனையே இல்லாதவளுக்கு... தனக்கு பிடிக்கிறதா பிடிக்கவில்லையா என்று யோசிக்க வேண்டும் போல தோன்றியது.

உங்களுக்காக தேன் எடுக்க மலை உச்சிக்கு போன உறுமன்.. ரெண்டு நாளா திரும்பல. ஊரே பத பதைக்குது. முதல் முறையா அவன் மேல இருக்கற காதலை நீங்க உணர்ற இடம் இது.

அவள் கூர்ந்து கவனிக்கிறாள்.

மாமன் பையன் தானே. அவ்ளோ தான் அப்டினு இருந்தது... முதல் முறையா... உறுமா எங்க இருக்கன்னு மனசு அடிச்சுக்குது. அவளை அடிச்சீங்கள்ல... என்னையும் அடிங்கன்னு வீட்டு பாடம் பண்ணிட்டு வந்தும்...கூட சேர்ந்து வாத்திகிட்ட கையை நீட்டின உறுமன் நெத்தில ஓடறான். நெஞ்சுக்குள்ள தாவறான்.

எல்லாருக்கும் வெள்ளை கொய்யா குடுத்துட்டு உங்களுக்கு மட்டும் செவப்பு கொய்யா குடுப்பான். என்ன இனிக்குதா...ரத்தனான்னு கேப்பானே.

சற்று இடைவெளி விட்டு... அடுத்து டக்குனு சொல்ல ஒன்னும் வராம... இந்த குரல் தான்... என் குரலாவே இருக்கு. அவன் குரல்ல நீங்க மாத்தி யோசிச்சுக்கோங்க என்ற போது இதயனும் சிரித்து விட்டான்.

அவர்களைச் சுற்றி மின்மினி கூட்டம் திடும்மென கண்கள் மூடி வெளிச்சம் அணைத்து போனது. சின்ன இருட்டுக்கு சிவந்த உருவங்களாக அந்த நேர ஓவியம் தான் அது. எரியும் நெருப்பு வார்க்கும் வனப்பென... நிழல் தேசப் படங்களை காற்றுவெளி ஒரு சுவற்றுக் கற்பனையைக் கொண்டிருந்தது.

மரத்தடியே நின்று மாங்காய் தின்னும் போது... ஓடி வந்த உறுமன் கிளை பற்றி இழுத்து ஆட்டி விடுகிறான். படபடவென கொட்டுவது....

ஐயோ என்று உடல் குறுக்கி தலை தாழ்த்தி விழிகளை மேலே உருட்டி அந்த பனி துளிகளுக்கு இப்போது அவளையும் அறியாமல் பவ்யம் காட்ட...

ஓ... இருங்க இருங்க.. குளிரும்ல... இப்ப சீன மாத்தறேன்... பனிக்கு பதிலா இதயம் இதயமா உடல் மீது பூ கட்டும் இலைகள்... பூக்கட்டும். இப்ப எப்டிருக்கு.

குளிருக்கு சுருங்கிய உடல் இப்போது சுருதி சேர்ந்த லயத்தோடு விரிகிறது. விரியும் அவள் முகத்தில் இலை வடிவ இதயம் பூப்பதை உணர முடிகிறது.

எத்தனை தூரத்தில் இருந்தாலும்.. அவன் பார்வை உங்களை விட்டு அகலுவதில்லை. அவன் ஒருபோதும் உங்களை விட்டு விலகுவதில்லை. காதலின் கீதம் சருகு மிதிக்காத அவன் பாதத்தில் இருந்து எழுவதை சேக்காளிகள் கூட இருந்தும் உணர உங்களால் முடிகிறது ரத்தனா. காதலில் விழுவோர் மத்தியில் நீங்கள் காதலில் எழுந்தீர்.

அவளுக்கு மூச்சு வாங்கியது. பேச்சுக்கு முயற்சிக்கவில்லை.

"இப்ப சொல்லுங்க.. காதல் வந்திருச்சுதான....!" ஆசை ஆசையாய் அவள் முகம் பார்த்து மூச்சலைந்தான்.

அவள் அவனையே பார்த்தாள். அவள் கண்களில் நீர் துளிர்த்தது. தன்னை... தான் என்று உணர்ந்த நொடிகளை அவளால் சுமக்க முடியவில்லை. அவனை அதிசயமாகப் பார்த்தாள். தலைக்குள் சுழலன்ற கரடியின் கத்தல்.... அப்படியே ஓர் அருவிக்குள் ஆர்ப்பரிக்கும் இரவு போல விரிந்தது. பட்டாம் பூச்சிகளின் கூட்டத்தில் நிர்வாணமாய் தானும் சிறகு பூட்டி பறப்பது போல பார்க்கிறாள்.

அவள் ஆம் என்றும் சொல்லவில்லை. இல்லை என்றும் சொல்லவில்லை. கீழ் வானம் சிவந்து கொண்டிருக்கிறது.

என்னடா சொல்ற... என்றபடியே வானத்தைப் பார்த்தவளுக்கு நேரம் அதிகாலை நான்கு என்று புரிந்து விட்டது. ஆட்கள் எழுந்து கொண்டார்கள். சரசரவென கல்யாண வேலையைப் பார்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

"இதயா... கொஞ்சமாவது அர்த்தத்தோடு பேசு. என்ன இது கற்பனை. ஒன்னும் விளங்கல..." என்ற சந்தனா கண்கள் சிவந்தாள்.

"நான் உன் அக்காவை காதலிக்கிறேன். எனக்கு

அவதான் சரினு படுது. அவ என்கூட தான் வாழனும். நான் உறுமனைப் பத்தி பேசிட்டுருக்கேன். ஆனா அவ என்னை பாத்துகிட்டுருக்கா. என்ன பாக்கற.... நிஜமாதான். அவ கண்ணுல நான்தான் தெரிஞ்சேன். அவ என்னை பார்த்தா. என்னதான் பார்த்தா. அவன் கண்ணுல நான் தெரிஞ்சேன். நான்தான் தெரிஞ்சேன். நான் பார்த்தேன்...." அவனுக்கு மூச்சு விட பாரமாய் இருந்தது. எந்த நொடி வளைவென்று தெரியவில்லை. வளைந்து கொண்டே இருக்கும் மனதில் ஏறிக் கொண்டேயிருக்கும் பாறாங்கல் சுமை. சுமக்க பிடித்தது அவனுக்கு.

"ஐயோ லூசு மாதிரி உளறாத. நீ எப்பவும் போல சொல்ற கதை இது. உன் கதைக்குள்ள எப்பவுமே நீதான் ஹீரோ. அதான் அப்டி தோணுது. இந்தக் கதைல உறுமன் இடத்துல... கதை போக போக நீயே உக்காந்துகிட்ட. கற்பனைய விட்டு வெளிய வா இதயா. இன்னும் கொஞ்ச நேரத்துல அவளுக்கு கல்யாணம். இப்பிடி எதையாவது பேசி குழப்பிடாத..."

சந்தனாவுக்கு ஒன்றும் புலப்படவில்லை. கிட்டத்தட்ட கெஞ்சுகிறாள்.

"இல்ல சந்தனா... உன் அக்கா கண்ணுல காதல பார்த்தேன். அது அது... ஐயோ வார்த்தை கிடைக்க மாட்டேங்குதே. சில எண்ணங்களுக்கு மொழி இல்லை. ஆனா அதே நேரம் ஊமையும் இல்ல. காதலை உணர்றது ஒரு மாதிரி ஜென். அது எப்பவாவது ஒரு கணம்.. அதுக்கு குறைவா ஒரு நொடி அப்டியே பூத்து காட்டிக் குடுத்துரும். அந்த நொடியை ரத்தனா முகத்துல நான் பார்த்தேன். கண்டிப்பா எனக்கு தெரியும் அவ என்ன காதலிக்கிறா..."

சில நொடிகள் மௌனமாய் அவனையே பார்த்தாள். அவனும் பார்த்தான். குரலை செருமிக் கொண்டு மெல்ல பேசினாள்.

கற்பனைல மிதந்து நிஜத்தை கொல்ல பாக்கற இதயா..

ஐயோ இல்ல. ஆரம்பிச்சது என்னவோ கற்பனைல தான்... ஆனா போக போக அதுல ஒரு நிஜம் பூக்க ஆரம்பிச்சது. இரு... இன்னும் விளங்கற மாதிரி சொல்றேன். பொத்தி வெச்ச மல்லிகை மொட்டு பாட்ட...உறுமன் தான பாடறான்... ஆனா அவ என் வாய பார்த்துட்டு இருந்தா...

அயோ மெண்டல்... உறுமன் பாடறதா நீதான பாடின. அப்போ உன் வாயத்தான பாக்க முடியும்.

ஐயோ அந்த பார்வைய நான் சொல்லல. இது... இது... அது அவ மனசுல உறுமன் வரவே இல்ல... அத நான் உணர்ந்தேன்...

அவன் திணறினான்.

இதுவரை இதுநாள் வரை இதயனை இப்படி அவள் பார்த்ததில்லை. தலையில் இதயம் துடிக்க அவனையே வெறிக்கப் பார்த்தாள்.

வேணும்னா நீ உன் அக்காகிட்ட கேளு. அவ ஆமான்னு தான் சொல்லுவா.

ஒரு ராத்திரில.... அதுவும் அவ கூட பேசின இந்த ரெண்டு மணி நேரத்துல காதல் வருமா.. என்ன இதயா இது. இவ்ளோ படிச்சவன்... நீயே இப்படி பிதற்றலாமா.

காதலுக்கு கண்ணு மட்டும் இல்ல.. சந்தனா. கால்களும் இல்ல. அதுக்கு றெக்கை தான் உடம்பு முழுக்க. எப்போ விரியுதோ அப்போ பறந்துரும்.

கிறுக்கா... உன்ன...உன்ன என்ன தாண்டா பண்றது...

அவளால் ஒன்றும் யோசிக்க முடியவில்லை. அக்காவிடமே கேட்டு விட்டால் என்ன. அப்படி சட்டென கேட்டு விட்ட முடியாது. தயங்கினாள். ஒரு வேளை ரத்தனாவுக்கும் காதல் வந்திருக்குமோ. எழுந்தாள். மெல்ல வீட்டுக்குள் சென்றாள். மணப்பெண்ணுக்கான அலங்காரம் நடந்து கொண்டிருக்கிறது. பக்கத்து வீட்டு பெரிய அக்காள்கள்.. சேக்காளி புள்ளைங்க எல்லாரும் அலங்கார அணிவகுப்புக்கு அஸ்திவாரம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படியே உள்ளே என்ன நடக்கிறது என்று பார்ப்பது போல நோட்டம் விட்டாள். ரத்தனாவின் கண்களில் என்னவோ குறுகுறுப்பு. சூனியம் வெறித்தபடி... அலங்காரத்துக்கு தன்னை ஒப்புக்கொடுத்து அமர்ந்திருக்கிறாள்.

காதல்ல விழுந்தவ இவ்ளோ நிதானமா உக்காந்து கல்யாணத்துக்கு தயாராகிட்டுருப்பாளா.

ஓரமாய் அமர்ந்து அக்காவையே கூர்ந்து பார்த்தாள். தலையில் இருந்த பூ வளையத்தை சரி செய்வது போல எழுந்து... அருகே சென்று அவள் முகம் கவனித்தாள். அவள் உடலில் சிறு நடுக்கம். பாதங்கள் பதிந்த தரையில் வியர்வை.

"என்னாச்சு ஏன் நடுங்கற... ஏன் இப்பிடி வேர்க்குது....?" என்றாள். இயல்பாய் கேட்பது போல கேட்டுக்கொண்டே அவள் இமைகளைப் பார்த்தாள்.

"கல்யாணப் பொண்ணுக்கு என்னென்னவோ பயம் இருக்க தான் செய்யும். அதான் நடுங்குது. வேர்க்குது. நாளைக்கு விடியும் போது பாரு. உங்க மாமன் தான் நடுங்குவான்.." என்ற பெரியாத்தாவுக்கு பல்லு போனாலும் லொல்லு போகல.

ஆளாளுக்கு அர்த்தம் மாற்றி அர்த்தம் சிரித்தார்கள்.

சந்தனாவும் சிரிப்பது போன்ற பாவனையோடு வாசலுக்கு வந்தாள். இப்போது தனக்குள் சுழலும் நடுக்கத்தை உணர உணர உள்ளத்தில் பதற்றம்.

அவளுக்கும் காதல் வந்திருச்சுதானோ. கள்ளி.. காட்டிக்க மாட்டிக்கறாளோ. சரி...அப்படியே காதல் இருந்தா மட்டும் என்ன பண்ண முடியும். இந்த நேரத்துல போயி... அதுமில்லாம இதயன் வீட்டை நினைத்தால்... இந்த மலங்காட்டு புள்ளைய அவுங்க ஏத்துக்குவாங்களா. மாமா உறுமன் பாவம் இல்லையா... அதுக்கு காதலிக்க வேணா தெரியாம இருக்கலாம். காப்பாத்த தெரியுமே. அதே நேரம் இதயன் சொல்வதையும் விளையாட்டாக எடுத்துக் கொள்ள முடியாது. அவன் விளையாடுகிற ஆள் தான் ஆனா ஏமாத்த மாட்டான். பொய் சொல்ல மாட்டான். அவனும் காதலிக்க ஆரம்பிச்சிட்டான்தான் போல.

ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. வாய தொறந்து இவ ஏதும் சொன்னாவாவது ஏதாவது செய்யலாம். ஒரு ராத்திரில வந்த காதலை நம்பி என்னத்த பண்ண முடியும். அதுவும் இவ பக்கம் உண்டா இல்லையான்னு கூட தெரியாது. சட்டென திரும்பி அவள் முகத்தைப் பார்த்தாள். அவள் சட்டென குனிந்து கொண்டாள். ஆடு தொலைத்த அவளின் சின்ன வயது முகம் வந்து போனது. எதற்குமே ஆசைப்படாத அக்கா. அவள் ஆடு மேய்த்து தன்னை கல்லூரிக்கு அனுப்பியவள். அவள் புது துணி போடுவதை ஒருபோதும் விரும்ப மாட்டாள். ஏதா இருந்தாலும் தனக்கு கொடுப்பதையே வாழ்நாள் வழக்கமாக வைத்திருப்பவள். வாயைத் திறந்து எதையும் கேட்காத... கேட்க தெரியாத ஒரு ஆதி மரம் அக்கா. ஒருவேளை அவன் சொல்ற மாதிரி காதலிக்கத்தான் செய்யறாளோ..?

அவள் கால்கள் நடுங்குகின்றன. அமர்ந்திருந்தாலும் அங்கும் இங்கும் ஓடும் கால்கள் அவை. அதிகாலை குளிர் அங்கே பாறையையே நடுங்க செய்து கொண்டிருக்கிறது. அவளுக்கு வேர்த்துக் கொண்டிருக்கிறது.

இந்த மாதிரி எல்லாம் அக்காவிடம் பேசியதும் இல்லை. இத்தனை பேர் இருக்க என்னவென்று கேட்பது. சந்தேகப் படறயான்னு அவ கேட்டுட்டா என்ன பண்றது. அவன் வேற அடிச்சு சொல்றான்.

உன்கிட்ட சொன்னாளா....?

மனதுக்குள் ஒவ்வொரு காட்சியாய் ஓட்டி பார்த்தவன்...."இல்ல. ஆனா அவ கண்கள் பேசுச்சு..."

"அவ கண்ணே அப்டி தான். எல்லாத்துக்கும் ஆச்சரியப்படுகிற கண்கள்..."

"ஆத்துல துணி துவைக்கும் போது மேலே ஒத்தையடில மாமா போறத பார்த்துட்டா... சட்டுனு தண்ணிக்குள்ள குதிச்சு அலுங்காம நீந்தி சூரியன் களைப்பாள்ன்னு சொன்னதுக்கு வெட்கம் தாங்காம மூஞ்சை திருப்பிக்கிட்டாளே..."

"ஐயோ அது எங்க மாமாவை நினைச்சுதான இதயா...."

"இல்ல. நான் மாமாங்கறதுக்கு பதிலா கதை சொல்ற மும்முரத்துல நான்னு சொல்லிட்டேன். அப்போ வெட்கப்பட்டா. அப்புறமா நான் இல்ல உங்க மாமா உங்க மாமான்னு சொன்னேன். அப்போ வெட்கம் இல்ல.."

"ஐயோ... இரு..." என்று மறுபடியும் உள்ளே சென்று அவளருகே நின்று விட்டாள்.

நேரம் கூடி விட்டது. ஊர்சனம் வாசலில் குழுமி விட்டார்கள். உறுமன் சும்மா ஜம்மென்று மாப்பிள்ளையாக வந்தமர்ந்து விட்டான்.

ஒரு கற்பனையில் இருக்கும் காதலனின் உருவத்தை அவனால் கொண்டு வரவே முடியாது. அவன் மாமன் பையன். இதோ புருஷன் ஆக போகிறவன். அவ்வளவு தான். அப்படியே திரும்பி அக்காவைப் பார்க்க.. அவள் கண்களில் வெறுமை. வறட்சி கசிந்த வெறுமைத் திரள்கள். கொடி கொண்ட மாலையில் செடி கொண்ட பூக்கள்...சுணங்கி தான் கிடக்கிறதோ. தலையில் கிரீடம் இலை கொண்ட இதயம் என்று நடுவே பூ கொண்ட பருவம் என்று.... அதிகாலை நேரம் அழகு பூத்து குலுங்குகிறது. ஆனாலும் அங்கே கல் தூண் தான் அமர்ந்திருக்கிறது. கணம் ஏறிய முகத்தில் காற்றாடவில்லை.

செய்வதறியாது... தடுமாறி நிற்கும் இதயனுக்கு கண்கள் கலங்கி கொண்டே இருக்கிறது. இதயம் வெடித்து விடும் நடுக்கம் அவன் முகத்தில்.

இந்த காதல் மாதிரி ஒரு மாயப்பிசாசு எங்கயும் இருக்காது. சட்டுனு பூத்து சட்டுனு உதிர்ந்து சட்டுனு மண்ணோடு மண்ணா போய்டும். அவனுக்கு பின்னால் உயர்ந்து நிற்கும் மலையைச் சுற்றி இந்தநாள் ஒரு தற்கொலையைச் சூடிக் கொண்டிருக்கிறது போல. பைத்தியக்காரத்தனத்தின் உச்சமாக உணர்ந்தான். தன்னையே நொந்து கொண்டான். என்ன இது வீண் வேலை. இல்லயே. எந்த புள்ளியில் உருவ மாற்றம் உள்ளத்தில் உருவாகியது என்று தெரியலயே. எப்பருந்தோ ரத்தனா கூடவே இருக்கற மாதிரி ஒரு எண்ண ஓட்டம். இதே காட்டுமுனிக்கு முன்னால முன்னமே மாலை மாத்திக்கிட்ட காட்சியெல்லாம் கதையைத் தாண்டி தலைக்குள்ள ஓடுதே.

அவ உன்கிட்ட சொன்னாளா.

கண்டிப்பா சொன்னா. அவள் மூச்சு காத்துல வித்தியாசம் தெரிஞ்சுதே. கதை கேட்க ஆரம்பிக்கும்

போது அவ உடம்புல எந்த வாசமும் இல்ல. கேட்க கேட்க கொஞ்ச நேரம் போன பின்னால... அவ உடம்புல இருந்து மஞ்சள் வாசம் வந்துச்சே. அவ பார்வைல அந்த ராத்திரிலயும் துளிர் விடற என்னவோ ரெண்டு பூ தெரிஞ்சுதே.

பெரியவர்கள் தங்கள் வழக்கப்படி பேசுவதைப் பேசினார்கள். கொடுப்பதைக் கொடுத்தார்கள். வாங்குவதை வாங்கினார்கள். சூரியன் வாழ்த்த வந்து கொண்டிருக்கிறது. பனி வாழ்த்தி விட்டு விலகிக் கொண்டிருக்கிறது.

இதயன் பாவமாய் சந்தனாவின் முகத்தை பார்த்தான். அவளும் செய்வதறியாது பார்க்கிறாள். இருவரும் திரும்பி ரத்தனாவை பார்க்கிறார்கள். அவளோ குனிந்த தலையில் பூமியை துளைக்கும் இரு வண்டுகளை இறுக்கி பிடித்துக் கொண்டிருக்கிறாள். கல்யாணத்தை காணும் ஆவலில் சூழ்ந்திருக்கும் கூட்டத்தின் சலசலப்பும் சந்தோஷமும்... குளிரை விரட்டும் சூட்டை வளர்த்திக் கொண்டிருக்கிறது.

ஒரு ராத்திரில ஒரு மூணு மணி நேரத்துல காதல் மலருமா. ஆனால் சொன்ன கதையின்படி பத்து வருடங்களாக அவளை காதலித்து விட்டதாக நம்புகிறான்.

அட கிறுக்கா... நீ சொன்ன ஸீன்ல உறுமன்தான ஹீரோ. ஆமா உறுமன் தான் ஹீரோ. ஆனா அந்த ஹீரோ எந்த தருணத்துல நானா மாறினான்னு எனக்கு சொல்லத் தெரியல. அந்த இடம்தான் காதலுக்கான இடம். அந்த இடம் அவளுக்கும் புரிஞ்சதுனாலதான் இப்படி ஒரு புத்தி மாதிரி உக்காந்துருக்கா. பாரு ஒரு கல்யாண பொண்ணு மாதிரியா உக்காந்துருக்கா.

கண்களாலே இமயனும் சந்தனாவும் அவசர அவசரமாய் பேசிக் கொண்டார்கள்.

முதல் முறையா அவ முகத்துல புது விதமான பாவனை தோன்றுகிறதோ என்று யோசித்துக் கொண்டே இன்னும் கூர்ந்து பார்க்க... அவள் கண்ணில் இருந்து ஒரே ஒரு சொட்டு நீர் விழுந்ததை சந்தனா பார்த்தாள். அந்த நொடி அந்த ஒரு நொடி அவளையே அசையாமல் பார்த்தவளுக்கு விழாமல் கண்களுக்குள்ளேயே போன துளிகள் எல்லாம் புரிந்து விட்டது.

என்ன ஆனாலும் சரி என்று முடிவெடுத்த சந்தனா.... தாலி மாமா கைக்கு போன மறுநொடி... “மாமா ஒரு நிமிஷம்” என்றாள்.

சுற்றி இருந்த எல்லா கண்களும் சிமிட்ட மறந்தன. திக்கென சூழ்ந்த திகைப்போடு சலசலக்க... ரத்தனா மட்டும் முகத்தை நிமிர்த்தி பார்க்காமல் எப்படி அமர்ந்திருந்தாளோ அப்படியே அமர்ந்திருந்தாள்.

சில நொடி அமைதி. இதயம் உடல் முழுக்க துடிக்க உணர்ந்தாள். அம்மா அப்பா உள்பட சொந்த பந்தம் எல்லாரும் சந்தனாவை குழப்பத்தோடு பார்த்தார்கள். அவள் கை அசைவுக்கு சத்தம் போடாத தடுமாற்றம் அங்கே முனங்கியது.

கண்டிப்பா... இவ இதயனை காதலிக்கறா. புரிந்து விட்டது.

மலை உச்சியில் இருந்து சட்டென குதித்தது போல சொற்களை பட்டென்று வீசினாள்.

“மாமா என்ன ஏதுன்னு கேக்காத. அக்கா வேண்டாம். என் கழுத்துல கட்டு...” என்று அருகே சென்று அமர்ந்து விட்டாள். வீடும் ஊரும் சலசலக்க... படித்த பெண்ணின் கை காட்டல் அப்படியே அனைவரையும் பேச்சு இழக்க செய்தது.

ஆட்டை இப்பிடி தொலைச்சிட்டு வந்து நிக்கறியே... என்று வீடே கத்தியபோது அந்த வனாந்தரத்தில் இருளும் ஒளியும் சேர்ந்த அந்தியில் ஒரு கைவிடப்பட்ட பழங்கால சிலை போல அமர்ந்திருக்கிறாள் ரத்தனா. பெரும் அமைதி. தூரத்தில் வானத்தின் சரிவும் பூமியின் உராய்வும் கொண்ட இடத்தில் இருந்து காற்றை பிளந்து கொண்டு ஓர் உருவம் ஓடி வருகிறது. ஓட்டம் பறப்பது போல தெரிகிறது. பூமியின் அதிர்வு அங்கே பெரும் சத்தத்தைக் கூட்டிக் கொண்டே வருகிறது. ஆதி காலத்தில் இருந்து இந்த உலகை பிளந்து கொண்டு உள்ளே வரும் பேரன்பின் மின்னல் அது. திம் திம் என ஒவ்வொரு அடிக்கும் இதயம் கிளை பரப்பி படபடவென ஒரு மரம் பூக்கிறது. அந்த உருவம் உறுமன் என்று புலப்பட புலப்பட கண்ணீருக்கெட்டும் தூரத்தில் அது உறுமன் இல்லை என்று உணர முடிகிறது.

இதயன் அதிர்ந்து பார்க்கிறான். தன் காதலை கெட்டியாக பிடித்துக் கொண்டிருக்கும் அவன் எண்ணங்களில் ஓடையின் சலசலப்பு. அது கானல் இல்லை என்ற நிதானம் நீந்தத் தொடங்குகிறது.

காட்சியை உள்ளம் உணர உணர... மெல்ல விசும்பத் தொடங்கிய ரத்தனா குலுங்கிக்கொண்டே நிமிர்ந்து வானம் பார்த்தாள். மேகமற்ற நீல வானம். வனாந்திரம் பூத்து குலுங்கும் சோலைவனமாக ஆகிறது. எல்லாரும் அவளையே பார்க்கிறார்கள். அவள் கண்கள் இதயனை தீவிரமாக திரும்பி பார்க்க அவன் கண்களிலும் குளம். வேகமாய் எழுந்து நகர்ந்து அவனைத் தாவி அணைத்துக் கொள்கிறாள். அவள் உடல் நடுங்குகிறது.

ஒன்றும் புரியாத கூட்டம் சலசலக்கிறது. சந்தனாவின் கை அசைப்பு... எல்லாரையும் சிலை ஆக்குகிறது. ரத்தனாவை காதலியாக்குகிறது. அது உறுமன் இல்லை. இதயன் என்று உணர்ந்த போது அவள் கையில்...

தொலைந்த ஆட்டுக்குட்டி இருப்பதாக நம்புகிறாள்.

காதல்... சொல்வது தாண்டி கேட்பது தாண்டி உணர்வது.. உணர்ந்தார்கள்.

நான் தான் சொன்னேன்ல என்ற நண்பனை கண்ணீரோடு வழி அனுப்பினாள். அவன் கை பிடித்தபடி டாட்டா சொன்னாள். இருபத்தைந்து வருடங்களாக தன்னை வைத்திருந்த காட்டை விட்டு வெளியேறியவள் கண்களில் முதல் முறையாக சிரிப்பு. அது தான் காதல். பெருங்காதல். தன்னில் இருந்தே கிடைத்த விடுதலை. முழுதாக புன்னகைத்தாள். ஆட்டுக்குட்டியை கீழே இறக்கவே இல்லை. அவன் கைகளில் சேர்த்துக் கொண்டாள்.

ஜென்னும் இல்லை... கஸலும் இல்லை. இம்முறை இதயன் ஓர் ஆதி கவிதையைக் கொண்டு விட்டான்.

✎

முன்னே விரவிக் கிடந்த காட்டை வெறித்து பார்த்த சந்தனாவுக்கு எல்லாமே கனவு போல இருந்தது. என்ன நடந்தது என்று யோசிக்க யோசிக்க கண்களின் ஓரம் ஈரம். அவர்கள் சென்ற வழியையே ஒரு பசி அற்ற பூனையைப் போல பார்த்தாள். அர்த்தங்கள் மாறிக்கொண்டே இருக்கும் வாழ்விது என்பது போல கரும்பச்சை நிறத்தில் கிழக்கின் சிவப்பு பிரபஞ்சத்தைக் கீறிக் கொண்டிருந்தது.

தொண்டைக்குள் சிக்கி இருந்த விசும்பல் அவளை மீறி கொப்பளித்தது. அவள் நின்றிருந்த இடத்திலிருந்து கீழிறங்கும் ஒற்றையடி பக்கவாட்டிலிருந்த கொய்யா மரத்தின் பின்னே மெல்லிசாக எழுதி இருந்த "சந்தனா இதயன்"- ஐ கொண்டை ஊசியால் கிறுக்கி அழித்தாள். மூச்சு வாங்கியது. முகம் கோணியது. இதயத்தில் இருந்து கசியும் சொல்லொணா வலி அவள் காதலை அப்படியே பனி போல மூடியது. தனக்கு படிப்பு கொடுத்த அக்காவுக்கு வாழ்க்கை கொடுக்கறது தான் சரி. சொல்லாமலே போவதில் இந்த காதலின் அழகு மேலே மேலே உயர்கிறது. மரத்தின் கிளையை மெல்ல முட்டிக் கொண்டாள். மனசுக்குள் வேக வேகமாய் குதித்துக் கொண்டிருந்த அருவி சத்தம் அப்படியே அமைதியாகி காடோடை ஆனது.

இப்படியெல்லாம் ஆகுமென்று கதையில் கூட நினைக்க முடியுமா.

ஆழமாய் எழுந்த விசும்பலைக் காற்றோடு விட்டு... கண்களை ஆழமாய்த் துடைத்துக் கொண்டவள்... உறுமனை அணைக்க இயல்பாய் எழும்பிய புன்னகையை உடல் முழுக்க தவழ விட்டு வீட்டுக்குள் நுழைந்தாள்.

இன்றும் கீழ்வானம் சிவந்து கொண்டுதான் இருக்கிறது.

## கண்ணன், தாரமங்கலம்

சிவனடியார் நந்தியைக்
கழுவியபடியிருக்க
விபூதிக்காய் நாங்கள்
வெகுநேரம் நின்றிருக்க
காசுவாங்கிக் கொண்டு
கர்ப்பக்கிரகத்தில் ஒருவருக்கு மட்டும்
பிரசாதம் தரும்
பூசாரியின் கைகளில்
கழுவ முடியாத கறை

✎

எத்தனை பெரிய மலை
எத்தனை சிறிய தூசி நான்

✎


வெளியே கண்பறிக்கும் வெளிச்சம்
உள்ளே சீருடை அணிந்தபடி
ஒப்புட்டு விற்பவளின் முகத்தில்
அத்தனை இருட்டு

✎

இருட்டுக் குளத்தில்
நீராடும் வெளிச்சப் பூக்கள்

✎

குடுவை பத்திரம்
ஓட்டை விழுந்தால்
உயிர் ஒழுகி விடும்.



# சந்திரா மனோகரனின் கவிதைகள்

## வாய்த்தல்

நெடிய காலம் போல் நீண்டுகொண்டே இருக்கிறது
அந்தக் கரு நாழிகை.
கற்றானை போன்ற அவன் neyக்கையில்லை
கற்பலகைகளில் எழுதும் கனவுகளின் தோற்றத்தை
அவன் விரும்புவதுமில்லை
தீப்பொறி முழங்கும் மயில் தோகைக் கண்களின்
இமைகள் பற்றி எரிகின்றன
மினுமினுப்பற்ற தோள்மீது எவரும்
பொருட்படுத்தாத
ஒளி பதுங்கி கொள்கிறது

எது உண்மை...எது தவறு?
அவனுக்குள் இறந்துபோன கேள்விகள்
இன்னும் சிறிது காலத்தில் இந்த உலகம்
கல்மழை போல் உடைந்து விடும்

தெருமுனையில் பேரொலி
மரபு வழி கீச்சுக்குரல்களின் அழைப்பு
குழந்தைகள்..அறிவிலிகள்..பேதைகள்

அடியொத்தகாலத்தில் சுட்டெரிக்கும் சூரியனும்
சிரசை வருடும் வெப்பக்காற்றும்
அவனுக்கு ஏலாப்பு

விரக்தியின் விளிம்பு நிலையில் சிற்றளவு
வாழ்க்கை ஒரு வழுக்குப் பாறை
பாசாங்கற்ற அவன் இதயத்துக்குள்
பொங்கலாடும் மகிழ்ச்சி

வசீகரமற்ற வாழ்க்கையை எப்படியோ
எளிதாக்கிக் கொள்வது மட்டும் சாத்தியம்.

## நிதார்த்தம்

ஆண்மயிலின் நிதான நடை
சுற்றுச்சுவரின் உடம்பில் படர்ந்த
வெண்பூசணிக் கொடியைக் கலைக்கவில்லை

அலையலையாய் எழும்பும்
நீர் வீச்சுக்குள் துள்ளும் மீன்களின்
மார்பகத்தை எந்த வலையும் கிழிக்கவில்லை

அடைக்கலான் குருவிகளின் சிற்றொலி
தீட்டிய கவித்துவத்தை எழுத
எந்தக் கவிஞனும் பிறக்கவில்லை

அடர் நிறத்தில் அலர்ந்த பூக்களின்
தோள் மீது வந்தமரும்
பட்டுப்பூச்சிகளைப் படம் பிடிக்க
எந்தக் கலைஞனும் வரவில்லை


நுண்ணிய இணுக்குகளிருந்து
சொட்டிய நீர்த்துளியில்
நனைய விரும்பும் நங்கையர் எவருமில்லை

வெட்டி வீழ்த்திய இலந்தை
மீண்டும் துளிர்விடுவதைக்
காணக் கண்கள் இல்லை

முட்டி மோதிக் கழுவிய
பாறையின் நெஞ்சுக் குழிக்குள்
ஈரம் கசிவதை
எந்த அலையும் விழுங்குவதில்லை

குப்பை, கூளம், கஞ்சலில்
தாறுமாறாய் முளைத்துக் குலுங்கும்
நித்யகல்யாணியைத் தகர்க்க முடியவில்லை

தோற்பில் பைத்தியமாகும் மனிதன்
மண்ணோடு மண்ணாய் மக்கிப்போவதே
இயற்கையின் நிலைப்பாடு.



# எப்படி வாழ்கிறோம்

இரா.வெங்கடேஸ் குமார்

அண்டம் தோன்றிய காலத்தில் பிண்டங்கள் தோன்றவில்லை பிண்டங்கள் இல்லா இடத்தில் உயிர்கள் இல்லை, உயிர்கள் இல்லாத இடத்தில் வாழ்க்கை என்ற வார்த்தைக்கு இடமுமில்லை. வாழ்க்கை, உயிர், உடல் இவையெல்லாம் உருவாக காரணமே நமக்கும் முன் இங்கிருக்கின்ற அண்டம், அவை உருவாக்கிய சூழ் நிலை அவற்றிற்கு

தேவைப்படும் அற்றல் இவற்றையெல்லாம் நம்மால் பூர்த்தி செய்யப்படும் என்று தான், இந்த தேவையை பூர்த்தி செய்ய மனிதர்க்கு முன்பே பல உயிரினங்களின் வாழ்க்கை முறை தோற்றமைக்கப்பட்டது, இருந்தும் அண்டத்தின் தேவை பூர்த்தியாகாமல் அவை எழுப்பிய கட்டமைப்பு மனிதன்.

நம் பிறப்பு முதல் வாழ்க்கை தொடங்குகிறதா என்று கேட்டால் இல்லை நமக்கு முன் இருந்தவர்கள் கட்டமைத்து வைத்த பாதையின் பாதியில் தான் நாம் பிறக்கிறோம் அந்த பாதையை தொடர்கிறோம்.

அதில் இருக்கும் இடையூறுகள் ஆயிரம் இருந்தாலும் நன்மைகளும் இருக்கத்தான் செய்கிறது, கோடையில் பெய்கின்ற மழை போல்,

மனிதன் பிறக்கிறான், இறக்கிறான் இடையில் வாழ ஆற்றல் தேவை படுகிறது, அதற்காக உண்ண வேண்டும், உணவிற்கு தேவை பணம். ஆனால், உணவு இயற்கையின் படைப்பு, இயற்கைஅளித்த வளத்தை பிரிக்க கிடைத்த வழியும் பணம், மனிதன் என்ற பெயரை எடுக்க காரணமாய் இருந்த மனதை மறக்க வைத்த பொருளும் பணம் தான்.

அங்கு தான் மனித மூளையின் மிக சிறந்த நல்வழிகளும் பிறக்கிறது, அதே சமயத்தில் மனித மூளையின் மிக கொடிய வழிகளும் பிறக்கிறது.

நாம் உண்ணும் உணவு மனிதனால் மட்டும் உருவாக்கப்பட்டவை அல்ல, யார் முதலில் இதை பிரித்தனர்,

இயற்கையின் வளங்கள் எவ்வாறு ஒருவருக்கு உரித்தானதாய் மாறியது, பிரித்த போது அதை தடுக்காமல் ஏன் நின்றிருந்தனர். ஆக அங்கு இருந்த அனைவரும் இயற்கை பிரிக்க ஒற்றுக் கொண்டவர்கள் தான்.

மனிதன் எனும் பரிணாமம் நடந்த போதே இதுவும் நடந்தாகி விட்டது, அதன் வழியில் வந்த நாம் பிரித்தலின் பலனை ஈடு செய்ய ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒரு கருத்தை கையில் எடுக்கிறோம்.

இன்றைய தலைமுறையில் நாம் கையில் எடுத்த ஒரு பிரிவினை பணம்.

பணம் என்ற வார்த்தையை சுத்த தமிழில் குறித்திட முடியாது, தமிழ் மட்டுமின்றி செழித்த பண்பையும், காலம் கடந்த செம்மையும் கொண்ட எந்த மொழியிலும் விளக்கம் இல்லை.

காரணம், பழந்தமிழர்கள் செல்வங்களை வெறும் பொன், பொருள், ஆபரணங்கள் வைத்து மட்டும் அளந்திடவில்லை, மாறாக அவர்கள் வைத்திருந்த ஆநிரைகள், வளம் பெற்ற பசும்பயிர்கள், வறண்டாமல் செழித்து ஓடும் ஆறுகள் என இயற்கை வளங்களால் அளந்தனர்.

செல்வம் என்னும் சொல்லை இயல்பாக கூறினால், தனக்கு மட்டுமின்றி தன் அடுத்த தலைமுறை வாழ ஏற்ற இடமாய் வைத்து விட்டு செல்லும் குறுகிய வளமான இடமே அளப்பறிய செல்வம்.

இன்றைய நிலையில் எல்லா நாடுகளிலும் நாம் பயன்படுத்தும் பொதுப்பெயர் பணம், அந்த பணத்தின் அளவீடுகள் இயற்கையை ஒன்றி இருக்குமா என்று கேட்டால், அது கேள்விக்குறி தான்.

காரணம் இயற்கையின் வளத்தை அழித்து அதை செயற்கை பொருளாய் மாற்றி அதிலிருந்து ஈட்டும் வருவாய் பணம் என்ற பெயரில் மனிதனை இன்று வந்து எட்டுகிறது.

நீங்கள் நினைப்பது சரி தான், பணமும் அடுத்த தலைமுறைக்கு சேர்த்து வைத்து விட்டு போகலாமே என்று, ஆனால் அடுத்த கூறிய தேவை வாழ்வதற்கேற்ற சூழலை அழித்து விட்டோமே.

அத்தனை பணம் இருந்தும் உயிர்காற்றில் துளி வாங்க முடியாவிடில் பணம் வெறும் காகிதம் தான்.

இத்தனை கோவம் பணம் மேலா என்று கேட்டால் இல்லை, பணம் மேல் துளியும் இல்லை, முன்பு கூறியது போல, நிலம் போன்ற இயற்கை வளத்தை பிரித்ததன் காரணம் அனைவரும் சம்மான வளத்தை அனுபவிக்க வேண்டும், விளையும் பொருட்கள் வெவ்வேறு இருந்தாலும் அதை பகிர்ந்து உண்ண வேண்டும் என்ற நோக்கில் தான் பிரித்தனர் மூத்தோர்.

சரி பாதியாய் கிடைத்ததை பிரித்து உண்ணும் பண்பு அவர்களிடம் இருந்தது, தம்மை போன்றே தன் தலைமுறையினரும் நற்பண்புகள் பெற்று இருப்பார்கள் என்று தப்பாய் கணக்கு போட்டு விட்டனர்.

ஒரு நாளில் நடந்த மாற்றங்கள் அல்ல இவை நூற்றாண்டு கால மாற்றத்தின் விளைவு.

மனிதன் மனம் உள்ளவன் தான் என்றால் இன்னாளில் பலர் அந்த பெயரில் அழைக்க முடியாமல் போய் விடுமோ என்ற அச்சம் தான் மனதில் எழுகிறது.

ஒரு மனிதன் துன்பத்தில் இருக்கையில் அவன் பணத்தில் பலம் அறியாமல், நாளை இதனால் வரவு வருமோ என்று எண்ணாமல், ஆயிரம் பிரிவினைகளை கடந்து தம்மை போன்ற ஒரு உயிர் துன்பப்படுகிறதே என்று மனம் எண்ணி விட்டால் அன்று ஒரு பரிணாமம் காண்போம்.

அன்று மனிதனின் வாழ்க்கையை நாம் வாழ்வோம் மீண்டும் ஒருமுறை அதுவரை வாழ்கிறோம் என்று நம்புக் கொள்ளலாம்.

## மகிழை.சிவகார்த்தி

### "அப்பா"

அப்பா
இறந்தும்
வாழ வைக்கிறார்
என்னை!
அப்பாக்களை
பற்றிய
கவிதை போட்டிக்கு
கவிதை அனுப்பியதில்
எனக்கே
முதல் பரிசு!

❦

### "அம்மா"


அம்மாவை
அனாதையில்லத்திற்கு
அனுப்பி வைத்த
ஆசிரியர்
பாடம் எடுக்கிறார்
வகுப்பில்....
அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வமென்று!

### முபாரக் கவிதைகள்

ஒரு கடவுளுக்கு
எத்தனையோ பெயர்கள்,
எத்தனையோ ஆலயங்கள்,
எவ்வளவோ செல்வங்கள்
நிறையக் கடவுள்களுக்கு
பேருமில்லை
கோவிலுமில்லை
ஏனெனக் கேட்க யாருமில்லை,
கடவுளின் நிலையே
இப்படியிருக்கும் போது
கலங்குவதில் என்னயிருக்கிறது...
மனிதா!

❦

கடவுளைப் பற்றி
கவிதையொன்றை கேட்கிறார்கள்,
பார்க்காததைப் பற்றி
எப்படி
எழுத முடியுமென மறுத்துவிட்டேன்,
கண்ணுக்குத் தெரியாத
கிரகங்களைப்
பற்றி எழுதச் சொல்கிறார்கள்,
யூகங்களில்
எழுத முடியாதென
ஒதுங்கிக்கொள்கிறேன்,
பணத்தைப் பற்றி
எழுதச் சொல்கிறார்கள் ஒரு நொடியில் வந்து
மறுநொடியில்
விட்டுப் போவதைப்பற்றி எழுதி
என்ன நிகழப்போகிறதென மௌனமாகிறேன்...
மனிதத்தைப்
பற்றி எழுத கேட்கும் முன்பே
ஓடி ஒளிந்துகொள்கிறேன்!



சி முத்தரசன், அரியலூர்

# தீவிரவாதம்

உடல் வலிகளை மட்டுமல்ல
மனதின் வலிகளையும் கடத்துமாமே
நரம்பு மண்டலம்!
அது செயல் இழந்தது
எப்பொழுது என்று
நினைவில்லை !

துப்பாக்கிக் குண்டுகளும்
ஏவுகணைகளும்
எங்கள் வலிகளையும்
அழும் குரல்களையும்
தின்றுச் செரித்துவிட்டன !

என் கண்கள் என்ன தேடுகின்றன ?
இழந்தவர்களைப் பற்றியா....?
இழந்தவைப் பற்றியா....
என்னிடம் இழப்பதற்கு
இன்னும் உறுப்புகள் இருக்கின்றனவே
என்பதைப் பற்றியா ?
தெரியவில்லை !

இன்று எந்த சொந்தமுமில்லை ...
இந்த மண்ணும் சொந்தமில்லை!
இங்கு மனிதர்களுக்கே
இரக்கமில்லாத போது
ஏவுகணைகள் என்ன செய்யும்?!

பள்ளிக்கூடங்கள் தரைமட்டமாயின ...
பதுங்குக் குழிகள் நிறைந்தே போயின

இம்மண்ணில் தான் இருக்கிறோம்
வரிக் கட்டு என்றார்கள்

இம்மண்ணில் எதற்கு இருக்கிறாய் -
என்று
வரிந்துக் கட்டி வருகிறார்கள் !

சிங்கத்தின் கோரைப் பற்களில்
இன்னுமும் ரத்த வாடை வீசுகிறது ....

ஒரு இனத்தையே கொன்றுப் புதைத்து
பசியாறிக் கொண்டிருக்கிறார்கள்
அதிகார போதையின்
அரசியல்வாதிகள்!

அவர்களிடத்திலேயே
கைக்குலுக்குகிறது!
அண்டை நாடுகளின்
அன்புக் கரங்கள் !

செல்லரித்துப்போன - என்
புத்தகப்பையில்
எஞ்சிய என் எழுத்துக்களை -நீங்கள்
படித்துக் கொண்டிருக்கும் பொழுது
ஏவுகணைக்குள் நான்
புதைந்து விட்டிருப்பேன்

நாங்கள் விதைக்கப்பட்டமோ
புதைக்கப்பட்டமோ
தெரியவில்லை !
நாளை விடிந்தால் - எங்கள்
நாடி நரம்புகள் தான்
உங்கள் தேசத்தின்
எல்லைக் கோடுகள்
என்பதை மறவாதீர்கள்!



# ஆரோக்கிய வாழ்வு பெற 30.ஆரோக்கிய குறிப்புகள்!!

THOGUPPU – R.S.BALAKUMAR.M.A., CHENNAI.

தொகுப்பு : இரா.சீ.பாலகுமார்,MA.

1. பசிக்கும்போது மட்டும் சாப்பிடுங்கள். தாகமெடுத்தால் தண்ணீர் குடியுங்கள். குளிர் பானங்களை தவிர்த்து விடுங்கள்.

2. பசிக்கும் போது பயமில்லாமல் பிடித்த உணவை போதுமான அளவு சாப்பிடுங்கள். பசிக்கும் போது எந்த உணவு சாப்பிட்டாலும் அது இலகுவாக ஜீரணமாகிவிடும். உணவை நிதானமாக மென்று சாப்பிடுங்கள். டிவி பார்த்துக் கொண்டு சாப்பிடாதீர்கள்.

3. தரையில் அமர்ந்து சாப்பிடுங்கள். உங்கள் கை விரல்களால் சாப்பிடுங்கள். கை இல்லாதவர்களுக்குத் தான் ஸ்பூன் தேவை. உங்கள் ஜீரணத்திற்கும் விரல்களுக்கும் தொடர்பு உள்ளது.

4. இயற்கை உணவு மற்றும் பழங்களை தேவையான அளவு எடுத்துக் கொள்ளுங்கள். பதப்படுத்தப்பட்ட உணவுகளையும், குளிர்சாதனப் பெட்டியில் வைத்த உணவுகளையும் தவிர்த்து விடுங்கள். விளம்பரம் செய்யப்படுவதை ஒருபோதும் வாங்காதீர்கள்.

5. பசிக்கும்போது மட்டுமே சாப்பிடுபவர்களுக்கு உடற்பயிற்சி தேவையில்ல.

6. தினமும் முடிந்த அளவு விளையாடுங்கள். விளையாட்டு சிறுவர்களுக்கு மட்டுமல்ல.

7. ஒரு நாளைக்கு 10 நிமிடமாவது தனிமையில் அமைதியாக இருந்து சிந்தியுங்கள். உங்கள் ஆற்றல் வெளிப்படும். அவ்வப்போது மனதுக்குள் சிறிது நேரம் பிரார்த்தனை செய்யங்கள்.

8. டிவி பார்ப்பதை குறைத்துக் கொண்டு நிறைய நல்ல புத்தகங்களைப் படியுங்கள். பிள்ளைகளுக்கு நல்ல நிஷயங்களை சொல்லிக் கொடுங்கள்.

9. குழந்தைகளிடம் Smart Phone களை கொடுக்காதீர்கள். தேவயற்ற விஷயங்களுக்காக Whatsup, Facebook போன்ற சமூக வலைதளங்களில் உங்கள் நேரத்தை வீனடிக்காதீர்கள்.

10. குறைந்தது 7 மணி நேரம் தூங்குங்கள். இரவு 10 மணிக்கு முன் தூங்கிவிடுங்கள். காலை 5 மணிக்குமேல் தூங்காதீர்கள்.

11. தினம் 20 நிமிடங்கள் ரிலாக்ஸாக நடைப் பயிற்சி மேற்கொள்ளுங்கள். (உடற்பயிற்சிக்காக அல்ல மன அமைதிக்காக)

12. உங்களை ஒருபொழுதும் மற்றவருடன் ஒப்பிடாதீர்கள். அவர்கள் பயணிக்கும் பாதை வேறு. உங்கள் பாதை வேறு. அடுத்தவரைப் பார்த்து பொறாமை கொள்வது நேர விரையம். உங்களுக்கு தேவையானது உங்களிடமே உள்ளது.

13. எப்போதும் மனதில் நேர்மறையான எண்ணங்களை மேற்கொள்ளுங்கள்.

14. கடுமையாக உழைக்காதீர்கள். உங்களால் முடிந்த அளவு வேலை செய்யுங்கள். அளவுக்கு மீறி எதையும் செய்யாதீர்கள்.

15. மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசுவதில் உங்கள் சக்தியை வீனாக்காதீர்கள். உங்களைப் பற்றி புறம் பேசப்படுவதை பொருட்படுத்தாதீர்கள்.

16. நீங்கள் விழித்திருக்கும் பொழுது உங்கள் தேவைகளைப் பற்றி நிறைய கணவு காணுங்கள். அதை செயல்படுத்தவும் முயற்சி செய்யுங்கள்.

17. உங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை தானமாக கொடுத்து விடுங்கள். தேவை உள்ளவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

18. கடந்த காலத்தை மறந்து விடுங்கள். முடிந்தது முடிந்தவையாக இருக்கட்டும். நிகழ் காலத்தில் வாழுங்கள். மகிழ்ச்சியும் மன அமைதியும் தானாக வரும்.

19. குறுகிய கால இந்த வாழ்க்கையில் யாரையும் வெறுக்காதீர்கள். வெறுப்பு உங்களை தான் பாதிக்கும்.

20. வாழ்க்கை ஒரு பள்ளிக்கூடம். நீங்கள் கற்றுக் கொள்ள வந்திருக்கிறீர்கள் சிக்கல்களும், பிரச்சனைகளும் இங்கு பாடங்கள்.

21. முடியாது என்று சொல்லவேண்டிய இடங்களில் தயவு செய்து முடியாது என்று சொல்லிவிடுங்கள். இது பல பிரச்சனைகளை ஆரம்பத்திலேயே தீர்த்துவிடும்.

22. வெளிநாட்டிலோ வெளியூரிலோ இருந்தால் குடும்பத்தில் இருப்பவர்களுக்கும், நண்பர்களுக்கும், வேண்டியவர்களுக்கும் அடிக்கடி தொலைபேசியிலோ, SMS மூலமாகவோ தொடர்பு கொண்டிருங்கள். இது உங்களுக்கும் அவர்களுக்கும் மன அமைதியையும், பரஸ்பர அன்பையும் மேம்படுத்தும்.

23. மன்னிக்கப் பழகுங்கள். தேவையான நேரத்தில் தயங்காமல் மன்னிப்பும் கேளுங்கள். உங்கள் மனபாரம் நீங்கும்.

24. 60 வயதிற்கு மேலிருப்பவர்களையும், 6 வயதிற்கு கீழிருப்பவர்களையும் கவனிக்க நேரம் ஒதுக்குங்கள். அவர்களுக்கு உங்கள் அன்பு தான் முக்கியம். பணம் முக்கியமல்ல.

25. அடுத்தவர்கள் என்ன நினைப்பார்களோ என்பதைப் பற்றி ஒருபொழுதும் கவலை கொள்ளாதீர்கள். எப்பொழுதும் உங்களைப் பற்றி நினைப்பது மாற்றவர்களின் வேலையல்ல.

26. உங்கள் நண்பர்களை மதிக்கப் பழகுங்கள். உங்கள் மனதிற்கு எது சரியென்று படுகிறதோ அதை உடனே செய்யுங்கள்.

27. உங்களின் நிறைவேறிய தேவைக்கு இறைவனுக்கு நன்றி சொல்லுங்கள். நிறைவேறாத தேவைக்கு பிரார்த்தனை செய்யுங்கள்.

28. உங்கள் ஆழ்மனதில் இருப்பது சந்தோஷம் மட்டும்தான். அதை தேடி அனுபவித்துக் கொண்டே இருங்கள். அவ்வப்போது உங்களிடம் உள்ள நல்லவைகளை நினைத்து பெருமிதம் கொள்ளுங்கள்.

29. உங்களுக்கு எது சந்தோஷத்தை கொடுக்காதோ, அன்பை கொடுக்காதோ, நிம்மதியைக் கொடுக்காதோ அதை ஒதுக்கி விடுங்கள்.

30. வாழ்க்கையில் எந்த சூழ்நிலையையும் எதிர் கொள்ளுங்கள்.வாழ்கையில் எதுவும் நிரந்தரமல்ல. கவலைகளும் நோய்களும் கூட. சூழ்நிலைகள் கண்டிப்பாக ஒரு நாள் மாறும். படித்ததை பகிருங்கள் நன்றி எழுதியவர் : ஹாஸ்டல் மாப்பிள்ளை.



# ஏண்டி உனக்கு பைத்தியமா என்ன???

நௌஷாத் கான்.லி

அந்த கிறுக்கு பிடிச்ச கல்யாண புரோக்கர் தான் அந்த அப்பன் -ஆத்தா இல்லாத அந்த அனாதை ஹாஸ்டல் மாப்பிள்ளையை தவறுதலா உன்னை பார்க்க கொண்டு வந்தான்னா,அவனை பார்த்ததிலிருந்து கட்டுன்னா அவனை தான் கல்யாணம் பண்ணுவேன்னு அடம் பிடிக்குற??

அவனே நம்ம தராதரம் தெரிஞ்சு சூழ்நிலையை உணர்ந்து தவறுதலா புரோக்கர் கொண்டு வந்துட்டாருன்னு நினைக்குறேன்,உங்க ஸ்டேட்டஸ்க்கு நீங்க பெரிய இடம் பார்ப்பீங்க,வந்த இடத்துல உங்க பொண்ணை பொண்ணு பார்க்க வந்து ஏதோ பிடிச்சு போச்சு ஆனா என்னை மாதிரியான அனாதை ஆசையெல்லாம் நிறைவேறாதுன்னு தெரியும்,இருந்தாலும் உங்க குடும்பத்துக்கு ஒரு வேளை என்னை பிடிச்சா மட்டும் சொல்லுங்கன்னு போயிட்டான்

அவனே அவனுடைய ஆசை நிராசையா போகும்னு நினைக்குறப்பயே நம்ம ஸ்டேட்டஸை புரிஞ்சுக்கோடி.

நீ "ம் " னு சொன்னா அப்பா நூத்து கணக்குல ரொம்ப வசதியான,அதிகம் சம்பாதிக்க கூடிய,அழகான மாப்பிள்ளைய கியூவுல நிறுத்துவார்டி அதை புரிஞ்சுக்காம அந்த அனாதை பய தான் வேணும்னு ஒத்தை காலுல நிக்குறது நல்லவா இருக்கு?


இங்க பாரும்மா நீங்க அனாதைன்னு சொல்லுற அந்த ஹாஸ்டல் மாப்பிள்ளை என்னை பொண்ணு பார்த்திட்டு போனதுக்கு அப்புறம் அவர் இருக்குற ஹாஸ்டல்ல போய் எல்லார்கிட்டேயும் விசாரிச்சிட்டேன்,தண்ணி,சிகரெட்டுன்னு எந்த கெட்ட பழக்கமும் இல்லை.

அம்மா,அப்பா இல்லாததால உன்னையும் -அப்பாவையும் தன்னுடைய அப்பா,அம்மாவ தான் நினைப்பாரு,ஏன்னா குடும்பமே இல்லாதவனுக்கு தான் குடும்பத்தோட அருமை தெரியும்..நிறைய படிச்சு இருக்கார்,திறமைசாலி,நிச்சயம் தன்னுடைய உழைப்பால் ஒரு நாள் முன்னுக்கு வந்திடுவார்...அது மட்டுமில்லாம உன் பொண்ணு சொப்னா அதான் நான் தான், எனக்கு வேற அரைகுறை சமையல் தான் தெரியும் அந்த மாப்பிள்ளை ஹாஸ்டல்ல வளர்ந்ததாலே என் சமையலையும் பெருசா குறை சொல்ல மாட்டார்..

வசதியான மாப்பிள்ளையை கட்டி கஷ்டப்படுறது நல்லதா??இல்லை மனசுக்கு பிடிச்ச நல்ல மாப்பிள்ளையை கட்டிக்கிட்டு உன் பொண்ணு நல்லா இருக்கிறது முக்கியமா?? என்பதை நீயே முடிவு பண்ணிக்கோ அம்மா என்றாள் சொப்னா...

நான் முடிவு பண்ணிட்டேன்டி,எனக்கு என் பொண்ணோட சந்தோசம் தான் முக்கியம் காசு,பணமெல்லாம் அதுக்கு அப்புறம் தான்...இந்த வீட்டுக்கு மருமகன் அந்த ஹாஸ்டல் மாப்பிள்ளைதான் என்றாள் சொப்னாவின் தாய் பல்லவி..

சொப்னா முப்பத்திரண்டு பல்லும் தெரிய ஆனந்தத்துடன் புன்னகைத்தாள்!!



# ஆரணி

**ரகுநாத் வ, மதுரை**

“ஏங்க ஒன்பது மணி ஆரணி பஸ் இங்கதான எனக்கேட்ட தமிழிற்கு ஆமாங்க இங்கதான் வெயிட் பண்ணுங்க என்று கிடைத்தது பதில்”

எந்த ஊருனாலும் டிரெயின்ல போயிரலாம் ‘இந்த ஆரணிக்கு மட்டுந்தான் டிரெயின் பெசிலிட்டியே இல்ல’ என உள்ளூரச் சலித்துக் கொண்டான் தமிழ்

தான் வேலை செய்யும் ஜவுளிக்கடைக்கான பட்டுச் சேலை மாதிரிகளை சேகரிப்பதற்காக மதுரையிலிருந்து புறப்பட்டு ஆரணிக்குச் செல்ல வேண்டிய நிர்பந்தத்தில் தமிழ்

கம்பெனியே டிக்கெட்டை புக் செய்து கொடுத்து போய்வரச்சொல்லி இட்ட ஆணையினை மீற முடியாத ஞாயிறின் இரவு அவனுக்கு

‘திருப்பதி திருப்பதி’ எல்லாம் வாங்க வாங்க என கடைசி அழைப்பினை சத்தமாக கத்திக்கொண்டிருந்தார் பேருந்து நிலைய ஏஜெண்ட்

அப்பொழுதுதான் இது ஆரணி வழியாக திருப்பதி செல்கிற பேருந்து என்பதை உணர்கிறான்.

சீட் நம்பர் என்ன சார் என்றதும் L27ங்க என்றவனிடம் ‘உள்ள நேரா லாஸ்ட்ல போயிருங்க…’ சரியென தலையாட்டியவாறே பேருந்தினுள் நுழைந்து தனக்கான ஸ்லீப்பரை அடைந்ததும் பெருமூச்சொன்றுடன் உள்நுழைகிறான்

இரவு நேரம் எட்டு ஐம்பதை நெருங்கியிருந்தது. பொதுவாக இரவு பதினொரு மணிக்கே உறங்கிப் பழகியவன் ஸ்லீப்பர் பேருந்தினுள் ஒரு பூனையைப்

போல சுருண்டு கிடக்க வீட்டின் பெட்டில் புளகாங்கிதமடைந்த அருமை உணர்கிறான். கைப்பேசி சகிதம் நேரம் கழிய கழிய

பேருந்து நகரத்தொடங்கி ஒரு மணி நேரத்திற்கும் மேலாகிவிட்டது இரண்டு நபர்கள் கொண்ட ஸ்லீப்பரில் தனியாக இருப்பதிலும் ஓர் அலாதியினை உணர்கிறான்

“நல்ல வேளை பக்கத்துல ஆள் இல்லாததுநால பிரச்னை இல்ல, இல்லனா ‘தெரியாத ஒரு நபர்கூட ஒரே பெட்ல…’ உலகம் ஒரு கிராமமா இருக்கலாம் ஒரே வீடா இருக்க முடியாதுல என நினைத்துக் கொண்டிருக்க

இன்னும் கொஞ்ச நேரத்துல திருச்சில யாரும் ஏறலனா அதுக்கப்புறம் எந்தப் பிரச்சனையும் இல்ல என்று நினைத்தவாறே எதிர்சீட்டில் இருந்த தம்பியிடம், தம்பி மார்னிங் எத்தனை மணிக்கு ஆரணி போகும் எனக் கேட்க ‘4மணிக்கு போய்ரும்ணே’ என்று கூறியவனிடம், நீங்க தம்பி,

எனக் கேட்பதற்கு முன்னரே ‘நான் திருப்பதி போறேன்ணே’ என்று கூறிவிட்டு தனக்கான படுக்கைத் திரையினை இழுத்துக்கொள்கிறான் தன்னோட உலகம் வேறு என்பவனைப் போல

தனிமை பேருந்து நிறைய தனிமை பயணத்திலும் தனித்த பேருந்தை பயணம் கொடுமை இதுவே இரயிலாக இருந்திருந்தால் அவனது எண்ணவோட்டம் இரசனையாக தனித்த பயணம் இனிமை என்று இருந்திருக்கும் தமிழுக்கு இரயில் பயணம்அத்தனை பிடித்த ஒன்று ஒரே நகர்தல்தான் ஆனால் இருவேறு துருவங்களை அல்லவா மனம் அடைகிறது என்றவன் எண்ணிக்கொண்டிருக்கையில் இரவு மணி பன்னிரண்டினைக் தாண்டியிருக்கிறது

உறக்கம் வராதவனாய் பிறண்டு பிறண்டு படுக்க வெள்ளைச் சட்டை வெள்ளை

பேண்ட் அணிந்த ஒரு நபர் அருகில் வந்தமர்ந்ததும் திடுக்கிட்டு எழுந்து ‘யாரு சார் நீங்க?’ என்று வினவுகிறான்…

‘தம்பி நான் செகண்ட் டிரைவர்பா’ கொஞ்சம் தள்ளிப்படு என்று கூறிவிட்டு அவனருகில் அவர் படுத்துக்கொண்டார்

தமிழின் முகம் இரவிலும் கருமையடித்ததை போல கசப்பைத் தின்ற பூனையைப் போல மாறுகிறது மூன்று நாற்பத்தைந்திற்கு அலாரம் வைத்தவன் மூன்று

இருபதிற்கே எழுந்து அலாரத்தை அணைத்துவிட்டு ஆரணிக்காக காத்திருந்தான்

சரியாக மூன்று ஐம்பதிற்கு ‘வேக் அப் கால்’ பேருந்திலிருந்து வரவும் ‘முழிச்சிருக்கிறவனுக்கு எதுக்கு வேக் அப் கால்’ என நினைத்தவன்

விரைந்தெழுந்து டிரைவரை நோக்கி நகர ஆரம்பித்தான்

‘பேருந்தே உறங்கிக் கொண்டிருந்தது, தனக்கருகிலிருந்த செகண்ட் டிரைவர் உட்பட…’

அச்சமயம் தனித்துவிடப்பட்ட நகரும் தீவில் நகர்பவனாய், ‘இந்த இரவு தனக்கானது அல்ல’ என்பதைப் போல உணர்கிறான்

டிரைவர் அருகில் சென்றதும் முன்னிருக்கும் கண்ணாடியில் மகாத்மா காந்தி சிலை கடப்பது கண்ணில் பட,

‘சார், ஆரணி என்கிறான்’ இருங்க தம்பி என்று பேருந்தை இடது புறமாக வளைத்ததும் சாய்ந்தவாறே கம்பியொன்றின் கைகளைப் பற்றுகிறான் அது அவனைப் பற்றி சற்று ஆறுதலளித்தது…

சரியாக அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் ஆரணி பழைய பேருந்து நிலையத்தில் பேருந்தினை நிறுத்தி தம்பி இறங்குக என்றதும்

‘முதல் முறையாக ஆரணியில்

கால்பதிக்கிறான் தமிழ்’

யாருமற்ற சாலையில் தனிமையில் அவன் நிற்க எதிரில் புலனாகிறது ஆரணி உங்களை வரவேற்கிறது

தன்னைக் கடத்தி வந்த பேருந்து அவன் படுத்துப் புறண்ட இருக்கை அவனைக் கடந்து சட்டென பறக்கிறது.

# ஞா.சத்தீஸ்வரன் கவிதைகள்

அறைக்கதவுகள் சட்டென
சாத்திக்கொள்ளும்போது
திடுக்கிட்டுத் திரும்புகிறது
நெடுநாளாய் மோனத்தில் இருந்த
புத்தர்சிலை

பாதித்தூக்கத்தில் அழுதபடி விழித்தெழும்
மொழியறியாத குழந்தையைப் போல
புத்தரின் விழிகளில் மிரட்சி

அறை முழுவதும் வியாபித்திருக்கும்
இருளில்
புத்தர் தேடிக்கொண்டிருக்கிறார்
இடையில் அவர் தொலைத்துவிட்ட
காலத்தின் நெடுங்கணக்கை.

ஓ

தவமிருந்து தவமிருந்து சோர்வுற்ற புத்தன்
சற்றே கால்நீட்டிப் படுக்கிறான்
அவன் காலடியில் முளைத்த
வேர்களுக்குள்ளிருந்து
எட்டிப்பார்க்கின்றன ஆதிநிலத்தின்
நினைவுகள்

அசதியில் உறங்கிப்போன புத்தன்
விழித்துப் பார்க்கும்போது
அவன் வனமழிந்து
சுற்றிலும் எழுந்து நிற்கின்றன
கட்டிடங்கள்

மிரட்சியுடன் கண்களைக் கசக்கும்
அவரிடம்
குடியுரிமைக்கான ஆதாரங்களைக்
கேட்கிறார்
அருகிலிருந்த காவலர்
ஆண்டபரம்பரை புத்தர்
ஆதிமுனியான புத்தர்
அகதி புத்தர் ஆகிப்போனார்
இப்போது.

ஓ




பெயரறியாத பறவையொன்று
பாடிச்செல்லும்
மொழியறியாத பாடல்
திசைகளைத் தாண்டி விரிகிறது

மேகத்திரைகளில் இருந்து
கசியும் சொற்சுனை
வெள்ளமென பெருகும்போது
இடிமுழக்கங்களுடன் போர்க்காட்சி நிகழ்கிறது

தாய் மண்ணுக்காகப் போராடும் மக்கள்
ஈழம் பாலஸ்தீனம் என்று
அடையாளங்கள் மாறினாலும்
வேர்களை இறுகப்பற்றியபடி
உயரும் விடுதலைக்கான அவர்களது வேட்கை
நீலவானமெங்கும்
பெயரறியாத வெள்ளைப்பறவையென
பறந்து அலைகிறது

அதன் குருதி வரையும் கோட்டில் சிவந்து
அடிவானம் வெளுத்து
விடியக்கூடும் ஓர்நாள்.



க. புனிதன்

# அரங்கம் மேடை

சினிமா திரையரங்கில்
இடைவெளியில்
விற்கப்படும் உணவு பொருள்கள்
போல வாழ்க்கை மதிப்பு மிக்கது
சினிமா பார்ப்பது போல்
நம் கனவுகள்
அதை விட முக்கியமானது
திரையரங்கின் ஒளி அமைப்பு
போல்
நம் எண்ணங்கள் மதிப்பு மிக்கது
திரையரங்கம் ஒலி அமைப்பு போல்
நம் நடனம் மதிப்பு மிக்கது
திரையரங்கம் கை தட்டல் போல
நம் கவிதை சொற்கள்
மதிப்பு ஆனது
திரையரங்கம் விட்டு வெளியே
வந்தும்
திரைக் கதையும்
இடைவெளியில் சாப்பிட்ட
தேநீரின் சுவை மிச்சமும் தான்
நம் அழகிய நினைவுகள்.

வி.அபிவர்ணா, முல்லைத்தீவு

# சேமிப்பு

கோயில் திருவிழாவில்
விற்கப்படாத மிட்டாய்கள்
வீட்டுப்பானையில் நிரம்பி வழிய
அம்மாக்கு குளிர்த்தி பூச்சி விரட்டும் வேலை
கூடியது.

அம்மா வாங்கோ
ஐயா வாங்கோ
அக்கா வாங்கோ
என்றெல்லாம்
கூப்பிட்டு விற்கப்பட்ட அப்பாவின் குரல்
விழித்திருந்த நித்திரையுடன்
நாளைக்கு தயாராக

நானும் தம்பிகளும்
ஆசைக்கு உண்டு பார்க்க
முந்தானை பிடித்து
தொங்கி கிடக்கின்றோம்.

இனிப்பு தின்றால் பல் குத்தும்
என்று
வருமானம் காக்கின்றாள்
அம்மா
சோற்றுக் கோப்பையை நீட்டியபடி.

அருணோதயா

பிணவறையின்
சடலங்களென
உடல் கிழித்து
உள்ளூறுப்பெடுத்து
ஆராயப்படுகிறது
ஒவ்வொரு கவிதையும்;
இரவுநேர
கலவியொன்றைப் போல
அவ்வளவு எளிதன்று
இவ்வாழ்வு.
நடைமுறையில்
உறக்கங்கள் களைத்த
இரவொன்றில்;
மிகச்சாதாரணமாய்
மையமிட்டுக் கொண்ட
கவிதையைப் போலவே
அருவமாய்
மரணித்துப் போகும் இவ்வாழ்வு

செ.நாகநந்தினி

# பழிக்குப் பழி


உருகிக்கொண்டிருக்கின்றன/
சிண்ட்ரெல்லாவின் காலணிகளை ஒத்த/
பனிப்பாறைகள்/

பாகன் மீதமர்ந்து சவாரி செய்யும் யானையென/
உருகி ஓடும் பனி மீதமர்ந்து/
பயணம் செய்கிறது இயற்கை/

பயணத்தின் ஒவ்வொரு நிறுத்தத்திலும்/
வெள்ளத்தையோ நிலச்சரிவையோ/
மூழ்கிய தீவையோ/
இறக்கிவிட்டுச் செல்கிறது/

இழைக்கப்பட்ட துரோகத்தால் வந்த/
ஆத்திரத்தின் கிலோமீட்டர் வேகத்தில்/
நகர்ந்து செல்லும் இயற்கை/
சில்லறைகளென/
சூழலியல் அகதிகளை அள்ளிச் செல்கிறது/
பேரிடர் என்னும் பழிக்குப் பழியில்/





# மாலதி இராமலிங்கம் கவிதைகள்:

### எரிதழல்

அண்டப் பெருவெளியில் அகிலம் உருபெறவே
தண்பெயல் தழுவுமுன் தழல்தானே தகித்தது!
வறியோரைத் துஞ்சவிடா வயிற்றின் தீத்திரளோ
பிறிதோர் எரிதழலாம் புவியிலே இரண்டாவது!

### காதல் பிரிவு

பூகோளமே கைப்பிடியில்
இருப்பதாய்ப் பூரித்தவன்!
விழிக்கும் விரல்நுனிக்கும்
எட்டாமல் போனதேனோ?

### மண் அடுப்பு

எரிவதும் புகைவதுமான ஏழைகளின் மண்ணடுப்பு!
எரிகின்ற வயிற்றுலையை அணைக்கும் பொருட்டு!

### பசி

வறியோர்கள் எந்நாளும் விரும்பாத உண(ர்)வு!
வறுமையால் எளியோர்க்குத் தீர்விலா நோவு!
வளமுள்ளோர் நாடும் விருந்தோடே உண(ர்)வு!
வட்டிலிலே இருந்தாலும் உண்ணவியலா நோன்பு!

ஸ்ரீவி.முத்துவேல் துபாய்

# ஆடித் தள்ளுபடியில் நிலா...

தாமரைத் தண்டில் பிறக்கும் நூலைத்
திரித்து திரித்து உருவாக்கும்
கயிற்றை இழுக்கும் போட்டி
நடுவாரக நிற்கும் நிலா
மகிழ்ச்சியூட்டும் பெண்நட்சத்திரங்கள்

ஒரு முனையில்
தனியாக களம்காணும்
அத்திபழ வெறியன்

இன்னொரு முனையில்
ஏபிசி பழரச விரும்பியவளோடு
சேர்ந்திழுக்கும் தென்றல்

வேகமாய் சாய்ந்து விழும்
தோல்விக்கரங்களுக்கு வெற்றிப்பரிசாய்
மாவிளக்கவள் சுமக்கும் பூச்செண்டுகள்

வேடிக்கை பார்த்து
வியர்த்து போன நிலா
ஓடி வந்து ஒட்டிக்கொள்கிறது
மீதமிருக்கும் முதுகில்...

ஐ.தர்மசிங், நாகர்கோவில்

# மனதின் நகல்

ஒரே திசை அது
ஒரே நேரம் அது
ஒரே காட்சி அது

அவனும் நானும்
இவனும்
ஒரே மாதிரிதான்
பார்க்கிறோம்

அவன் ஒன்றைக் காண்கிறான்
நான் ஒன்றைக் காண்கிறேன்
இவன் ஒன்றைக் காண்கிறான்

அவனுக்குத் தெரிந்தது
எனக்குத் தெரியவில்லை
எனக்குத் தெரிந்தது
இவனுக்குத் தெரியவில்லை

ஒரு காட்சி எப்படி
மூன்றாக
திரும்ப முடியும்

ஒவ்வொருப் பார்வையிலும்
வெளிப்படுவது
அவரவர் மனதின்
நகலாக இருக்கலாமோ?



### பிரபா அன்பு

இந்த மண் எங்களின்
சொந்த மண்
முப்பாட்டன் ஆண்ட
இயற்கை செழிக்கும்
வீரமும் தியாகமும் நிறைந்த மண்

இந்நிலம் தாண்டி
வேறெந்த நிலத்தையும்
நாம் நேசியோம்

இது
புராணக்கதைகளில் உருவாகிய
நிலமல்ல
ஆண்ட பரம்பரை நாம்
பிறந்து வளர்த்த நிலம்

அன்று
எங்களுக்கென்றொரு
எல்லை இருந்தது
எங்களுக்கென்றொரு தனித்துவம்
இருந்தது
எங்களுக்கென்றொரு
சுதந்திரம் இருந்தது

அங்கே
தொட்டால் சிணுங்கியும்
கள்ளிச்செடியும்
நாயுண்ணிப் பற்றையும்
செழிப்புற்றுத்தானிருக்கும்


பால்மணிக்கதிர்கள் தள்ளும்
பருவத்தில்
முத்தையன்கட்டு வயல் வெளிகளோடு
பயணித்துப் பாருங்கள்
தாய் மடியின் சுகம் கிடைக்கும்

பொன்னாவரசு பூத்திருக்கும்
விசுவமடுவும்
அச்சுவேலி கதலி வாழை இனிப்பும்
மன்னார் கட்டுக்கரைக் குளத்தின்
வெள்ளலையின் நுரைப்பூக்களும்
தருவதோ கோடி சுகம்

இந்த மண்ணில்தான்
பல்லாயிரம் உயிரற்ற உடல்களையும்
கொத்துக் குண்டின் சிதறல்களையும்
எரிந்த மரங்களின்
எச்சங்களையும் கண்டோம்

புலம்பலில் இருந்து
ஆரம்பமாகும்
சுதந்திர ஆசைகளிற்கு
வசந்த கால மேகங்கள்
என்றோ ஒரு நாள் பூச்சொரியும்

இவை நாளும்
அல்லற்பட்டு ஆற்றாது
அழுத கண்ணீர் அன்றே.....



சே கார்கவி கார்த்திக்

# மனிதம் பிறக்க முளைத்த பிசாசு உறுப்புகள்

அகமெனும் எனது ஒழித்து வைத்த
கருப்பொருளின் நிறமென்னவோ கருமைதான்
கரும்பிண்ட கைகளும் கால்களும்
வெளிர் நீத்த ஒளியைப் பற்றிய
தள்ளு முள்ளாடுகிறது
ஒரு இரவில்.....

அவைகளுக்கு இரண்டே இரண்டு குருட்டுக்
கண்களும்
எலும்புடைந்த இரண்டோ அதற்கு மேலோ
கைகளும் காலும் முளைத்திருந்தன

முழுதும் வெட்டப்படாத கோர முடிகளும்
நகமுனைகளும்
மூக்கு நீட்டியும்
பற்களிழித்தும் காட்சியமைத்த
கோரமுகமும் பதிவுற்றிருந்த்து

தனக்குத்தானே கிழுத்துண்ணும்
பிசாசின் நாவினைக் கொண்டு
கடித்துக் குதறி
இப்போதைக்கு குருதியாறு ஓடத்துவங்கியிருந்த்து

திடிரென முளைத்த இரண்டு கால்களும் கைகளும்
பேயென
திரைகிழித்து வெளியேற
சட்டெனக் களைகிறது கனவு
ஆனாலும்
இதுவரை பிசாசுகளின் நிழலில் தான்
மனிதனாய் நடமாடி திருந்திருக்கிறேன்
பாதச்சிவடுகளில் குருதிச் சுவடுகள் படியும் படி

மீண்டும் உறங்கிடத்தான் இனி தோன்றவில்லை
மனிதனாய் எனது மனிதம் விழித்துக் கொண்டதால்
என்னவோ...!

# கோவை ஆனந்தன் கவிதைகள்

கல்யாண வீடோ
சடங்கு வீடோ
எல்லா இடத்திலும்
வாசமாகத்தான் இருக்கிறது
எங்கோ மலர்ந்து
யாரோ பறித்த மலர்கள்

ஆற்றில் எழுந்தருளும் போதுதான்
சாக்கடைத் தொழிலாளியின்
வலிகளும் புரிந்தது
கடவுளுக்கு

ஆற்றங்கரை மணலில் அமர்ந்து நிலாச்சோறு
உண்ட தாத்தாவும் பாட்டியும்
பழமை மாறாமல்
இன்றும் சாப்பிடுகிறார்கள்
ஆற்றுக்குள் கட்டிய அடுக்குமாடி குடியிருப்பினுள்
எட்டிப்பார்க்கும் சித்திரை நிலவைப் பார்த்து


மனிதர்களுக்கென்றோ
மிருகங்களுக்கென்றோ
தனித்தனி பாதைகளில்லாத அடர்வனத்துக்குள்
ஒன்றுக்கொன்று நேரில்
சந்திக்காதவரைதான்
மனிதர்களென்ற கர்வமெல்லாம்.

செடியொன்று துளிரும்போதுதான்
அமைதியாயிருந்த
நாவுகளும் கடும் வறட்சியின் துயரத்தையே
முணுமுணுக்கின்றனர்

கிளையிலிருக்கும் போது கிடைக்காத சுதந்திரத்தை
அணுவணுவாய்
அனுபவித்து பறக்கிறது
எல்லா மரங்களிலிருந்தும்
உதிர்ந்த இலைகள்

கோவிலிலிருந்து
வீடு திரும்பிய பிறகுதான்
கடவுளும் செவி மடுத்து அமைதியாகக் கேட்டுக்
கொண்டிருக்கிறார்
சுடர்விடும் தீபங்களின் பிரார்த்தனைகளை….

மழைத்துளிகளின் அருமையறியாத அடுக்கங்களின்
ஜன்னல் கம்பிகளில்
விடிய விடிய விடாமல் பெய்த
அடைமழையின் துளிகள்
தொங்கிக் கொண்டிருக்கிறது
திரைகள் விலக்கி நலம் விசாரிக்கும் வரை.



**ஆசு (ஆசு சுப்பிரமணியன்)**

English by Latha Ramakrish nan


*விரல்கள் பிடித்து*
*விளையாடியப் பொழுதுகள்*
*விடிந்துக் கொண்டே இருக்கின்றன*
*பொழுது அடங்குவதற்குள்*
*அடிவானத்தைத் தொடவேண்டும்*
*உன் நிழல் போதும்*
*வானத்தின்*
*சிறகுகள் விரித்துப் பறக்க*
*விரல்களை விட்டு விடாதே*
*என் வெளிச்சம் அவை*
*இப்போது ,*
*என் பாதை தெளிவாகத் தெரிகிறது*
*அப்பா*
*ஆசு (ஆசு சுப்பிரமணியன்)*
***24.3.2019***

*Times when with fingers entwined we played*
*keep dawning into days*
*Ere the Time turns still*
*should touch the horizon at will*
*Suffice the shade you provide*
*to spread my wings and fly high*
*Don't release my fingers please*
*They are my very light; brilliance*
*Now I see my path crystal clear*
*My Father.*

*English by Latha Ramakrish nan*

*தமிழிலிருந்து ஆங்கிலத்தில்:அநாமிகா ரிஷி(லதா இராமகிருஷ்ணன்)*

★




Shailaja Gaanguly

தமிழில்: 'ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா' (நொய்டா)

## WORD GAME

*For those wobbly*
*baby fingers*
*alphabets were lifeless*
*squiggles*
*now slim, now curved*
*born of that painful*
*pressure*
*of a relentless, pushy*
*larger hand*
*the protruding veins*
*proclaiming its age*
*manouevring a pink*
*palm*
*down a blank page...*
*It needed pimples, periods, disturbing*
*dreams and a jumpy kaleidoscopic heartbeat*
*to pump colour, pulse*
*import, into those dry stacks of*
*vocabulary*
*stuck in a red-faced*
*throat*
*But the new spring lent*
*its voice*
*to a word called 'desire'*
*sneaked a caress into*
*'sensuous'*
*gifted a blush to 'dawn 'a*
*lilt to 'melody'*
*and a secret tear,a hidden*
*sigh*
*to a simple term spelt*
*'memory'...*
*Waves rose and fell, tides*
*climbed higher*
*The moon glittered,*
*stars shone brighter*
*while a big world shrank*
*grew smaller, tighter*
*Till suddenly the grammar stumbled*
*a composition crumbled, and went off- tune*
*When that hoarse silence sucked in every sense*
*every moment became*
*a*
*long*
*sentence!*



# வார்த்தை விளையாட்டு

அந்தத் தடுமாறும்
பிஞ்சு விரல்களுக்கு
அரிச்சுவடி எழுத்துகள்
உயிரற்ற கிறுக்கல்களாகத்
தோன்றும்.
இப்போது மெல்லியதாக,
இப்போது வளைந்து,
ஒரு நெட்டித் தள்ளும்
பெரிய கையின் வலி நிறைந்த
அழுத்தத்தால் பிறந்தவை.
புடைத்திருக்கும் ரத்தக் குழாய்கள்
தம் வயதைப் பறை சாற்ற,
ஒரு காலிப் பக்கத்தின் மீது
ஒரு இளஞ்சிவப்பு உள்ளங்கையை வைத்துக்
கொண்டு....
அதற்குத் தேவை முகப்பருக்கள், மாதவிடாய்,
கலவரமூட்டும் கனவுகள்,
சிவந்த முகங்கொண்ட ஒரு
தொண்டையில் சிக்கிய காய்ந்த சொற்களின் மீது
வண்ணத்தையும்,
நாடித் துடிப்பையும்
பம்ப்செய்யும்
துள்ளும் கலைடோஸ்கோப் மாதிரியான இதயத்
துடிப்பு.
ஆனால் இந்தப் புதிய வசந்தம்
“ஆசை” என்ற சொல்லுக்குத்
தன் குரலை ஈந்தது;
“உணர்வுபூர்வமான” என்பதில் ஒரு வருடலைத்
திருட்டுத்தனமாகப்
புகுத்தியது;
“விடியலு”க்கு ஒரு கன்னச் சிவப்பைப்
பரிசளித்தது;
இனிய “மெட்டு”க்கு ஒரு சந்தம்,
அத்துடன் “நினைவு” என்றெழுதப்படும் ஒரு எளிய
சொல்லுக்கு
ஒரு ரகசியக் கண்ணீர்த்துளி,
ஒரு மறைவான பெருமூச்சு.
ஒரு பெரிய உலகம் சுருங்கி,
சிறியதாகி, இறுகியபோது
அலைகள் எழுந்தன, வீழ்ந்தன.
கடல் மட்டம் மேலும் உயர்ந்தது.
நிலவு பளபளத்தது;
விண்மீன்கள் அதிகம் பிரகாசித்தன.
இலக்கணம் திடீரெனத் தடுமாறி, ஒரு இசைக்
கோர்வை
நொறுங்கி இசைக்கு வெளியே சென்றுவிட்டது.
அந்தக் கரகரத்த மௌனம்
எல்லா உணர்வுகளையும்
உள்ளே உறிஞ்சியபோது
ஒவ்வொரு கணமும்
ஒரு
நீண்ட
“சென்டென்ஸ்”
ஆயிற்று.